

கல்கி
KALKI 5.2.95
ரூ. 3.00
உதயட் பாடிய
க்
சாக்ஸ..போன்!



இரண்டு நாட்கள் சென்னையைக் கலக்கியது அர்ஜுன் - வாழப்பாடி கூட்டணி. அப்போது தான் அர்ஜுன்சிங் கட்சியை விட்டு நீக்கப் பட்டார் என்பதால், இந்தச் செய்திகளுக்கு இரண்டு பகுதிகள் : நீ.மு.; நீ.பி.!

வந்தார் அர்ஜுன்!

பகுதி - 1 (அர்ஜுன்சிங் நீ.மு.)

●● விமான நிலைய வரவேற்பு, உண்மையிலேயே அசத்தி விட்டது. அர்ஜுன்சிங் நிச்சயம் பிரமித்துப் போயிருப்பார். தனது ஐந்தரை வருட கால தலைமைப் பொறுப்பில், கணிசமான காங்கிரஸ்காரர்களை தன்பால் ஈர்த்துக் கொண்டுள்ளார் வாழப்பாடி என்பது பளிச்சென்று தெரிந்தது.

●● சில முக்கியஸ்தர்களை விமான நிலையத்தின் உள்ளே அனுமதிக்காததால், 'ஜெயலலிதாவின் ஊழல் போலீஸ் ஒழிக' என்ற கோஷம் அதிர வைத்தது.

●● எல்லா மாவட்டங்களிலும் இருந்து தொண்டர்கள் வந்தது குறிப்பிடத்தக்க அம்சம். அதிலும் சிலர் குடும்பத்துடன் வந்திருந்தார்கள்.

மஞ்சள், பச்சை, வெள்ளை கலந்த தொப்பியுடன் காட்சியளித்த அர்ஜுன்சிங், வேடிக்கை பார்க்க வந்திருந்த சிறுவர்களையும் கவர்ந்தது குறிப்பிடத்தக்க விஷயம்.

●● ஏர்போர்ட்டுக்கு எதிர்ப்புறம் போடப்பட்ட மேடை செண்டிமெண்ட் மேடை. 1989ல் த.நா.கா. தலைவராக வாழப்பாடி நியமிக்கப்பட்ட போது, அதே திடலில் தான் வரவேற்பு அளிக்கப்பட்டதாம். "தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவேன் என சூளுரைத்து செயல்படுத்தினார் தலைவர். இப்போது ஜெ ஆட்சியை வீழ்த்துவேன் என்று சொல்லியிருக்கிறார். நிச்சயம் நடக்கும்" என்றார் தொண்டர் ஒருவர்.

●● அர்ஜுனை வரவேற்றுப் பேசிய தண்டாயுதபாணி, அவரை மகாபாரத அர்ஜுனனுக்கு ஒப்பிட்டுக் கொண்டிருந்தார். அந்தச் சமயம் பார்த்துத் தானா மின்சாரம் காலை வார வேண்டும்?

●● விமான நிலைய வரவேற்பு முடிந்த பின்னர் ஸ்ரீபெரும்புதூர் பயணம். சோனியாவின் 50 அடி உயர கட்அவுட்டும் பக்கத்தில் ராஜீவின் மார்பளவு கட்அவுட்டும் அனைவரையும் வரவேற்றன. சர்வமதப் பிரார்த்தனையின் போது அந்த மௌனமான சூழ்நிலையில் திடீ



• விழா மேடையில்...

கொப்பளிக்கச் சொல்லியதை அருகிலிருந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார் அர்ஜுன்.

பகுதி - 2
(அர்ஜுன் சிங் நீ.பி.)

றென்று ஒரு காங்கிரஸ் தொண்டர், பாதுகாவலர்களைக் கடந்து வந்து அர்ஜுன் காலில் விழ, காலை இழுத்துக் கொண்டார் அர்ஜுன். பாதுகாவலர்கள் ஒரு நிமிஷம் ஆடிப் போய் விட்டார்கள்.

●● 'தலைவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு எதிரில் 'This tree was planted by Chief Minister Jayalalitha' என்ற அறிவிப்புப் பலகையோடு ஒரு மரம். "ராஜீவின் தியாகத்தைக் குறைத்து மதிப்பிட்ட அந்த அம்மாவால் நடப்பட்ட மரம் இங்கே இருக்கக் கூடாது. முதல்ல எழுதி வைக்கப்பட்டிருக்கும் அந்தப் பலகையை எடுங்கப்பா'' என்ற குரல் கொடுத்தார் ஒரு தொண்டர்.

●● "வர்மா கமிஷனால் சுட்டிக்காட்டப்பட்ட அதிகாரிகள் மீது உடனே நடவடிக்கை எடுங்கள். ராஜீவ் சிந்திய ரத்தத்தால் சட்டமன்ற உறுப்பினர் ஆனவன் நான். அந்த அடிப்படையில் கேட்கிறேன். நடவடிக்கை தாமதப் படுத்தப்பட்டால் உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யத் தயங்க மாட்டேன்" என்று ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் வரதன், உணர்ச்சி

●● திருப்பதி யாத்திரை முடித்துக் கொண்டு வந்த கையோடு அந்த அதிர்ச்சியான செய்தியும் வந்தது. ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர் சந்திப்பு, திடீர் பரபரப்பாகி விட்டது. ஆனால் அர்ஜுன்? ராவுக்கு சரியான உடன்பிறப்பாக இருப்பார் போலிருக்கிறது. அவரைக் கோபப்படுத்தக் கேட்கப்பட்ட கேள்விக் கொக்கிகள் எல்லாம் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டன. மனிதர் ரொம்ப அழுத்தம்.

●● மாலை வாழப்பாடியின் 56-வது பிறந்த நாள் விழா. சமீப காலங்களில் காமராஜ் அரங்கம் நிறைந்து கூட்டம் வெளியேயும் பிதுங்கிய நிகழ்ச்சி இது ஒன்றாகத்தான் இருக்க முடியும். 'அர்ஜுன் சிங் நீக்கம்' பற்றிய செய்தியால் காங்கிரஸ் அன்பர்கள் ஏக டென்ஷனில் இருந்தார்கள்.

●● புஷ்பவனம் குப்புசாமி தமது பாணியில் வாழப்பாடியைப் பற்றி பாட்டுப் பாட, அந்த கிராமிய மெட்டுக்கு காங்கிரஸ் 'தாத்தாக்கள்' ஆடிய ஆட்டம் சூப்பர். அர்ஜுனும் வாழப்பாடியும் வாய் விட்டுச் சிரிக்காத குறைதான். இளசுகள் சளைத்தவர்களா? பாட்டு முடியும் வரை ஆட்டம் தான்.


●● அர்ஜுனுக்கு ஆதரவாக அரங்கத்தில் உள்ளவர்களை கையை உயர்த்தச் சொன்னார் வாழப்பாடியார். அப்போது ஒரு தொண்டர் 'நரசிம்மராவ் ஒழிக' என்று கோஷம் போட்டார். அதைக் கேட்ட வாழப்பாடி கோபத்தோடு 'சும்மா இருய்யா' என்று அதட்டல் போட்டார்.

●● இரண்டு நாட்களில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளில், 'காங்கிரஸின் பெருமை; ஒற்றுமை காக்க வேண்டிய அவசியம்' என்று வெஜிடேரியனாகப் பேசி வந்த அர்ஜுன், கட்சியை விட்டு நீக்கப்பட்ட நிலையில் பேசுகிற முதல் நிகழ்ச்சி என்பதால் 'பொங்கி எழுவார்; பிரதமரை கடித்துக் குதறுவார்' என்று எதிர்பார்த்தவர்கள் மீண்டும் ஏமாந்தார்கள். நறுக்கென்று நாலு கொட்டு தலையில் வைத்தால் கூட, மனிதர் யோசித்து விட்டுத்தான் 'வலிக்கிறது' என்பார் போலிருக்கிறது. அவ்வளவு ஜாக்கிரதை. 'அதிரடி' வாழப்பாடிக்கு ஏற்ற தலைவர்தானா அர்ஜுன்?

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

TV '95





• பால. கைலாசம்

நமது டீ.வி. நாடகங்கள் பலவற்றை பக்கத்து அறையில் வேலை செய்தபடி, வெறுமே கேட்டாலே போதும்; பார்க்காமலே அவற்றின் கதை(!) நன்றாகப் புரிந்து விடும். ஏறத்தாழ ரேடியோ நாடகங்கள் மாதிரிதான் அவையும்! சின்னத் திரை நிகழ்ச்சிகளுக்கு ஒரு தனிச்சிறப்பு வேண்டாமா?

கேள்வியை பால. கைலாசத்திடம் எழுப்பினோம். (டைரக்டர் கே.பி.யின் மகன்) இவர் திரைப்படம் மற்றும் வீடியோ படங்கள் தயாரிப்பில் பட்ட மேல் படிப்பை அமெரிக்காவில் ஐயோவா ப. கழகத்தில் முடித்தவர். 'வாஸ்து மரபு' 'வெளி' போன்ற கலை நுணுக்கம் மிக்க திரை, வீடியோ படங்கள் எடுத்தவர்.

"சின்னத் திரைக்கென்று தனியான இலக்கணம் கிடையாது. சினிமாவில் எப்படி எப்படியெல்லாம் கதையை வெளிப்படுத்த முடியுமோ அத்தனை வகைகளிலும் சின்னத் திரையிலும் காட்டலாம் - இசை மூலமாகவும் காமெரா ஆங்கிள் மூலமாகவும் உணர்ச்சிகளின் வேறுபாட்டை உணர்த்தலாம்" என்றார் கைலாசம்.

"ஆனால் நம்ம டீ.வி. நிகழ்ச்சிகள் பெரும்பாலும் இப்படி இருக்கிறதில்லையே; ஏதோ மேடை நாடகம் பார்ப்பது போல்தானே இருக்கிறது?"


"வீடியோவை கலை உணர்வோடு பயன்படுத்தக்கூடிய நபர்கள் நிறைய இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வாய்ப்பு தரப்படுவதில்லையே! நம்ம அரசாங்கம் திரைப்பட இன்ஸ்டிடியூட் ஆரம்பித்து மாணவர்களைத் தயார் பண்ணி, கடைசியில அவங்களுக்கு வேலை தராமல் வைச்சிருக்கு..."

"தனியார் தயாரிக்கும் தொடர் நிகழ்ச்சிகள் கூட, ஒரே மாதிரியான pattern-ஐப் பின்பற்றிப் போகின்றன; எக்கச்சக்கமான சினிமா திணிப்பு வேறு..."

"முதன் முதல்ல, அமெரிக்க சோப் கம்பெனிகள்தான் சென்டிமென்ட் ததும்ப ததும்ப டீ.வி. தொடர்களைத் தயாரிக்க வைத்து ஸ்பான்ஸர் செய்தன. இதனால் இந்த மாதிரியான நிகழ்ச்சிகளுக்கு 'Soaps' என்றே பெயர் வந்து விட்டது. நம்ம 'ஜுனூன்', 'சட்டம்' போன்ற தொடர்கள் இந்த வகையில்தான் சேர்த்தி. 'அடுத்து என்ன? அடுத்து என்ன'ன்னு சின்ன சஸ்பென்ஸ் வைத்து கொக்கி போட்டு ரசிகர்களை இழுத்துக் கட்டிப் போட்டுடும். கலைரீதியாக, பிரமாதமா எதுவும் இருக்காது. இதில் வேடிக்கை என்னவென்றால், நம் சினிமாக்களே

சினிமா காலில் விழும்

சின்னத்திரை!



"பர்ஸ்ல அட்ரஸ் வைத்துக் கொள்வது பெரிய தப்பு!"

"ஏன்...?"

"பிக்பாக்கெட் அடிச்சவன் பணம் இல்லேன்னா தேடி வந்து உதைக்கிறான்!"

— தேனி. எஸ். மாரியப்பன்

இந்த 'சோப்' ஃபார்முலாவுக்குப் பொருந்தி வர்ற சென்டிமென்ட் களஞ்சியங்கள்தான். அதனால்தான் பெரும்பாலான சினிமாக்கள் ஏதோ டி.வி.க்காகவே தயாரிக்கப்பட்டது போல் தெரியும். ஆனால் சினிமா நிகழ்ச்சிகள் தூக்கலாக இருக்கிறதுக்கு உண்மையான காரணம் என்னன்னா, நிகழ்ச்சி தயாரிப்பாளர் அதிக சிரமப்படாமல், சினிமா தயாரித்தவரிடம் பேரம் பேசி ஒரு திரைப்படப் பகுதியையோ, பகுதிகளையோ வாங்கிட முடியுது. சினிமா நிகழ்ச்சிகளைத்தான் மக்களும் அதிகமா விரும்பறாங்க என்கிறதால அவருக்கு ஸ்பான்ஸரும் சுலபமா கிடைச்சுடுவாங்க."

"இதைவிட சிறந்த டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கக் கிடைக்காததால டி.வி. ரசிகர்களும் இவற்றையே நல்ல நிகழ்ச்சிகளாக நினைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது இல்லையா?"

"நிச்சயமாக இருக்கிறது. அதனால்தான் சாடிலைட் டெலிவிஷனைக் கூட ஒரு வகையில் வரவேற்கலாம்னு சொல்லுவேன். ஸ்டார் டி.வி. சாகசங்களை மக்கள் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்கன்ற எச்சரிக்கை உணர்வுலதானே இன்னிக்கு தூர்தர்ஷன் நிகழ்ச்சிகளில் கூட மாற்றம் புகுத்தற முயற்சி தொடங்கியிருக்கு..."

"அயல்நாட்டு டி.வி. நிகழ்ச்சிகள் எப்படி...?"

"அமெரிக்காவில் இருந்த போது ஆறு மாதங்களுக்கு, தினமும் எட்டு மணி நேரம் டி.வி. பார்த்தேன். அப்படிப் பார்த்த நிகழ்ச்சிகளில் நான்கைந்துதான் மிகச் சிறப்பாக இருந்தன. அங்கு 'பாப்புலர்' என்று சொல்லப்பட்ட நிகழ்ச்சிகளின் தரம் ரொம்ப சுமாராகத்தான் இருந்தது. அதனால் டெலிவிஷன் நிகழ்ச்சிகளின் தரம் பற்றிய பிரச்னை இந்தியாவுக்கு மட்டுமே உரியது இல்லை... ஆனால் ஒரு வித்தியாசம்: மேலை நாடுகளில் சிறந்த நிகழ்ச்சிகளுக்கு அரசு ஆதரவு கொடுக்கும். பி.பி.ஸியில் புதிய இளம் கலைஞர் ஒருவரை நிகழ்ச்சி தயாரிக்கச் சொல்லி, அட்டன்பரோ போன்ற தேர்ந்த அனுபவசாலியை மேற்பார்வையாளராக நியமிப்பார்கள். அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பைத் தங்கள் பொறுப்பில் ஏற்பார்கள். அமெரிக்காவில் Public TV என்று உண்டு. சிறந்த நிகழ்ச்சிகள் இருக்கும். இதற்கு அரசாங்க ஆதரவு உண்டு. இப்போதைய பொருளாதார மாற்றத்தில் இந்த ஏற்பாடும் பாதிக்கப்பட்டுள்ளது - அதனால் Public TVக்குப் பொது மக்களிடம் நன்கொடை கூட கேட்கிறார்கள்..."

"நல்ல நிகழ்ச்சிகள் தயாரித்தால் நமது அரசாங்கத்திடமிருந்து இது மாதிரியான ஆதரவை எதிர்பார்க்க முடியாது என்கிறீர்களா?"

"நம் நாட்டிலும் இந்தக் கோட்பாடெல்லாம் எழுத்தளவுல சட்டமா, விதிகளா இருக்கு. ஆனா நடைமுறையில்...?! சினிமா கலப்பு இல்லாத நிகழ்ச்சிக்கு ஸ்பான்ஸர் கிடைக்கிறது எவ்வளவு கஷ்டமா இருக்கு? 'மதுர நாயகன்' என்று ஒரு நாட்டிய சீரியல் நான் எடுத்தேன். கிருஷ்ணாவதாரத்தின் பல்வேறு நிலைகளைப் பல்வேறு சாஸ்திரீய நடன வகைகள் மூலமா வெளிப்படுத்திய 21 மணி நேர நிகழ்ச்சி. இங்கே அதுக்கு விளம்பரதாரரே கிடைக்கல்லை. கடைசியில் ஒரு விளம்பரதாரர் விருப்பப்படி அதையே இரண்டு இருபது நிமிட நிகழ்ச்சிகளாகச் சுருக்கி, மீனாட்சி சேஷாத்ரியை இணைப் புரையாளராகப் போட்டு (இதுவும் அவர்கள் நிபந்தனை) ஒளிபரப்ப - வாய்ப்பு கிடைச்சது. இந்த 21 வார நிகழ்ச்சியை சிங்கப்பூர் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன் முழுமையா ஒளிபரப்பினாங்க. நிகழ்ச்சிக்கு நல்ல வரவேற்பு இருந்ததாக எனக்குக் கடிதம் வந்திருக்கு. இங்கேயிருக்கும் தமிழர்கள்தானே அங்கேயும் இருக்காங்க. நம்ம டி.வி.யிலயும் ஏன் இந்த மாதிரி நிகழ்ச்சிகளைக் காண்பிக்கக் கூடாது?"

"ஆக, தரத்துக்கும் திறமைக்கும் சிறப்பிடம் தர தூர்தர்ஷன் முன்வந்தால்தான் நிலைமை மாறும் என்கிறீங்க?"

"தூர்தர்ஷன் மட்டுமில்லை; ஸ்பான்ஸர்களுக்கும் அந்தக் கண்ணோட்டம் வேண்டும். ஆனால் முழுக்க முழுக்க வியாபார நோக்கில் மட்டுமே இயங்கறாங்க. 'உங்க தயாரிப்பை எத்தனை லட்சம் பேர் பார்ப்பாங்க?' என்ற கேள்வியைக் கேட்கிறவங்க, இந்த நிகழ்ச்சி தங்கள் நிறுவனத்தின் பெயரைத் தாங்கி வர்ற அளவுக்குத் தரமாக இருக்கிறதான்னும் ஏன் பார்க்கக் கூடாது?"

— மலர்

அட்டகாசமான 5 நிபந்தனைகள்!

● சோவியத் யூனியன் கலைந்து போன போது உதித்த துக்கினியூண்டு தனிநாடு செச்னியா. ரஷ்யா அதனை அப்படி அங்கீகரிக்க மறுக்க, அந்த சிங்கத்தை இந்த சுண்டெலி நாடு எதிர்த்துக் கொண்டிருக்கிறது. ஈவிரக்கமில்லாமல் ரஷ்யர்கள் தாக்குகிறார்கள். புத்தாண்டு தினத்தன்று அதிகம் குடித்து விட்டு போதையுண்டிருந்தார் யெல்ட்சின். உலகத் தலைவர்கள் பலர் கடுமையாக அவரை ஏசுகிறார்கள். துதயேவ் செச்னிய நாட்டுத் தலைவர். ஜனவரி மத்தியில் பேச்சு வார்த்தைக்கு இறங்கி வந்தார். ரஷ்யா கண்டு கொள்ளாமல் குண்டு மழையைத் தொடர்கிறது.

செச்னியாவை ஜெயிப்பதோடு ரஷ்யாவின் தலைவலிகள் தீர்ந்து விடாது; தென் எல்லையின் இதர முஸ்லிம் குடியிருப்புகளுக்கு இந்த சுதந்திர வேட்கைத் தீ பரவும் என்று உலகம் எதிர்பார்க்கிறது.

● ஜப்பான் பூகம்பத்தின் பிரும்மாண்டம் டீ.வி. வழியே காணக் கிடைக்கிறது. மற்ற நாடுகளையும் உலுக்கக்கூடிய ஒரு செய்தி அந்நாட்டின் நுகர்வோர் இதழ் ஒன்றில் வெளியானது : ஷாம்பூவைப் பற்றியது. பலரும் விளம்பரம் செய்வது போல் ஷாம்பூ கூந்தலைப் பராமரித்து வளரச் செய்வதில்லையாம். மாறாக அதனால் கேடுதான் அதிகமாம்; அதிலுள்ள 'நைட்ரோஸமைடு' என்ற ரசாயனப் பொருளினால் கான்சர் வரக் கூட வாய்ப்பு இருக்கிறதாம்.

தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல் தோணுது. இல்லையா!

● "குறைஞ்சது ஒரு ரூபாய் அல்லது ¼ கிலோ அரிசிதான் வாங்கிக்குவோம். கல்யாணங்களுக்கு எங்களை அழைக்கணும்; அப்படியே அழைக்காமல் நாங்க வந்தாலும் மரியாதையா நடத்தணும்; மீந்து போன உணவை சுத்தமான பாத்திரங்களில் போட்டுத் தரணும்; நாங்க கூப்பிட்டதுமே தாமதம் பண்ணாமல் அரிசியோ பணமோ கொடுத்தனுப்பணும்...."

- இந்த நிபந்தனைகளை விதிப்பவர்கள் பிச்சைக்காரர்கள்!

பக்கத்து நாடான பங்களாதேஷில் இருக்கும் இந்த நிலை இங்கே வர அதிக நாளாகுமா என்ன!

● இன்னொன்றும் இந்தியாவுக்கு வரக்கூடும் : நாவல் காஸெட் என்ற நூதனம். பிரபல நாவல்களை இனிய குரலாளர்களைக் கொண்டு படிக்கச் செய்து காஸட் பதிவாக்கியுள்ளனர் அமெரிக்காவில். கார் ஓட்டும்போது பிடித்த நாவலைக் கேட்கலாம். நம் நாட்டில் காஸெட்டுடன் பைரேட் எடிஷன் பிரச்னையும் தவறாமல் வருமே!

● ஆர்னல்டு ஷ்வாஸ்நேகர் - சேமியா பாயசம் மாதிரி பேர் இருந்தாலும் டெர்மினேடர் - 2வில் சாகசங்களால் அசத்தியவர். இவர் நடித்து அமெரிக்காவில் வெளியான சமீப படம் 'ஜுனியர்'. இதில் ஷ்வாஸ்நேகர் கர்ப்பிணியாக நடித்திருக்கிறார். கவனிக்க! வேஷம் போடவில்லை, நடிக்கிறார்! விஞ்ஞான அற்புதங்களுள் ஒன்றாக மனித குலத்தில் ஆண்கள் கருவுறும் நிலை ஏற்படுவதாக ஒரு கதை...

'கர்ப்பிணர்' என்று சொல்ல வேண்டுமோ!

● பெரியம்மையை ஒழித்து விட்டாலும் அதன் கிருமிகள் சிலவற்றை ரஷ்ய சோதனைச் சாலைகளில் சாம்பிளுக்கு வைத்திருக்கிறார்கள்.



• யெல்ட்சின் • துதயேவ்

• ஆர்னல்டு ஷ்வாஸ்நேகர்

இந்த வருடம் ஜூன் மாதத்தில் அவற்றைக் கூண்டோடு கைலாசம் அனுப்புவதாக இருந்த திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இன்னும் ஆராய்ச்சிகள் பாக்கியிருக்கிறதாம். அந்தக் கிருமிகள் திருட்டுப் போவதாகக் கதைக் கருவுடன் யாராவது நாவல் எழுதலாம்!

● ஆறு வயது மகள் நீச்சல் குளத்தில் முழுக இருப்பதைக் கண்டு அவளைக் காப்பாற்ற முயற்சி செய்தாள் அம்மா. பார்த்துக் கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகள் யாருமே உதவ முன்வரவில்லை. கடைசியாக உள்ளூர்க்காரர் ஒருவர்தான் உள்ளே குதித்து, சிறுமியை மட்டும் காப்பாற்றினார். வேடிக்கை பார்த்தவர்களுள் ஒருவர் நிகழ்ச்சியை வீடியோ எடுக்க, மற்றொருவர் அந்த டேப்பை அவரிடம் விலைக்குக் கேட்க, கறுகறுப்பான (அருவருப்பான) வியாபாரம்...! எங்கே? ஃபிரான்ஸ் நாட்டில்.

தொகுப்பு : குல்லூ

கவர் ஸ்டோரி

தயம் க சாக்ஸ்

அவரை முதல் தரம் நேருக்கு நேர் வெகு அருகில் பார்த்த போது ஆச்சர்யமாக இருந்தது. மேடைப் பளபளப்புகள் ஏதும் இல்லாமல், நாலு முழ வேட்டி, வெற்று மார்புடன் "வாங்கோ, வாங்கோ" என்று பூத்த முகத்துடன் வரவேற்கும் பாங்கு பிடித்திருந்தது. அதே கோலத்துடன் சட்டென்று வெளியே இறங்கி, லஸ் கார்னர் பிளாட்பார டீக்கடைக்குப் போய் "ஸ்ட்ராங் சாயா, சக்கரை கம்மி" என்றால் ஒருத்தரும் அவரை கண்டுபிடித்து விட முடியாது. இவரா கதிரி கோபால்நாத்?

பூர்வீகம் கர்நாடகா. மங்களூர் அருகே கதிரி கிராமம். தற்போதைய அட்ரஸும் அங்கேதான். ஆனால் வருஷத்தில் பாதி நாள் சென்னை வாசம். லஸ்ஸிலுள்ள முருகாஸ் லாட்ஜ்.

"இங்கே ஏன் தங்கறேன் தெரியுமோ? ரசம் பிரமாதமா இருக்கும்!" என்று ஆரவாரமாகச் சிரிக்கிறார்.

லாட்ஜ் ரூமைக் கிட்டத்தட்ட கோவிலாக்கியிருக்கிறார். புகையும் ஊதுபத்தி. கடவுள் படங்கள். காஞ்சிப் பெரியவர். சாய்பாபா. அருகே சூட்கேஸ்கள். ஜிப்பா, வேட்டி, உறையிட்ட சாக்ஸஃபோன். மேலே கொஞ்சம் பூ. பூஜை.

"கச்சேரி இருக்கோ, இல்லையோ. தினசரி பிராக்டிஸ் விடறதில்லை."

ரொம்ப சந்தோஷமாக இருக்கிறார். 'டூயட்'டுக்குப் பிறகு இந்த டிஸம்பர் சீஸனில் கதிரி கச்சேரிகளுக்கு எக்கச்சக்க இளைஞர்களும் வந்திருந்தார்களாம்.



"சினிமா எப்படிப்பட்ட மீடியம்னு இப்போதான் புரியறது. 'டூயட்'டுக்கு முன்னாலேயே ஓரளவுக்கு நான் பாப்புலர்தான்னாலும் யங்ஸ்டர்ஸ் என் கச்சேரிகளுக்கு நிறைய வர ஆரம்பிச்சது அதுக்கப்புறம் தான்."

முற்றிலும் நமக்குப் பரிச்சயமில்லாத ஒரு மேல்நாட்டு வாத்தியத்தில் சுத்த கர்நாடக இசை ஜூஸ் எடுத்துத் தரும் கதிரியின் குடும்பம் பத்து தலைமுறைகளாக நாதஸ்வரம் வாசிக்கும் குடும்பம். பதினைந்து வயது வரை இவரும் நாதஸ்வரம்தான் வாசித்துக் கொண்டிருந்தார்.

"1965 ன்னு நினைக்கறேன். ஸ்கூல்ல மைசூருக்கு ஒரு தரம் எக்ஸ்கர்ஷன் போனோம். மகாராஜா பேலஸ்ல 'பேண்ட்' வாசிச்சவங்கள்ல நரசிம்மையான்னு ஒருத்தர் வெச்சிருந்த இன்ஸ்ட்ருமென்ட் எனக்கு ரொம்பப் பிடிச்சது. ரெண்டு காரணம். அதனோட அமைப்பு. வினோதமா, பளபளப்பா, பார்த்த கண்ணை எடுக்க முடியாதபடிக்கு ஒரு அட்ராக்ஷன். அப்புறம் அந்த ஸவுண்ட். ரொம்ப ஸாஃப்ட்டா அதே சமயம் ஆண்மை நிறைந்த தொனி. நாதஸ்வரம், புல்லாங்குழல், வீணையெல்லாம் பெண்மைக்குரிய நளினமான ஸவுண்ட் தருது. ஆனா, இந்த ஸவுண்ட்ல ஒரு கம்பீரம் - ஆண்மை நிறைஞ்சிருந்ததாப் பட்டுது எனக்கு.

ஃபோன்!



நாம ஏன் இதை பிராக்டிஸ் பண்ணக் கூடாதுன்னு ஒரு யோசனை.

"நரசிம்மையா கிட்டவே போய்ப் பேசினேன். 'எனக்கு கொஞ்சம் ம்யூஸிக் தெரியும் சார். நீங்க ஃபிங்கரிங் மட்டும் சொல்லிக் குடுங்க'ன்னு கேட்டு, தெரிஞ்சிக் கிட்டேன். ஊருக்கு வந்து ஒரு சாக்ஸஃபோன் வாங்கி நானே நாதஸ்வரத்துல கத்துக்கிட்டதையெல்லாம் இதுல வாசிச்சி, பிராக்டிஸ் பண்ண ஆரம்பிச்சேன்.

"ஆரம்பத்துல அப்பாவுக்கெல்லாம் ரொம்பக் கோபம். 'டிஸ்கோ' வாத்தியத்துல கர்நாட்டிக் ம்யூஸிக் எப்படி சாத்தியம்? ஏன் பிரயோஜனமில்லாத முயற்சி பண்றே'ன்னு ரொம்ப திட்டினாங்க. நான் மாறலை. இத்தனை இனிமையான ஒரு வாத்தியம் 'பாண்ட்' கச்சேரிக்காக மட்டுமே உருவாகலைன்னு ஒரு உறுதியான எண்ணம். இந்த வாத்தியத்தை மேடைக் கச்சேரி லெவலுக்குப் பரவலாக்கறதுன்னு முடிவு பண்ணி, கடுமையா உழைக்க ஆரம்பிச்சேன்.

"மெட்ராஸ் வந்து டீ.வி. கோபாலகிருஷ்ணன், பால முரளி இவங்களுக்கெல்லாம் வாசிச்சிக் காட்டினேன். அவங்க உதவியால முதல் முறையா திருவையாறு உற்சவத்துல பதினைஞ்சு நிமிஷம் வாசிக்க வாய்ப்பு கிடைச்சது.

"அதுதான் எனக்கு டேக் ஆஃப்!" என்று ஃபினாஷ் பேக்கைச் சொல்கிறார்.

பின்னால் 1977 ல் அதே டிவிஜி. முயற்சியில் செம்பை மெமோரியல் விழாவில் வாசித்தது கதிரிக்குத் திருப்பு முனை.

"யானை மாதிரியான வாத்தியத்தைப் பூனை மாதிரி பழக்கியிருக்கிறார்" என்று சுப்புடு எழுதிய விமர்சனம், கதிரியை இந்தியா முழுக்க இனம் காட்டியது!

"எண்பதுல ஒரு ஜாஸ் ம்யூஸிக் ப்ரோக்ராம் பம்பாய்ல நடந்தது. சாக்ஸ் வாசிக்கக் கூப்பிட்டிருந்தாங்க என்னை. கூடவே 'ஜான் ஹாண்டி'ன்னு ஒரு நீக்ரோக்காரர். உலகப் புகழ் பெற்ற சாக்ஸ் கலைஞர் அவர். அவரையும் கூப்பிட்டிருந்தாங்க. என் வாசிப்பைக் கேட்டுட்டு அவர் ரொம்பப் பரவசமாகி, 'நாளைக்கு நாம ரெண்டு பேரும் சேர்ந்து வாசிக்கறோம்'னு சொல்லிட்டார்.

"உடனே ஜாஸ்-கர்நாட்டிக் கலந்து ஒரு ட்யூன் கம்போஸ் பண்ணி, மறு நாள் வாசிச்சோம். பயங்கர ரெஸ்பான்ஸ்!"

ஜாஸ் உள்ளிட்ட எந்த வித இசையும் சாக்ஸில் வாசிக்கத் தெரிந்த கதிரி, "அதெல்லாம் தெரிஞ்சாலும் சாஸ்திரியக் கலைஞனாகத்தான் என்னை அடையாளம் காட்டிக் கொள்ள விரும்பறேன்" என்கிறார்.

சமீபத்தில் திருவையாற்றில் ஒரு கச்சேரிக்குப் போனவரை, "மெட்டுப் போடு" (டூயட்) வாசிக்கச் சொல்லி ஆயிரக் கணக்கான சீட்டு வந்ததாம்.

"தனியாவர்த்தனம் வரை என் லிஸ்ட் படிதான் வாசிப்பேன். அப்புறம் உங்கள் இஷ்டம்" என்று சொல்லி சமாளித்திருக்கிறார்.

"சாதாரணமா கச்சேரிகளில் சினிமாப் பாட்டு வாசிப்பதில் எனக்கு சம்மதமில்லை. ஆனா ரசிகர்களை சந்தோஷப்படுத்தறதும் கடமையாயிடுதே?"

பாலசந்தர் 'டூயட்'டுக்கு வாசிக்கக் கூப்பிட்ட சமயம் "கதிரி, உங்களுக்கெதற்கு சினிமா? ஏற்கெனவே நீங்கள் பாப்புலர்தானே!" என்று சுப்புடு தயங்கிக் கேட்டிருக்கிறார்.

ஆனால், நல்ல சங்கீதம் பரவலடைவதற்கு சினிமா ஓர் ஊடகமாக அமைவதில் தவறில்லை என்பதில் கதிரி ஸ்திரமாயிருக்கிறார்.

"சிந்து பைரவி, சங்கரா





பரணம் மாதிரிப் படங்கள் கர்நாடக சங்கீ தத்துக்குச் செய்திருக்கிற சேவையை யாரும் மறுப்பதற்கில்லை'' என்கிறார்.


மங்களூரில் கதிரி, சாக்ஸஃபோன் கிளாஸ் எடுக்கிறார். கலாநிகேதன் என்கிற அமைப்பு சார்பில். 25 பேர் படிக்கிறார்களாம்.

''இது கற்றுக் கொள்வது கொஞ்சம் கஷ்டம். முழு ஈடுபாடு வேணும். சைடுல வெச்சுக்க முடியாது. அதான் நிறைய பேர் வர்றதில்லை!'' என்று சிரிக்கிறார்.

மேலும் காரம், குளிர்ச்சி போன்ற உணவுகளில் கட்டுப்பாடு, புகை பிடிக்காதிருத்தல் போன்ற நியமங்கள் உண்டு.

ஒரு வித்தியாசத்துக்காக சாக்ஸஃபோனுக்கு வயலின், தவில், கடம் என்று மாறுபட்ட பக்கவாத்தியங்களை உபயோகிக்கும் கதிரி, தற்போது ரொம்ப சீரியஸாக ''How to play sax?'' என்றொரு புத்தகமும் எழுதி வருகிறார்.

B&C லிருந்து BBC வரை தனது தனித்துவமான இசையால் முத்திரை பதித்திருக்கும் கோபால்நாத்தின் மனைவி பிரமாதமாக வீணை வாசிப்பார். ஒரு மகன் சாக்ஸஃபோன், ஒரு மகன் கிளாரினெட், மகள்



அடுத்த இதழில்....

● **ஜெ. பற்றி ஜெயேந்திரர்!**

— *சிறப்புப் பேட்டி*

நடனம் என்று தூள் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அவரோடு பேசப்பேச, பேசிக் கொண்டே இருக்கத் தோன்றுகிறது. பேச்சு கூட musical ஆகத்தான் இருக்கிறது அவரிடம். ஆனால் கதிரி, கச்சேரிக்குக் கிளம்ப வேண்டியிருந்ததால் நாம் நகர வேண்டியிருந்தது.

— பா. ராகவன்

மேலட்டை வண்ணப்படம், படங்கள் : **கோபிநாத்**

மோட்டார் சைக்கிள் பரிசு திட்டம் - 22

இந்த வாரம் வட்டமேஜையில் குட்டித் தலைப்புகளைப் படியுங்கள். அவற்றிலிருந்து சரியான ஏழு சொற்களைத் தேர்ந்தெடுத்து வரிசைப் படுத்தினால் ஓர் அர்த்தமுள்ள கேள்வி கிடைக்கும். அருகிலுள்ள இடத்தில் வாக்கியத்தை நிரப்புங்கள். உங்களுக்கு உதவ அந்த வாக்கியத்தில் முக்கியமான இரண்டு சொற்கள் தரப்பட்டுள்ளன. வழக்கமான விதிமுறைகள்தான்!

போட்டி - 22

அந்த 7 சொற்கள்....

1. ....
2. ....
3. வட்ட ....
4. மேஜை ....
5. ....
6. ....
7. ....


வாக்கியம் : ....

....

பெயர் :

முகவரி :

Kalki Shopping Page


காங்கிரஸ்
விமானத்துக்கு ஒரு சேதமும் இல்லை... பத்திரமா தரை இறங்கி விடலாம்...
தேர்தல் களம்
அர்ஜுன் சிங்
பிரதமர்
ஜெ.மீது வழக்குத் தொடர அனுமதி
கவர்னர்
வெடி மருந்தெல்லாம் ரெடி பண்ணி நெருப்பு வைக்கிற நேரத்துல தண்ணியை ஊத்தி அணைச்சிட்டானே மனுஷன்...
பதவி பறிப்பு
வாழப்பாடி
கூட்டணியிலிருந்து கல்தா
அர்ஜுன் சிங்
மண்டைக் கட்டு சமாளிக்க....



ஓம்
கல்கி



1995
பிப்ரவரி 5
பவ
தை 22
மலர் : 53
இதழ் : 27

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

கூட இருந்தே குழி பறித்த அர்ஜுன் சிங்!

“கட்சியை உடைக்க மாட்டேன்; காங்கிரஸை உடைப்பது என் நோக்கமல்ல'' என்று சொல்லிச் சொல்லியே உடைத்த பெருமை அர்ஜுன் சிங்கையே சேரும். 'கூட இருந்தே குழி பறிப்பது' என்பது இதுதான். இன்று வரை ராவ் குழியில் விழாமல் தப்பியிருக்கிறார். நாளை?

மனித வள மேம்பாட்டு அமைச்சராகப் பதவி வகித்த காலகட்டத்தில் மானுட மேம்பாட்டுக்காக சுண்டு விரலைக் கூட அசைக்காத அர்ஜுன் சிங்தான், இந்தியாவையும் அதன் மக்களையும் தம்மால்தான் காப்பாற்ற முடியும்; ராவ் அதற்கு லாயக்கே இல்லை என்பதாக நடித்து, இல்லாத பிரச்னைகளைக் கிளப்பி, தேவையற்ற பதில்களைக் கோரி ஆர்ப்பாட்டம் பண்ணினார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ராவ், கடைசியாக இங்கே வாழப்பாடியுடன் சேர்ந்து கொண்டு அர்ஜுன்சிங் அடித்த கூத்தைத் தாங்க முடியாமல் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்பந்தத்துக்கு உள்ளானார். பாவம், தமிழகம் மீண்டும் ஒருமுறை, நடக்கக் கூடாதது நடந்ததற்கு நிலைக்களனாயிற்று.

கட்சியை விட்டு நீக்கப்பட்ட பிறகும் தாம் காங்கிரஸ்காரர்தான் என்றும் 'காங்கிரஸ் தொண்டனாகவே உழைப்பேன்' என்றும் மக்கள் மன்றத்தில் மாய்மாலம் பண்ணுவது, அர்ஜுன் சிங்கின் உள்நோக்கம் காங்கிரஸைக் கபளிகரம் பண்ணி, பிரதமர் நாற்காலியையும் ஆக்கிரமிப்பதுதான் என்பதை நிரூபிக்கிறது- நிரூபணம் தேவை எனில்.

'நாடு நாசமாகி வருகிறது; இதைக் காப்பாற்றக் கூடியவன் நான்தான்' என்பதுபோல் பேசும் அர்ஜுன் சிங்குக்கு, கட்சி ஜனநாயகத்துக்கும் உட்கட்சி ஜனநாயகத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் போகாது. நன்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றேதான் உட்கட்சி ஜனநாயக மரபுகளை மீறி அவர் நடந்து கொண்டிருக்கிறார்.

ஜனநாயகத்தில் எதிர்கட்சிகள் நாடாளுமன்றத்தில் மட்டுமல்லாமல், பொது மேடைகளிலும் பத்திரிகையாளர் கூட்டங்களிலும் ஆளும் கட்சியின் செயல்பாடுகளை எதிர்த்தும் விமர்சித்தும் பேசும். ஆனால் உட்கட்சி ஜனநாயகம் கட்சிக்குள் மட்டுமே செயல்படவேண்டுமே யல்லாது, பொது மேடைகளிலும் பத்திரிகையாளர் கூட்டங்களிலும் அல்ல. சிந்திக்கத் தெரிந்தவர்களுக்குக் கருத்து மாறுபாடுகள் இருப்பது இயல்பு. ஆனால் அதை அதற்கென்றே ஏற்பட்ட கட்சிக் கூட்டங்களில் அலச வேண்டுமே தவிர, தலைமையை எதிர்த்துக் கொண்டு தெருவுக்கு வந்து ஏசக் கூடாது. தெரிந்தே இப்படி அர்ஜுன்சிங் நடந்து கொள்ளக் காரணம், தாம் கட்சியை விட்டு வெளியேறக் கூடாது; வெளியேற்றப்பட வேண்டும் என்பதே.

ராவும் தாம் வில்லனாகக் கருதப்படவும் அர்ஜுன்சிங் புனிதராக எண்ணப் படவும் இடம் வைக்காமல் அவரை அழைத்துப் பேசி, உட்கட்சி ஜனநாயகம் உருப்படியான முறையில் செயல்பட வழி வகுத்திருக்கலாம். ஆனால் தனி நபர் ஈகோ என்பது கட்சி நலனையும் ஏன், தேச நலனையும் கூட விழுங்கி ஏப்பம் விட்டு விடுகிறது!

இதற்கு முன்பும் காங்கிரஸ் பலமுறை பிளவு கண்டிருக்கிறது என்றாலும் தற்போது வட மாநிலங்கள் பலவற்றில் தேர்தலைச் சந்திக்க வேண்டிய தருணத்தில் இப்படி உடைந்ததால், 'எதிர்க் கட்சிகளுக்கு ஆட்சி அதிகாரத்தை வெள்ளித் தட்டில் வெற்றிலைப் பாக்குடன் வைத்துக் கொடுத்ததாகி விடுமோ' என்ற கவலை உண்மை காங்கிரஸ் வாதிகளை ஆட்கொண்டிருக்கிறது. இம் மாநிலத் தேர்தல்களிலும் காங்கிரஸ் தோல்வியுற்றால், 'ராவ் பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டும்' என்ற கோரிக்கை, முன்பு கர்நாடகா, ஆந்திரா தேர்தல் தோல்விகளையொட்டி எழுந்ததை விடவும் பலமாக உருவாகும். மத்தியிலே இந்த ஆட்சி இப்போது ஆட்டம் கண்டால், சூடு பிடித்திருக்கும் புதிய பொருளாதாரக் கொள்கை, தொழில் முன்னேற்றம், அயல் நாட்டவர் முதலீடு முதலிய எல்லாவற்றிலும் கணக்கம் ஏற்படும்.

எனவே, அர்ஜுன் சிங்கையும் திவாரியையும் பகைத்துக் கொண்டாலும் மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றிபெற வேண்டியது இன்றியமையாத தாகிறது. அதற்கு ராவ், யாக சாலைகளையும் ஜோசியர்களையும் நம்பினால் மட்டும் போதாது.

27

"HE WHO WALKS IN ANOTHER'S TRACKS LEAVES NO FOOT PRINTS."

- யாரோ.

சில ஆண்டுகள் முன்பு.

ஏதோ ஒரு நேருக்கு நேர் நிகழ்ச்சி. Symbolism என்பது என்னவென்று ஒரு கேள்வி கேட்டார்கள். நான் பதிலாக ஒரு புதுக்கவிதை சொன்னேன். மன்னிக்கவும்: புதுக்கவிதை மாதிரி ஒன்றைச் சொன்னேன்.



• நீர்க்குமிழி (படம் - உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்)

ஒரு அவனும் ஒரு அவளும் சந்தித்துக் கொண்டார்கள்.

அவன் தெலுங்கில் பார்த்தான்.

அவன் மலையாளத்தில் புன்னகைத் தான்.

அவன் ஹிந்தியில் சிணுங்கினான்.

அவன் தமிழில் சிரித்தான்.

அவள் ஒரு ஃபிரெஞ்சுப் பார்வை பார்த்தாள்.

கடைசியில் இருவரும் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டார்கள்.

இது ஏதோ புதுக்கவிதை என்று நீங்கள் நினைத்தால் உங்கள் கேள்விக்குப் பதில் இதில் இருக்கிறது. புரியவில்லையென்றால் நிகழ்ச்சியின் முடிவில் விளக்கம் கொடுக்கிறேன் என்றும் சொன்னேன். இறுதியில் விளக்கம் கொடுத்தேன்.

அவன் தெலுங்கில் (சுந்தரமாகப்) பார்த்தான்.

அவன் மலையாளத்தில் (கிண்டலாகப்) புன்னகைத்தான்.

அவள் ஹிந்தியில் (புரியாமல்) சிணுங்கினாள்.

அவன் தமிழில் (கடகடவென்று) சிரித்தான்.

அவள் ஒரு ஃபிரெஞ்சுப் பார்வை (காதல் பார்வை) பார்த்தாள்.

கடைசியில் இருவரும் ஆங்கிலத்தில் (முத்தத்தில்) பேசிக் கொண்டார்கள்.

அரசியல் கார்ட்டூன் போடுகிறார்களே!

அவரவர்களுடைய முகத்தின் பிரதான அம்சங்களை பெரிதுபடுத்தி, மிகைப் படுத்திப் படமாக வரையும் போது தான் அதில் அவரவர்களுடைய தனித்தன்மையை உணர்ந்து அவர் இன்னார் என்று அடையாளம் கண்டுகொள்கிறோம்.

ஃபிரெஞ்சு அதிபராக இருந்த 'டிகால்' அவர்களைக் கார்ட்டூனாகப் போடும் போது அவருடைய மூக்கை மட்டும் முகத்தளவிற்கு நீட்டிப் பெரிதாகப் போடுவார்கள். அதே போல்தான் சர்ச்சில் அவர்களை வரையும் போதும் மிகப் பிரசித்தி பெற்ற அந்த சுருட்டைப் பூதாகாரமாகப் போடுவார்கள்.

இந்த மிகைப்படுத்தும் தன்மைக்கும் Symbolism என்பதற்கும் அதிக வேறுபாடில்லை.

சமீபத்தில் திருச்சியில் உள்ள எல்லா ரோட்டரி சங்கங்களும் சேர்ந்து எனக்கு 'For the sake of Honour' என்கிற புகழ்மிக்க அந்த விருதினைக் கொடுத்து கௌரவித்தார்கள். அந்த விழாவிலே முக்கிய விருந்தினராகப் பங்கேற்ற பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் முத்துக்குமரன் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டார்கள்.

'பாலசந்தர் டச்' என்றும் 'பாலசந்தரின் முத்திரை'யென்றும் சொல்கிறார்களே! இந்த அடைமொழி வேறு எந்த இயக்குநருக்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதைப் பற்றிச் சற்று விளக்கமாக அவர் கூற வேண்டும் என்று எனக்கு மேடையிலேயே ஒரு அன்புக் கட்டளையிட்டார். ஏற்புரையின் போது நான் சொன்னேன்:

"நான் வெள்ளித்திரைக்கு அறிமுகமாகும் காலகட்டத்தில் இரண்டு மிகப் பெரிய இமயங்கள் - மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும் நடிகர் திலகம் சிவாஜி அவர்களும் - வெள்ளித் திரையின் முடி சூடா மன்னர்களாகத் திகழ்ந்தார்கள். வெள்ளித்

நிழல்கள்

கே. பாலசந்தர்

திரையில் வெளி வந்த திரைப்படங்கள் அத்தனையும் எம்.ஜி.ஆர். படங்களென்றும், சிவாஜி படங்களென்றும் பேசப்பட்ட காலகட்டம். இந்தக் காலகட்டத்திலே நான் திரையுலகில் பிரவேசிக்கிறேன். இந்த இரண்டு இமயங்களின் image ஐயும் எதிர்த்து நின்று போட்டி போட்டு வெளி வரும் திரைப்படங்கள் எனது பெயராலும் பேசப்பட வேண்டும் என்கிற எனது ஆக்க பூர்வமான ஒரு சிந்தனை வெறியின் வெளிப்பாடுதான் என்னை ஒரு இயக்குனராக முன்னால் தள்ளி, என்னையே நான் அடையாளம் காட்டிக் கொள்கின்ற ஒரு வழி முறையை வகுத்தது.

எனது தனிப்பட்ட identity ஐ நான் வெளிப்படுத்தி எனக்கு ஒரு recognition ஐ ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்கிற ஒரு தாகம். படங்களில் காணப்படுகின்ற சில புதுமைகளுக்கும் சின்னச் சின்ன நுட்பங்களுக்கும் பின்னால் காரணகர்த்தாவாக ஒளிந்து கொண்டிருக்கிற ஒரு இயக்குநரின் presence ஐயும் பெயரையும் புரிய வைத்து 'யார் இந்த இயக்குநர்?' என்று ரசிகர்களைப் பேசவைக்கின்ற ஒரு உபாயம்தான் இது. நாளடைவில் இந்த உபாயங்கள் 'பாலசந்தர் டச்' என்று ரசிகர்களால் வர்ணிக்கப்பட்டது. பத்திரிகைகளால் பாராட்டுப் பெற்றது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக முதன் முதலாக நான் பாரதிராஜா அவர்களை சந்தித்த போது அவர் குறிப்பிட்டது கூட நீர்க்குமிழ் திரைப்படத்திலே வருகின்ற அந்த 'ஷாட்' பற்றித்தான்!

டாக்டராக மேஜர் சுந்தரராஜன் ஆஸ்பத்திரி வார்டுக்குள் நுழையும் அந்தக் காட்சி. அதுவே அவருடைய அறிமுகக் காட்சி. அந்தக் காட்சியில் டாக்டரே காணப்படமாட்டார். மாறாக காமிராவையே டாக்டராக இயங்க வைத்து, ஆஸ்பத்திரி காரிடாரில் காமிரா இயங்கி வந்து கொண்டிருக்க, காமிராவை எதிர்ப்படுபவர்கள் அத்தனை பேரும் பயந்து ஒதுங்குவதும், பணிவுடன் காமிராவுக்கு வணக்கம் செலுத்துவதும் எல்லோரும் காமிராவையே பார்த்து பேசுவதும் காட்டப்படாத டாக்டரின் குரல் மட்டுமே அவருடைய காலணிகளின் சப்தத்துடன் சேர்ந்து ஒலிப்பதும், இந்த குறிப்பிட்ட 'ஷாட்'டின் நூதனமும் நுட்பமும் அறிமுகப்படுத்துகின்ற டாக்டர் மீது ஒரு பயம் கலந்த மரியாதையை பார்ப்பவர்களிடம் ஏற்படுத்தியது.

பாரதிராஜா சொன்னார்:

"எனது பள்ளிப் பருவத்தில் நான் பார்த்த இந்த வித்தியாசமான 'ஷாட்' என்னை மிகப் பெரிய அளவில் அசத்தியது. அப்பொழுதே நானும் எனது பள்ளி நண்பர்களும் இந்தப்படத்தின் இயக்குநர் எதிர்காலத்தில் மிகப் பெரிய இயக்குநராக நிச்சயம் வரப் போகிறார் என்று பேசிக் கொண்டோம்" என்று சொன்னார்.

நான் முதன் முதலாக இளையராஜா அவர்களுடன் சிந்து பைரவி படத்தின் பாடல்களுக்காக composing போன போது அவரும் கூட நீர்க்குமிழ் படத்திலே வருகின்ற இந்த ஷாட்டைக் குறிப்பிட்டுச் சொல்லி "'யார் இந்தப் படத்தின் இயக்குநர்' என்று எங்களைப் பேச வைத்தது இந்த 'ஷாட்'தான்" என்று நினைவு கூர்ந்தார்.

The best director is the one you don't see என்று Billy Wilder என்கிற பிரபல இயக்குநர் சொன்னார்.

இந்தக் கூற்றின்படி பார்த்தால் தன்னை ஒரு இயக்குநராக முன்னால் நிறுத்திக் காட்டிக் கொள்கின்றவர்கள் நல்ல இயக்குநர்கள் இல்லை என்று ஆகிறது.

இதுதான் நிஜமானதும் கூட. உண்மையான கோட்பாடும் கூட.

ஆனால் நடைமுறையில் இது சாத்தியமில்லாமல் போகிறது.

நாம் எடுக்கின்ற திரைப்படங்களுக்கும், சொல்கின்ற கருத்துக்களுக்கும் ஓர் அங்கீகாரம் கிடைக்க வேண்டுமெனில் ஓர் இயக்குநர் தனது image ஐ முதலில் வளர்த்துக் கொள்ள வேண்டிய அத்தியாவசியத் தேவை ஏற்படுகிறது. தன்னை வலுக்கட்டாயமாக வெளிப்படுத்திக் கொள்கின்ற உபாயங்களை தனக்கு ஒரு image ஏற்பட்ட பிறகு மெல்ல மெல்ல குறைத்துக் கொள்ளலாம் என்கிற



[illegible] வந்த கால கட்டத்தில் இயங்கியிருக்கிறேன். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக நான் ஏற்படுத்திக் கொண்ட இந்த image இப்பொழுது எனக்கே எதிரியாக அமைகிறது.

திரைப்பட ரசிகர்களும் திரைப்பட விமர்சகர்களும் கூட பாலசந்தரின் முத்திரைகள் அவ்வளவாக இந்தப் படத்திலே இல்லையென்று இப்பொழுதெல்லாம் சில நேரங்களில் குறைபட்டுக் கொள்கிறார்கள்:

Robert Bresson சொல்லியிருக்கிறார்.

Hide the ideas so that the people find them; the most important will be the most hidden.

Bresson அவர்கள் சொன்ன இந்த கருத்து கூட ஒரு நல்ல இயக்குநராக தன்னை வெளியுலகத்திற்கு அடையாளம் காட்டிக் கொண்ட பிறகுதான் செயல்படுத்தப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

நான் பெரிதும் மதிக்கின்ற மிகச் சிறந்த நண்பரும் 'சினிமா' என்கிற theory ஐக் கரைத்துக் குடித்திருப்பவருமான லயோலா கல்லூரி பேராசிரியர் ராமு அவர்கள் கூட என்னைப் பேட்டி கண்ட போது,

"உங்களுடைய அணுகுமுறையை நான் 'பாலசந்தரிஸம்' என்று சொல்லலாமா?" என்று கேட்டார்.

நாங்கள் செய்து கொண்ட கருத்துப் பரிமாற்றங்களை பொம்மை பத்திரிகையில் ஒரு கட்டுரையாக எழுதியிருந்தார்.

"ஒவ்வொரு படத்திலும் வித்தியாசமாக ஏதாவது செய்ய வேண்டும் என்கிற தாகத்துக்குப் பெயர் பாலசந்தரிஸம்.

"எதிர் காலத்தில் செய்ய வேண்டிய பல புதுமைகளை நிகழ்காலத்தில் செய்துவிட்டு, அவைகளால் பல நேரங்களில் பாராட்டும், சில நேரங்களில் திட்டுக்களும் வாங்கிக் கொள்கின்ற பரிசோதனை முயற்சிகளின் பெயர் பாலசந்தரிஸம்.

"படத்தின் தலைப்பு வைப்பதிலிருந்து, சில காட்சிகளைச் சற்று புரட்சிகரமாக வைப்பதுவரை வியாபார எதிர்பார்ப்புகளுக்குத் தலை சாயாமல் இருக்கின்ற சில நியாயமான பிடிவாதங்களின் பெயர் பாலசந்தரிஸம்."

நான் அதே பேட்டியில் சொன்னது கூட நினைவுக்கு வருகிறது.

When the director in me dies, I become only a photographer. A still photographer.

(தொடரும்)

பட்டிக்காட்டுப் பொண்ணு

வார விடுமுறை தினத்தில் ஊருக்குப் புறப்பட்டு விட்டான் தீனதயாளன். பஸ்ஸில் ஜன்னலோர இருக்கையாகப் பார்த்து அமர்ந்து கொண்டான்.

'அப்பா! எனக்கு இந்த பட்டிக்காட்டுப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தீங்களே! என்ன பொருத்தம் இருக்குன்னு இந்த இடத்தைத் தீர்மானிச்சீங்க..' குளிர்காற்றை மீறி உஷ்ண நினைவில் சஞ்சரித்தான்.

பஸ்ஸை விட்டு இறங் கியதும் அறிமுக நபர்களின் விசாரிப்புகள். அவற்றுக்கெல்லாம் சிரித்து பதில் சொல்லிக் கொண்டே நடந்தான். முன்னியாறு நிதானமாய் அசைந்தது. ஆற்றின் இடையே ஆள் உயரத்திற்கு சீமைக் காட்டாமணிச் செடி வளர்ந்திருந்தது.

அப்பா திண்ணையில் அமர்ந்து எதிரே இருந்தவரிடத்தில் காரசாரமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்.

தலைஉயர்த்தி இவனைப் பார்த்தார். "வாடா..." என்று சொல்லி விட்டு மேலும் தொடர்ந்து பேசினார்.

அம்மா சந்தோஷ மிகுதியில் ஓடி வந்தாள்.

"தீனா... எப்படிப்பா இருக்கே.. நல்லா இருக்கியா... வேளா வேளைக்கு ஒழுங்கா சாப்புடறியா..." அவளுடைய முகத்தில் இருளும் வெளிச்சமும் மாறி மாறிப் பிரதிபலிக்க "கை, கால், முகம் கழுவிக்கிட்டு வா, சாப்பிடலாம்..." என்றாள்.

அவனுக்கு வந்ததும் வராததும் பெண் பற்றி தர்க்க விவாதம் பண்ண யோசனை தான்.

அதற்கு மற்றொரு காரணம் வாசலில் அப்பா இருப்பது தான்.

சாப்பாடு பரிமாறும் போது அம்மா சொன்னாள்: "நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு... நல்லா இருக்கணுப்பா..."

அவனுக்குக் கண்ணில் நீர் பரவி, அடக்க முடியாமல் இரண்டு துளி சாப்பாட்டுத் தட்டில் விழுந்தது.

அம்மா பதறி விட்டாள். "என்னப்பா... அப்பா பார்த்திருக்கிற பெண் உனக்குப் பிடிக்கலையா...?"

அவனுக்கு மனசில் முள் குத்திக் கொண்டிருந்தது. முதல் முறையாக வாழ்விலே தந்தை சொல்லை எதிர்க்கிறான். நெற்றியில் வியர்த்தது. ஆனாலும் அம்மாவிடம் சொன்னான்.

"என்னம்மா இது... நான் எவ்வளவு பெரிய படிப்பு படிச்சிருக்கேன்... கைநிறைய சம்பாதிக்கிறேன். நான் போய் நாகரிகம் தெரியாத... பட்டிக்காட்டுப் பொண்ணை எப்படிக் கல்யாணம் செய்துக்கிறது... இப்படி மலைக்கும் மடுவுக்கும் எப்படி முடிச்சிப் போட தோணுது உங்களுக்கு?"

சட்டெனக் கலங்கினாள் அம்மா. "உன் அப்பா குணம்தான் தெரிஞ்சதாச்சே. அவரோட பிடிவாதமும் கோபமும் உனக்குத் தெரியாதா என்ன... பேசாம பொண்ணைப் பாரு. உனக்குப் பிடிச்சிடும்னு நான் நினைக்கிறேன்."

"எப்படிம்மா... எழுதப் படிக்கத் தெரியாத பொண்ணு... நாகரிகம் அறியாப் பொண்ணு... என் கூட டவுனில் வந்து எனக்கு, என் வாழ்க்கைக்குத் துணையா எப்படி, எந்த வகையிலே அவளால இருக்க முடியும்?"

கை கழுவும் போது அப்பாவின் நண்பர் கிருஷ்ணன் வந்தார். "தம்பி தீனா... எப்ப வந்தே? நல்லா இருக்கியா?" என்றார்.

"வெளியில் போய் பேசுவோமே..." என்றபடி அவருடன் வெளியில் வந்தான்.

திண்ணையில் அப்பாவைக் காணவில்லை. வயலுக்குச் சென்று இருப்பார்.

கண் விளிம்பில் நீர் படர, "என்ன கிருஷ்ணன் மாமா... அப்பா இது மாதிரி பெண் பார்த்திருக்காங்க... இதெல்லாம் சரியா வருமா...?" கரகரப்பாய்க் கேட்டான்.

"உன் அப்பா உனக்குக் கெடுதலா நினைக்க மாட்டார் தம்பி.. பொண்ணு குடும்பம் நடத்தத் தெரிஞ்ச விவரமான பொண்ணுதான். குறைன்னு சொன்னா படிக்கலை - அதான்..."

"அது சரி... ஆனா படிச்ச பொண்ணு மனைவியா வாய்ச்சாத்தான்... பிறக்கற புள்ளைங்களுக்குச் சிறப்பா வாழ்க்கை அமைச்சுக்

கொடுக்க முடியும்...''

"நாம ரெண்டு பேருமே விவாதம் பண்ணிக்கிட்டு இருக்க வேணாம்... மொதல்ல பொண்ணைப் பாரு... பாவம் அந்தப் பொண்ணுகிட்டே கூட உன் போட்டோவைக் குடுத்தாச்சு... நீதான் அவளுக்குப் புருஷன்னு கூட சொல்லியாச்சு... அது மனசுல இன்னேரம் எத்தனை எத்தனை கனவு கண்டுக்கிட்டு இருக்கோ...!''

அவனால் தவிர்க்க முடியவில்லை. 'சரி பெண்ணைத்தான் பார்ப்போமே' என்று கிருஷ்ணனுடன் புறப்பட்டு விட்டான்.

பக்கத்து கிராமம்தான். மரத்தூண்கள். நாட்டு ஓடுகள் வேய்ந்த வீடு. வாசலில் இருந்த பெண் இவர்களைப் பார்த்ததும் வீட்டிற்குள் ஓடினாள்.

கிருஷ்ணன் உள்ளே சென்று பாய் எடுத்து வந்து திண்ணையில் விரித்தார். "உட்காருப்பா... வீட்ல பொண்ணுதான் இருக்கு... இது அறுவடை சமயம். அதான் எல்லாரும் வயலுக்குப் போயிருக்காங்க... பக்கத்துலதான் வயல். போய்ப் பார்த்து, கையோடு கூட்டிக்கிட்டு வர்றேன்...''

தீனதயாளன் தீர்மானித்து விட்டான். உடனே வீட்டினுள்ளே சென்று 'உன்னை எனக்குப் பிடிக்கவில்லை. நம் இருவருக் கும் ஜோடிப் பொருத்தம் ஒத்து வராது...' என்று அவளிடத்தில் சொல்லி விட வேண்டும் என்ற முடிவில் வீட்டிற்குள் நுழைந்தான்.

த. சேகர்

அவள் சிலிர்த்துப் போய் எழுந்து நின்றாள். சாளரத்தின் வழியாக வரும் மங்கலான வெளிச்சத்தில் அவளுடைய தேகம் நடுங்குவது தெரிந்தது. திடீரென அவளுடைய முகத்தில் வியர்வைத் துளிகள் மின்னின. அடுப்பு புகைந்து கொண்டிருந்தது. அவனுக்குக் காப்பி போடுகிறாள் போலும்.

தலைகுனிந்திருந்தாலும் அவளுடைய முகத்தில் கள்ளம் கபட மற்ற குழந்தைத்தனம் தெரிந்தது.


''என்கிட்டே ஏன் பயப்படறே...?''

"அத்தை நல்லா... இருக்காங்களா...'' அதற்குள் அவனுடைய அம்மாவை முறைவைத்துப் பேசினாள்.

அவனுக்கு அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மாவும் பட்டிக்காடுதான். படிக்கத் தெரியாத பெண்தான். ஆனாலும் அவள் என்னை வயிற்றில் சுமந்து, தோளில் சுமந்து என்னைப் பெரிய படிப்பு படிக்க வைக்கவில்லையா என்ன...? இவளைப் பட்டிக்காடு என்று நிராகரித்தால் ஒரு படிக்காத பட்டிக்காட்டுப் பெண்ணின் மகன்தானே நீ என்ற உண்மை எப்படி மறைந்து போகும்?'

"டவுனுக்கு வந்து என் கூட குடும்பம் நடத்தும் போது இது மாதிரி எல்லாம் பயப்படக் கூடாது...'' என்று சொல்லி விட்டு, வெளியே திண்ணைக்கு வந்தான்.

தெரு முனையில் கிருஷ்ணன் மாமாவும் இன்னும் சிலரும் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.







3 இன்ஸ்பெக்டர் டி.ஆர். சாமி அன்று காலையில் இரண்டாவது காப்பியை சாப்பிட்டு முடித்தார். மடிப்புக் கலையாத மஃப்டி உடையில் சாத்வீகமாக பிருதிவி வீட்டு சோபாவில் அமர்ந்திருந்தார்.

எதிரே சலனம் இல்லாமல் ரமா உட்கார்ந்திருந்தாள். அவள் காட்டிய கம்பீரமும், மிதப்பும் அவரை ஆச்சரியப்பட வைத்தன.

திரும்பத் திரும்ப அதையே கேட்கறீங்களே இன்ஸ்பெக்டர்! என்று சற்று கேலி தொனிக்கக் கேட்டு விட்டாள்.

டி.ஆர். சாமி அசந்து விட்டார்.

அப்படியா மேடம்! என்று அசடு வழிந்தார் அவர்.

- கணவர் மேலே சந்தேகத்திலே நான் மோட்டலுக்கு ரகசியமாகப் போனேன்னு சொல்றீங்க! சத்தியமா இல்லை! என் கணவரை சந்தேகிக்க எந்த விஷயமும் கிடையாது! முதல்லே அதைத் தெரிஞ்சுக்குங்க நீங்க...

அவள் தொடரும் போதே இன்ஸ்பெக்டர் வெட்டினார். இல்லை மேடம்! பெண்களுக்குப் பொறாமை வந்துடுத்துன்னா, எல்லா வேலைகளும் பண்ணுவாங்க! தெரியாதா?

- தெரியும்! எனக்குப் பொறாமை எதுவும் கிடையாது!

- ஏன் மேடம்? பிருத்வி அந்தப் பெண் அருணா மேலே ஏற்கெனவே மனசைப் பறிகொடுத்தாச்சே! அவளை அவர் பார்க்கப் போனது தெரிஞ்சா... நீங்க சும்மாவா இருப்பீங்க! தவிர நீங்கதான் மாருதி ஓட்டறீங்க, நெட்டையா இருக்கீங்க...

இன்ஸ்பெக்டர்! என்று அழுத்தினாள் அவள். பார்வை ஒரு ஜொலிப்புடன் அடங்கியது. என்னை மாதிரி உயரமா, மாருதி ஓட்டற பெண்ணுங்க எனக்கே அரை டஜன் தெரியும்! நகரத்தை அலசினா நூறு பேர் அகப்படுவாங்க! அவங்க ஒவ்வொருத்தரையும் தேடிப் போய் கேள்வி கேளுங்க.

- கடைசியிலே அதைத் தான் நான் செய்ய வேண்டி வரும்மா! அது தேவையே இல்லை! நீங்க மட்டும் மனசு வச்சு கொஞ்சம் எங்களோடு ஒத்துழைச்சா போதும்.

- ஒத்துழைக்காம என்ன செய்யறேன். நீங்க நம்ப மாட்டேங்கன்னா

நான் என்ன செய்ய? நான் நேத்து முழுதும் வீட்டிலேதான் இருந்தேன். நான் என் கணவரை பூரணமா நம்பறேன். மோட்ட லுக்கு போயிட்டு வந்தவுடனே நடந்ததை எல்லாம் என்கிட்டே சொன்னார்! போலீ சுக்குத் தெரிவிச்சுட்டேன்னும் சொன்னாரு! அவரை மட்டும் நம்பலைனா, நான் அவரை திரும்பவும் மோட்டலுக்கு அனுப்பிச் சிருப்பேனோ! டை 'பின்'னை எடுத்துட்டு வர்றதுக்காக! அதுவும் போலீஸ் அந்தச் சமயம் அங்கே வந்திருந்து, அவர் அகப்பட லாம்னு சாத்தியம் இருந்த போது...

- நில்லுங்க! போலீஸைக் கூப்பிட்டது தான்தான்னு மோட்டல் மானேஜர் வேறே சொல்றாரு. சரி, அது கிடக்கட்டும்! நான் இந்த வீட்டை ஒருமுறை சோதனை போட லாமா!

- ஓ! தாராளமாய் போடுங்க.

இன்ஸ்பெக்டர் எழுந்தார். வெளியே இருந்த இரண்டு சாதாரண உடை கான்ஸ் டபிள்களையும் வரவழைத்தார்.

சோதனை போட்டார். ஒரு இடம் விடவில்லை. பாத்ரூம், பீரோ, மேஜை, சமை யலறை ஒரு சின்ன பதுக்கல் இடம் விட வில்லை. ஒரு மணி நேரம் விடாமல் சோதனை! அவருக்கு வியர்த்து விட்டது.

கடைசியில் வெறும் கையோடு திரும் பினார்.

முகத்தில் ஒரு புன்னகை பதிய, எதுவும் கிடைக்கலையே, ஸார்! என்று ஆதங்கத் துடன் கேட்டாள் அவள்.

இன்ஸ்பெக்டர் பேசவில்லை.

- சரி இன்னிக்கு என் கணவரை விடு தலை செய்வீங்களா?

அவர் பதில் பேசவில்லை.

ஹால் தாண்டி வாசல் பக்கம் போகும் போது, இன்ஸ்பெக்டர்! நீங்க ஒரு சாதா ரணக் கேள்விக்குக் கூட பதில் சொல்ல விருப்பபடலை! நல்ல போலீஸ் ஆபீசர்தான்! என்றாள் சற்று கடுமையுடன்.

ஒருகணம் அவர் கண் சொடுக்கி ஏறியது.

அந்தக் கணமே அது தவறு என்று புரிந்திருக்க வேண்டும்.

எதுவும் யாரிடமும் சொல்ல விருப்பப் படாமல் நழுவின அந்த பழைய போலீஸ் நாட்கள் போய் விட்டன.

இப்போது எல்லோரும் படித்தவர்கள். நன்றாக விவாதம் செய்யக்கூடியவங்க! தங்கள் உரிமையை அறிந்தவர்கள்! எனவே பேச வேண்டியது அவரது கடமை என்று நினைத்தார்.

- மேடம்! அருணா ஆஸ்பத்திரியிலே இருக்காங்க. கோமாவிலே இருக்காங்க!



"நம்ம தலைவருக்கு சோடாவை தம்ளரில் ஊற்றித்தான் தரணும்!"

"ஏன் அப்படியே தந்தா குடிக்கத் தெரியாதா?"

"ஊஹூம், பழக்கதோஷத்தில் எதிரே நிக்கறவங்க மண்டையை உடைச்சுடுவார். அதான்!"

– சி.என். ராஜராஜன்

அவங்களுக்குத் திரும்ப நினைவு வந்த துன்னா, நடந்தது என்ன என்று தெரியவரும்! அப்புறந்தான் உங்கள் கணவரை வெளியிலே விடறதைப் பற்றிச் சொல்ல முடியும்!

அவர் உடனே வாசலில் போய் நின்றார். மீண்டும் திரும்பிப் பார்த்து, ஒருவேளை அவங்க எதுவும் சொல்லாமல் செத்துப் போயிட்டா, நடக்கிற விஷயமே வேறே! நீங்களும் சாட்சிக் கூண்டிலே ஏற வேண்டி வரும்!

ஆஸ்பத்திரியில் டாக்டர் வெங்கட் ராம் அலுமினிய மேஜை முன்னால் அமர்ந் திருந்தார்.

அவரது துணை டாக்டரான இலக் மைக் ரோஸ்கோப் கண்ணைத் துருவிக் கொண் டிருந்தான்.

கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே இன்ஸ்பெக்டர் நுழைந்தார்.

- ஹலோ இன்ஸ்பெக்டர்! வாங்க வாங்க! என்றார் வெங்கட்ராம்.

இன்ஸ்பெக்டர், ஒரு அலுமினிய வட்டத் தில் உட்கார்ந்தவாறு,

- நேத்திக்கு காட்டுக்குள்ளே ஒரு ஆட்டோப்ஸி! தலை எழுத்து! என்றார் டாக்டர் வெங்கட்ராம்!

- சவுரியமாப் போச்சு! நானும் உங்களுக்கு ஒரு தலைவலி வச்சிருக்கேன்!

வெங்கட்ராம் தலையைத் தூக்கினார். என்ன விஷயம்? கொலையா, தற்கொலையா, தண்ணிப்பிணம் இல்லாம இருந்தா சரிதான் என்றார்.

- கொலைன்னு நினைக்கிறேன்! ஆனா... என்று சொல்லி நிறுத்திய இன்ஸ்பெக்டர், ஏன் டாக்டர்! பிருதிவி என்கிறவரை உங் களுக்குத் தெரியுமா? அவர் உங்களைத்

தெரியும் என்கிறாரே!

- பிருத்வி! ஆமாம்! ஏன் தெரியாம? மெடிகல் ஸப்ளை கம்பெனி நடத்தறாரே! அவரை யாரோ கொன்னுட்டாங்களா?

நோ, நோ! அவர் ஒரு கேஸ்லே மாட்டிட்டிருக்கார்! அவர் மேலே சந்தேகம் விழுது! ஒரு மணிக்கு முன்னாடி தான் அருணா என்கிற பெண் செத்துப் போனா! ஆஸ்பத்திரியிலே கோமாவிலே கிடந்தா! பிரேதம் இங்கே வந்துட்டிருக்கு!

- கடவுளே! பெண் பேரு என்ன சொன்னீங்க?

- அருணா!

வெங்கட்ராம் யோசனையில் சிக்கினார். இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்.

- அருணா அவர் கம்பெனியிலே செகரட்டரியா இருந்தா. இளமையானவ! சிவு சிவுன்னு விழி, ஒடிசலான உடம்பு! சினிமா ஸ்டார் கெட்டது! ஆனா பாவம்! பிருதிவி அவளை 'லவ்' பண்ணினார்! ஆனா அவளோ தன்னோடு கல்லூரியில் படிச்சவனை அப்படியே மனசிலே நினைச்சு உருகிட்டிருந்தா! அந்தக் கல்லூரிக் காதலன் குடும்பத்திலே ஏதோ தடை இருந்திருக்கு! அதெல்லாம் ஒருவழியா முடிஞ்சு, அருணா வேலையை ராஜினாமா செய்து, அவனோடு போயாச்சு! ரெண்டு பேரும் பெங்களூர்லே வாசம்....

- பிருதிவிக்கு அவள் டிமிக்கி கொடுத்துட்டாளா? என்றார் வெங்கட்ராம்.

- அவள் முன்னாடியே சொல்லியாச்சு. பிருத்வியும் கண்ணியமா நடந்துட்டாரு! திருமணப் பரிசாக ஒரு தங்கச் சங்கிலி கொடுத்திருக்கிறாரு! ரெண்டு பேரும் பிரிஞ்சாச்சு!

- இப்போ எப்படி அந்தப் பெண் இங்கே வந்திச்சு?

- அதான் தெரியலை! மோட்டல்லே வந்து தங்கி இருக்கு! அது தெரிஞ்சு பிருதிவியும் போயிருக்கிறார். இதுவரைதான் கதை! இனிமே நடந்தது நமக்குத் தெரியணும்! டாக்டர் திலக்! உங்க உதவி...

- நிச்சயம் உண்டு ஸார்! அதுக்கு முன்னாடி நடந்த சம்பவங்களை பற்றித் தெரியுமா? நீங்கதானே விசாரிக்கப் போனீங்க...

இன்ஸ்பெக்டர் தான் பார்த்ததை வரிசையாகச் சொன்னார்! மோட்டல் மானேஜர் சொன்னதையும் அப்படியே ஒப்பித்தார்.

- ஸார்! நீங்க எந்தக் கதையை நம்பறீங்க? என்று கேட்டார் வெங்கட்ராம்.

- ஐயோ அதுதானே தெரியவில்லை! எனக்கு பிருதிவி மேலே சந்தேகம்தான்! அவர் சொல்றபடி, எண்ணெய் விளக்குப் புகை அருணாவை பாதிச்சுடுத்துன்னு.... ஆனா மேலே காயம்... எப்படி வந்திச்சு?

டாக்டர் வெங்கட்ராம் குறுக்கிட்டார். போதும்! போதும்! இது பெரிய இடத்துக் கேஸ்! ரொம்ப தரோவா எல்லா டெஸ்டிலேயும் இறங்கிட்டோம்! நீங்க...

- சாயங்காலம் வரேன் ஸார். முதல் செய்தி எதாவது சொல்லுங்க! என்று சிரித்தவாறு சொன்னார் இன்ஸ்பெக்டர்.

மாலை!

வேலை முடிந்து அந்த செந்நிற ஆஸ்பத்திரி கட்டடத்திற்கு வருவதற்கு மணி ஆறு ஆகி விட்டது.

சாம்பல் பூசினாற்போல பொழுது மாறி விட்டது.

கட்டடம் நிசப்தமாகி விட்டது.

இன்ஸ்பெக்டர் கதவைத் திறந்து உள்ளே கால் வைத்த போது, நல்லவேளை, பதால ஜிஸ்ட் காபினுக்குள் வெளிச்சம் எரிந்து கொண்டிருந்தது.

உள்ளே நுழைந்த போது, டாக்டர்கள் இருவரும் மேலே நிமிர்ந்து பார்த்தார்கள்.

- நூறு வயசு ஸார் உங்களுக்கு! இன்னும் அஞ்சு நிமிடத்திலே புறப்படறதுக்காக இருந்தோம்.

இன்ஸ்பெக்டர் உட்கார்ந்தார். ஏதாவது செய்தி?

டாக்டர் திலக் ஆரம்பித்தான். ஸார்! ஏதோ விளக்குப் புகையிலே அவள் மயக்கமாயிட்டான்னு பிருதிவி சொல்லியிருக்காரில்லே...!"

- ஆமாம் டாக்டர்! இன்ஸ்பெக்டர் அவசரமாச் சொன்னார்.

- அதைக் கண்டுபிடிக்க ஸோடியம்

ஹைட்ராக்ஸைட் டெஸ்ட்டுன்னு உண்டு! அதைப் பார்த்தாச்சு!

இன்ஸ்பெக்டருக்கு ஆவல் தூக்கியது.

- அதனோடு முடிவுப்படி அவள் அந்தப் புகையாலே சாகல்லே!

- பலே!

- இன்னொரு டெஸ்ட்! அதுக்குப் பேரு கடியாமா டெஸ்ட்! அதிலேயும் நெகடிவ் முடிவுதான்! அதாவது அந்தப் பெண் விளக்குப் புகையாலே சாகலை!

கையைத் தட்டினார் இன்ஸ்பெக்டர்.

- ஸார்! அவளும் புகையை சுவாசிக்கிறா! அங்கே போன பிருதிவியும் அதே புகையை சுவாசிச்சிட்டிருக்கிறார்! அவருக்கு எந்த பலனும் ஏற்படலை! ஆனா அவ செத்துப் போயிருக்கிறா!

- அத வச்சு முடிவு பண்ணிடாதீங்க இன்ஸ்பெக்டர்! இரண்டு பேரும் ஒரே அளவு நேரம் புகையைச் சுவாசிச்சாலும், அவங்க அவங்க தேக நிலை வித்தியாசமா இருக்கும்! சுவாசிக்கிற வேகம் வித்தியாசப் படலாம்! அவங்க அவங்க எடை கூட இதிலே வேலை செய்யும்! அதனாலே ஒருத் தருக்கு நடக்கிறது இன்னொருத்தருக்கு நடக்க வேண்டியதில்லை என்றார் வெங் கட்ராம்.

இன்ஸ்பெக்டர் முகம் கொஞ்சம் சோர்ந் தது. சரி! எப்படியோ அந்தப் பெண் புகை யாலே சாகலை! அவளை யாரோ அடிச்சு சாகடிச்சிருக்காங்க!

- இருங்க இருங்க! என்றார் டாக்டர் வெங்கட்ராம்! - மோட்டல்லேருந்து அந்தப் பெண்ணை வெளியிலே கொண்டு வந்த பிறகு எத்தனை மணி நேரத்துக்குப் பிறகு இங்கே அவளை போஸ்ட்மார்ட்டத்துக்கு கொண்டு வந்தீங்க?

- இன்ஸ்பெக்டர் யோசித்தார்.

- பதினைந்து, பதினாறு மணி நேரம் இருக்கும் டாக்டர்!

- ஸோ! பதினாறு மணி நேரத்துக்கு அப் புறம்தான் நாங்க அவள் ரத்த ஸாம்பிள் எடுத்திருக்கோம். பரிசோதிச்சிருக்கோம் தெரிஞ்சுதா!

- அதனாலே என்ன டாக்டர்?

- இந்த நேரம் ரொம்ப முக்கியம் இன்ஸ் பெக்டர்! ரத்தத்தை நம்பக் கூடாது.

- ஓ! என்று ஏமாற்றத்தோடு நிறுத்தினார் இன்ஸ்பெக்டர்.

- இன்ஸ்பெக்டர்! அந்தப் பெண் குடிச் சிருந்தாங்கன்னு பிருதிவி அவர் மனைவி கிட்டே சொல்லியிருக்கார் இல்லே!

- ஆமாம் ஸார்!

- அதையெல்லாம் அவள் நம்பினாளா?

- ஸார்! இந்த ரமா ஒரு விசித்திர மனசுக் காரி! நிச்சயமா இவள் பிருதிவியை பின்பற்றி மோட்டலுக்குப் போயிருக்கிறா! அங்கே சன்னல் வழியா உள்ளே பார்த்த போது, அந்தப் பெண் அருணா கட்டில்லேயும், பிருதிவி சோபாவிலேயும் தூங்கறதை கவனிச்சிருக்கிறா! அவளுக்கு ஓரளவு மனம் சமாதானமாயிருக்கு! வீட்டுக்குத் திரும் பிட்டா! இப்போ என்னடான்னா, நான் கண வனைப் பூரணமா நம்பறவ, அவரைப் பின் பற்றி போகவே இல்லைன்னு சாதிக்கிறா! உண்மையிலே இவள் போய் வந்திருக்கிறா! ஆனா என்னாலே இதை கோர்ட்லே நிரு பிக்க முடியாது!....

டாக்டர் வெங்கட்ராம் நீண்ட பெருமூச்சு விட்டார்.

- சரி இன்ஸ்பெக்டர்! இப்போ ரமா என்ன மனநிலையிலே இருக்கிறா?

- என் கணவனை எப்ப விடுவீங்க! எப்ப விடுவீங்கன்னு ஒவ்வொரு வேளையும் போன் பண்ணா! நேரிலே வந்து பேசினா கண்ணீர் விடறா!....

- நடிப்புன்னு நினைக்கறீங்களா?

- இல்லை. இருந்தாலும்....

இன்ஸ்பெக்டர் நிறுத்த, சிறிது நேரம் யாரும் பேசாத நிசப்தம் விழுந்தது.

டாக்டர் வெங்கட்ராம் நீண்ட மூச்சுடன் எழுந்தார்.


- பார்த்திடலாம்! நாளைக்கு முழு போஸ்ட்மார்ட்டம் நடந்திடும். விஞ்ஞானம் வழியே இந்த சிக்கல் தீருமான்னு பார்க்க லாம். கவலைப்படாதீங்க இன்ஸ்பெக்டர்!

எல்லோரும் கிளம்பினார்கள்.

(தொடரும்)



- ஆயிரம் கரங்கள் நீட்டி அருளாசி தருவாள்!
  – ஆன்மீகம்
- எலக்ட்ராலிஸஸ் பற்றி அழகுக்கலை நிபுணர்
- பாப்பா முதல் பாட்டி வரை விரும்புவது...



கலை உலகில் கருணாநிதி!

- ☆ சினிமா உலகில் கருணாநிதி...
- ☆ பின்னணித் தகவல்களின் சுவையான தொகுப்பு...
- ☆ ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை தினமலர்– கதைமலர் இணைப்பில் படிக்கத் தவறாதீர்கள்!

தினமலர்

கதைமலர்

பிப்ரவரி 4'95 இதழில் ஆரம்பமாகிறது!

மான்ட்ராக்ஸ்-மாய வலை!

சமீபத்தில், "கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள 'மான்ட்ராக்ஸ்' மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன" என்ற செய்தியை நாளிதழ்களில் பார்த்திருப்பீர்கள். அதென்ன மான்ட்ராக்ஸ்? பிரௌன் ஷுகர், கொகெய்ன், அபின் வரிசையில் புதிய சேர்க்கையா? பழக்கத்தை எப்படிக் கண்டு பிடிப்பது? எப்படி நிறுத்துவது? மன நல மருத்துவர் என். கோபால கிருஷ்ணன் சொல்கிறார்:

அறுபதுகளில், தூக்க மாத்திரையாக மருத்துவர்களாலேயே பரிந்துரைக்கப்பட்டது தான் மான்ட்ராக்ஸ். இது ஒரு போதை மாத்திரையாக உருமாறி, பரவலாகப் புழங்க ஆரம்பித்த போது எண்பதுகளில் இதைத் தயாரிப்பதும் விற்பதும் தடை செய்யப்பட்டது. மீண்டும் இப்போது அபாயகரமாக உலவ ஆரம் பித்திருக்கிறது. ஹைதராபாத்தில் அதிகம் தயாரிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள்.



அது, சாதாரண மாத்திரை போன்ற தோற்றத்தில் இருப்பதால் புழக்கம் எளிதாகிறது. சிரிஞ்ஜ் போன்றவை தேவையில்லா ததால் சுற்றி உள்ளோரை சுலபத்தில் ஏமாற்றிவிட முடிகிறது.

'வேலியம்' போன்ற மாத்திரை தான் இது எனினும் இதற்கு அடிமையாகி விடுபவர் சதவீதம் நூற்றுக்கு இருபத்தைந்து. அபாயம் மிக அதிகம்.

நரம்பு மண்டல பாதிப்பு, மூளைச் செயல்பாட்டுக் குறை, படிப்பு, தொழிலில் நாட்டமின்மை இப்படிப் பல சங்கடங்கள் இதை உபயோகிப்பதால் வந்து சேர்கின்றன. குணப்படுத்தலில் காலம் தாழ்த்தினால், அபாயகரமான விளைவுகளைச் சந்திக்க நேரும்.

மான்ட்ராக்ஸ் பழக்கத்திலிருந்து விடுபட அளிக்கப்படும் சிகிச்சை, இதர போதைப் பழக்க சிகிச்சை போலத்தான்.

முதலில் உடலில் இறங்கியிருக்கும் நச்சுத்தன்மையை நீக்கி, அதன் விளைவாக உண்டாகியிருக்கும் பக்க நோய்களைக் கண்டறிந்து குணப் படுத்த வேண்டும். தொடர்வதாக, மீண்டும் அடிமையாகாமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியம்.

சிகிச்சை மட்டும் அல்ல; நோயாளியின் மன உறுதியும் விடுபடும் உத்வேகமுமே முக்கியத் தேவை.

If you have the will, we have the way!

சந்திப்பு : **நிர்மலா சக்கரவர்த்தி.**

இந்த காவல் தெய்வத்திற்கும் ஒரு நிதி நிறுவனத்திற்கும் என்ன சம்பந்தம்?




சக்தி பைனான்ஸ் – வங்கிகளுக்கு இணையான பாதுகாப்பு



கிராமம் தோறும் அதன் எல்லையில் காவல் தெய்வம் காலம் காலமாக நிலைத்திருக்கிறது. அந்த தெய்வத்தின் சக்தி கிராம மக்களை நோய் நொடியிலிருந்து காக்கிறது. கிராம எல்லையைத் தாண்டி எந்தக் கெடுதலையும் அந்த சக்தி ஊருக்குள் நுழைய விடுவதில்லை. கிராம மக்களுடைய நலத்திலும் பாதுகாப்பிலும் அந்த சக்தி மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. இது கிராம மக்களின் பாரம்பரிய நம்பிக்கை.

சக்தி பைனான்ஸையும் மக்கள் அப்படித்தான் நம்புகிறார்கள். உங்களுடைய சேமிப்புக்கு சக்தி பைனான்ஸ் அதிக பாதுகாப்பு அளிக்கிறது. உங்கள் நலனில் அக்கறை கொண்டு உங்கள் சேமிப்புக்கு நீங்கள் அதிக வருமானம் பெற வகை செய்கிறது. சக்தி பைனான்ஸின் ஸ்திரத்தன்மையைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். சக்தி நிறுவனங்களின் எண்ணிக்கை 20. மொத்த ஆண்டு வர்த்தகம் ரூ. 700 கோடி. 1.5 லட்சம் டெபாசிட்தாரர்கள் மிகுந்த நம்பிக்கையோடு வைத்திருக்கும் டெபாசிட் தொகை ரூ. 150 கோடி. நாடு முழுவதும் 37 கிளைகள். 25 சேமிப்பு மையங்கள். பரவலாகப் பாதுகாப்புப் பெட்டகங்கள்.

சக்தி பைனான்ஸ் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவையையும் பூர்த்தி செய்வதில் தனிப்பட்ட கவனம் செலுத்துகிறது. அதற்காகவே அவர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு பல புதுமையான திட்டங்களை முதன்முதலாக அறிமுகப்படுத்திய சிறப்பையும் பெற்றுள்ளது. அதுமட்டுமல்ல, இத்தகைய



திட்டங்களைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அறிமுகப்படுத்தி விரைவாகச் செயல் படுவதிலும் முன்னோடியாகத் திகழ்கிறது.

உங்கள் சேமிப்புகளை சக்தி பைனான்ஸில் டெபாசிட் செய்யுங்கள். நிம்மதி பெறுங்கள்.

சக்தி
பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் :
475 டாக்டர் நஞ்சப்பா சாலை கோயம்புத்தூர். 641018.
தொலைபேசி எண் :
231471/231472/231473/234174

சடங்கு



தர்மசங்கடத்தில் நீலகண்ட சாஸ்திரி. ஊஞ்சல் ஆடிக் கொண்டிருக்கிறது. க்ரீச்ச்... கிரீச்...! உதட்டில் வெற்றிலைச் சுதப்பல். ஊரில் இரண்டு சாவு விழுந்திருக்கிறது. இரண்டு வீட்டிலும் நீலகண்ட சாஸ்திரியைக் கூப்பிட்டிருக்கிறார்கள். எங்கு போவது? குழப்பத்துடன் சாஸ்திரிகள், "நான் கிளம்பறேன்" என்று மட்டும் சொல்கிறார்.

"மிட்டாதார் ஆத்துக்குத்தானே?" - அபயத்திடம் இருந்து வேகமாய் கேள்வி. அந்த கேள்வி சாஸ்திரிகளை சங்கடப்படுத்திய மாதிரி தோன்றுகிறது. பார்வையால் அபயத்தை ஊடுருவுகிறார்.

"ஏன் அப்படி பார்க்கறேள்? நான் கேட்டதுல என்ன தப்பு?" - அபயம் சேலைத் தலைப்பை சரிசெய்தபடி ஒரு நீண்ட பிரவசனத்துக்குத் தயாரான மாதிரி நிமிர்கிறாள்.

"முதல்ல வந்தவன் செல்லப்பாதானே?" சாஸ்திரிகளிடமும் எதிர் கேள்வி.

"இருக்கலாம். சைக்கிளைப் போட்டுண்டு லொங்கு லொங்குன்னு மிதிச்சுண்டு உங்களை வந்து முதல்ல பார்த்தவன் செல்லப்பாதான். இல்லேங்கலே. ஆனா அவனாலே ஈமக்கிரியைக்குப் பெரிசா என்னத்த கொடுத்துட முடியும்? செத்துப் போன அவன் பாட்டியும் சரியான அன்னக்காவடி.

"ஆனா மிட்டாதார் வெங்கட்ராமய்யர் சாவு அப்படியில்லை. அவர் பிள்ளை நடராஜன் அமெரிக்காவாசி. நீங்க கேக்கறதைக் கொடுப்பான். கோதானம்னா பதினோரு ரூபாயை வெச்சுக் கொடுக்கற சம்பிரதாயம்னு இல்லாம நல்ல காராம் பசுவையே வாங்கி நிஜமாலுமே தானமா தருவான். ...எனக்கும் பால் வாங்கி கட்டுப்படியாகலை."

பிலுபிலுவென கோடை மழை கணக்காய் பேசும் அபயத்தை சாஸ்திரிகள் முறைக்கிறார்.

"வைதீக காரியம் வியாபாரமில்லை" என்கிறார்.

"ஆனா வைதீகாளுக்கு வயிறு இருக்கே. பிள்ளை குட்டின்னு குடும்பம் இருக்கே. அவாள்லாம் சாப்டாகணுமே. உங்க வியாதிக்கும் மருந்து வாங்கணுமே?"

"அதுக்காக என் வேத மந்திரத்தை விக்கச் சொல்றியா?"


"நான் விக்கச் சொல்லலை. மதிப்பா வெச்சுக்க சொல்றேன்."

"அப்படின்னா செல்லப்பா ஆத்து சாவு காரியத்துக்கு யாருடி போவா? இந்த சுற்று வட்டாரத்துலேயே சாம வேத வாத்யார் நான் ஒருத்தன்தான். கல்யாணம் கருமாதி காதுகுத்து அப்த பூர்த்தின்னு எதுன்னாலும் நான்தான். நான் ஒருத்தன்தான்! நானும் மிட்டாதார் ஆத்து சாவு நல்ல பணக்கார சாவு; நிறைய தம்பிடி பிரட்டலாம்னு அந்த பக்கம் போனா இங்க யார் போவா?"

வாசல் பக்கம் சைக்கிள் மணி சப்தம். செல்லப்பா தெரிந்தான். நல்ல களையான முகத்தில் சாவு துக்கத்தின் விஸ்தாரமான வியாபிப்பு நன்றாகத் தெரிந்தது.

"என்ன செல்லப்பா...?"

இந்திரா சௌந்தர்ராஜன்



''மாமா உடனே ஊம்புங்க மாமா. பாட்டி தவறிட்டா.''

"அபயம் சொன்னா. நீ போ நான் பின்னாலேயே வரேன்."

"மாமா தாமதிக்காதேள். அன்ன ஆகாரம் இல்லாம பத்து நாள் கிடந்த உடம்பு. நேத்து ராத்திரி தூக்கத்துலேயே போய்ட்டா. எப்ப போனான்னே தெரியாது! விடிஞ்சுதான் பார்த்தேன்."

''வேளை வந்தா நீயும் நானும் கூட போய்த்தானே தீரணும். நீ போ. நான் பின்னாலேயே வரேன்.''

"செத்த சீக்கிரம் வாங்கோ மாமா... என்ன அனாதையா மட்டும் இழுத்து போட்டுடாதே செல்லப்பா. உன் கையால கொள்ளி போட்டு என் காரியங்களை கிரமப்படி பண்ணிடுவியான்னு வாய்க்கு வாய் கேப்பா பாட்டி...''

செல்லப்பா துக்கம் தாங்காமல் அழுதான்.

''அழாதே செல்லப்பா; போ வந்துடறேன்...''

செல்லப்பா அந்த பதிலை நம்பி சைக்கிளில் திரும்ப ஏறினான். [illegible]ான் வீதி முனையைத் தாண்டியிருக்க ம[illegible]ான். எதிரிலேயே மிட்டாதார் நடராஜய்யர் வீட்டுக் கார்!



"சம்பந்திகளுக்குள்ளே என்ன தகராறு?"

"நாட்டிலே வர வர கொள்ளைக்காரங்க பெருகிப் போயிட்டாங்க'ன்னு பெண்ணோட அப்பா யார்கிட்டேயோ சாதாரணமா பேசிக்கிட்டிருந்ததை, பிள்ளையோட அப்பா கேட்டுட்டு தங்களைத்தான் சொல்றாருன்னு தகராறு பண்றாராம்."

- டி. என். பாலகிருஷ்ணன்

'பாம் பாம் பாம்...'

வாசலில் காரை நிறுத்திக் கொண்டு வாயில் சிகரெட்டோடு கூப்பிடுபவன் அவரது சீமந்தபுத்ரன் நடராஜன்.

எட்டிப் பார்க்கிறார் சாஸ்திரிகள். "என்ன ஓய்... ரெடியா? கிளம்பும் கிளம்பும்..." - அவனிடம் அவரை விலைக்கே வாங்கி விட்ட மாதிரி ஒரு துடிப்பு.

"போ நடராஜா வந்துடறேன்..."

அவன் முணுமுணுத்துக் கொண்டே காரை கிளப்புகிறான்.

அப்பொழுது சாஸ்திரிகள் மகன் பிரசன்ன வெங்கடேசன் உள்ளே வருகிறான்.

அவனை முறைக்கிறார்.

"இவன் என்னை மாதிரி தர்பை பிடிக்கத் தயாரா இருந்தா இன்னிக்கு எனக்கு இப்படி ஒரு ஏச்சு வருமாடி! இவன் காலேஜுக்குப் போய்ப் படிச்ச திமிர்! ஆபீசுக்குத்தான் போவேன்னு அடம் பிடிக்கறது - அதான் ஊருக்குன்னு ஒரு பாப்பான் அல்லாடறேன். நான் காசைப் பார்ப்பேனா - கர்மாவைப் பார்ப்பேனா?"

பிரசன்னாவுக்கு உடனேயே புரிந்து விடுகிறது. அவரைக் கவலையோடு பார்க்கிறான். 'வருமானம் இல்லாத இந்தத் துறையில் நானும் நுழைந்து என் குடும்பமும் கஷ்டப்பட வேண்டுமா?' என்று கேட்காமல் கேட்கிறான்.

"பாப்பான் காசைப் பார்க்கக் கூடாது. கர்மாவைத்தான் பார்க்கணும். அவன் ஒரு லௌகீக சன்யாசி" - என்று அடிக்கடி சொல்லும் சாஸ்திரி இப்பொழுது என்ன செய்யப் போகிறார்? புரியாமல் அவரைப் பார்த்து எதற்கு இந்த கூப்பாடு?" என்று கேட்காமல் கேட்கிறான்.

"ஊர்ல இரண்டு சாவு விழுந்துடுத்து. ஒண்ணு மிட்டாதார் வெங்கட்ராமய்யர். இன்னொண்ணு அப்பளக் கிழவி. யாராத்துக்குப் போறதுன்னு உங்கப்பாக்கு குழப்பம்" எடுத்துக் கொடுக்கிறாள் அபயம்.

"இதுல என்ன குழப்பம் வேண்டிக் கிடக்கு? அப்பளாக் கிழவியாத்துக்குத்தான் அப்பா போகணும்."

"நீ ஒருத்தன்டா... கிழவி பேரன் செல்லப்பா பெரிசா என்னத்தடா தந்துடப் போறான். வெங்கட்ராமய்யர் சாவு ராஜ சாவாச்சே...?"

"அவாதான் எல்லாத்தையும் விலைக்கு வாங்கறவாளாச்சே! சாவுல மட்டும் எதுக்கு இந்த ஏழை பிராம்மணனுக்கு தவம் கிடக்கறா?"

"அதப் பத்தி நமக்கென்னடா... சாவு விழுந்தாச்சு! கூப்ட்டா போய்ட்டு வர வேண்டியதுதானே?"

அபயம் படபடக்கிறாள்.

பேசி விட்டு நிமிர, தூக்கிவாரிப் போடுகிறது. வாசல்புறம் செல்லப்பா திரும்பத் தெரிகிறான்!

"செல்லப்பா நீ போகலையா?" - சாஸ்திரிகள்.

"போய்ட்டுத் திரும்ப வந்தேன் - வந்ததும் நல்லதாப் போச்சு! மாமி பேசினதைக் கேக்க முடிஞ்சுது."

"இவ கிடக்கறாடா! நான் கிளம்பிட்டேன் - சைக்கிள் டபுள்ஸ் மிதிப்பியோல்லியோ?"

"ட்ரிபிள்லே மிதிப்பேன். ஆனா இப்ப முடியாது."

"ஏன் செல்லப்பா?"

"நீங்க வெங்கட்ராமய்யர் ஆத்து சாவுக்கே கிளம்புங்கோ மாமா. உங்க வரும்படிய பாருங்கோ.... கஷ்ட ஜீவனம்னா என்னங்கறதை நான் நிறைய பார்த்துட்டேன். என்னைப் போலதானே நீங்களும்... வெங்கட்ராமய்யர் ஆத்துக்குப் போறதாலே உங்க கஷ்டம் கொஞ்சம் குறையும்... மேலும், என் பாட்டி உசுரோட இருந்தவரை பிறத்தியாருக்கு பாரமா இருந்ததே இல்லை. பிறர் மனசு புண்படும்படியா நடந்துண்டதும் இல்லை. இன்னிக்கு என் நிலைமைல அவ இருந்திருந்தா உங்களை மிட்டாதார் ஆத்துக்குத்தான் அனுப்பியிருப்பா. நீங்க போங்கோ மாமா... பாட்டி காரியத்தை நான் சமாளிச்சு நடத்திக்கறேன்" - சொல்லி விட்டு, செல்லப்பா சைக்கிளில் ஏறி வேகமாக மறைகிறான்.

விழிகளில் நீரோடு அவன் போவதைப் பார்த்தபடி சாஸ்திரிகள் நிற்கிறார்....

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

21. வள்ளியின் சாபம்

பொன்னனுடைய குற்றச்சாட்டைக் கேட்டபோது, மாரப்பன் திடீரென்று ஆயிரம் தேள் கொட்டியவனைப் போல் துடிதுடித்தான். பொன்னனைப் பார்வையினாலேயே எரித்து விடுகிறவனைப் போல் ஒரு கண நேரம் கடூரமாய்ப் பார்த்தான். பின்னர், திரும்பித் தலையைக் குனிந்து கொண்டு நின்றான்.

"பூபதி! இதற்கு என்ன சொல்கிறாய்?" என்று சக்கரவர்த்தி இடிக் குரலில் கேட்கவும், மாரப்பனுக்கு மறுபடியும் தூக்கிவாரிப் போட்டது. ஆத்திரத்தினாலும், கோபத்தினாலும் அவனுக்கு அழுகை வந்து விட்டது.

"பிரபோ! இவன் சொல்வது பொய், பொய், பொய்! இளவரசனை நான் தூண்டிவிடவேயில்லை. இவர்களுடைய சதியாலோசனையைப் பற்றி நன்றாய்த் தெரிந்து கொள்வதற்காகச் சிறிது காலம் இவர்களுக்கு உதவியாயிருப்பது போல் நடித்தேன்! அவ்வளவுதான். உடனுக்குடனே, தங்களுடைய தளபதி அச்சுத வர்ம பல்லவரிடம் எல்லா விவரங்களையும் சொல்லிக் கொண்டிருந்தேன்..."

அப்போது, "பாவி! துரோகி!" என்ற மெல்லிய பெண் குரல் கேட்டது.

சக்கரவர்த்தி, "யார் அது?" என்று அதட்டிவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தார். அந்தக் குரல் வள்ளி நின்ற திசையிலிருந்துதான் வந்தது. ஆனாலும் சக்கரவர்த்தி அந்தப் பக்கம் பார்த்தபோது வள்ளி பரம சாதுவைப் போல் நின்றாள்.

மாரப்பன் சிறிது தைரியமடைந்து, "பிரபோ! விக்கிரமனை இந்த அடிமை தூண்டிவிடவேயில்லை; இது சத்தியம். அவனைத் தூண்டிவிட்டது யார் என்று எனக்குத் தெரியும்! சத்தியமாய்த் தெரியும்! சமூகத்தில் கட்டளை பிறந்தால் சொல்லுகிறேன்" என்றான்.

"சொல்லு; தைரியமாய்ச் சொல்லு!" என்றார் சக்கரவர்த்தி.

"ஜடாமகுடதாரியான ஒரு சிவனடியார் அருள்மொழி ராணியையும் விக்கிரமனையும் அடிக்கடி வந்து பார்த்துக் கொண்டிருந்தார். அவர் உண்மையில் சிவனடியார் இல்லை. கபட சந்நியாசி. அவர்தான் விக்கிரமனை இந்தப் பயங்கரமான காரியத்தில் தூண்டிவிட்டார்."

இதுவரை மௌனமாய் இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த குந்தவி இப்போது குறுக்கிட்டு, "உமக்கு எப்படித் தெரியும்? அந்தக் கபட சந்நியாசியை நீர் பார்த்திருக்கிறீரா?" என்று கேட்டாள்.

"ஆமாம், தேவி! இந்தக் கண்களாலேயே பார்த்திருக்கிறேன். இதோ சாதுபோல் நிற்கிறானே, இந்த ஓடக்காரனுடைய குடிசையில்தான் அவர்கள் அடிக்கடி சந்தித்துச் சதியாலோசனை செய்து வந்தார்கள். அந்தக் கபட சந்நியாசியின் சடையைப் பிடித்துக் குலுக்கி அவனை இன்னாரென்று வெளிப்படுத்த நான் பிரயத்தனம் செய்தேன். இந்தப் பொன்னனும் வள்ளியுந்தான் அதைக் கெடுத்தார்கள்."

"என் பேச்சை எடுத்தால் நாக்கை அறுத்துவிடுவேன்" என்று வள்ளி மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

சக்கரவர்த்தி அவளைப் பார்த்துப் புன்னகையுடன், "பெண்ணே! அடிக்கடி உன் உதடுகள் அசைகின்றன. ஆனால் வார்த்தை எதுவும் வெளியில் வரக் காணோம்! உனக்கு ஏதாவது சொல்ல வேண்டுமானால் பயப்படாமல் சொல்லு!" என்றார்.

உடனே வள்ளி சக்கரவர்த்தியைப் பார்த்துக் கும்பிட்டுக் கொண்டு, "பிரபோ! இவர் சொல்வதெல்லாம் பொய். சிவனடியார் இளவரசரைத் தூண்டிவிட்டார் என்பது பெரும் பொய். சாமியார் பெரிய மகான். அவர் அடிக்கடி வந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தபடியால்தான் எங்கள் மகா

ராணி இன்னும் உயிரோடிருக்கிறார். அவர் இளவரசரை, 'இந்தக் காரியம் வேண்டாம், வேண்டாம்' என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார். இளவரசருடைய மனத்தை மாற்ற முடியவில்லை. சாமியார் மேல் பொய்யாகக் குற்றம் சுமத்துகிறவர்கள் பாவிகள், சண்டாளர்கள்; அவர்கள் நரகத்துக்குத்தான் போவார்கள்...'' என்றாள்.

"நிறுத்து, பெண்ணே! போதும் சாபம் கொடுத்தது!" என்று சக்கரவர்த்தி சொல்லி, குந்தவியை நோக்கிப் புன்னகையுடன், "பார்த்தாயா, அம்மா!" என்றார்.



"பார்த்தேன்; அந்தச் சாமியாரின் மந்திரத்தில் இந்தப் பெண்ணும் நன்றாய் மயங்கிப் போயிருக்கிறாள்! இவர்களில் ஒருவராவது முழுதும் உண்மை சொல்வதாக எனக்குத் தோன்றவில்லை, அப்பா! ஒவ்வொருவரும் மனத்தில் ஒரு நோக்கத்தை வைத்துக் கொண்டு பேசுகிறார்கள்" என்றாள் குந்தவி.

அப்போது சக்கரவர்த்தி மாரப்ப பூபதியைப் பார்த்து, "பூபதி! உன்மேல் ஏற்பட்ட சந்தேகம் தீரவில்லை. போனால் போகிறதென்று இந்தத் தடவை மன்னித்து விடுகிறேன். சேனாதிபதி பதவிக்கு நீ இப்போது ஆசைப்படுவது வீண். அந்தப் பதவிக்கு உன்னுடைய தகுதியை இனிமேல்தான் நீ நிரூபிக்க வேண்டும். அதுவரையில் உன் பேரில் வேறு குற்றம் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும், தெரிந்ததா, இப்போது நீ போகலாம்!" என்று மிகக் கடுமையான குரலில் கூறினார். மாரப்ப பூபதி சப்த நாடியும் ஒடுங்கியவனாய் வெளியேறினான்.

அந்தச் சமயத்தில் ஒரு சேவகன் உள்ளே வந்து சக்கரவர்த்திக்கு அடிபணிந்து ஒரு ஓலையை நீட்டினான். சக்கரவர்த்தி அதை வாங்கிப் பார்த்ததும், "ஓடக்காரா! நீயும் உன் மனைவியும் இப்போது போகலாம். பிறகு உங்களைக் கவனிக்கிறேன். உன் மனைவியை அந்தச் சிவனடியார் விஷயத்தில் மட்டும் கொஞ்சம் ஜாக்கிரதையாயிருக்கச் சொல்லு! அவருடைய மந்திரத்தில் அவள் ரொம்பவும் மயங்கியிருக்கிறாள் போல் தோன்றுகிறது" என்றார்.

அப்போது வள்ளியின் முகத்திலே நாணத்தின் அறிகுறி தோன்றியது. திடீரென்று அது புன்னகையாக மாறியது. தலை குனிந்தவண்ணம் சக்கரவர்த்தியைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே அவள் பொன்னனைத் தொடர்ந்து வெளியே சென்றாள்.


சக்கரவர்த்தி அவர்கள் வெளியேறிய திசையைப் பார்த்த வண்ணம், "நானும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். இந்த வள்ளியைப் போல்...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

''அது இருக்கட்டும், அப்பா! ஏதோ ஓலை வந்ததே? அது என்ன!" என்று குந்தவி கேட்டாள்.

"போலிச் சிவனடியாரைப் பற்றி இத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்தோமல்லவா? உண்மையான சிவனடியார் இப்போது வருகிறார். நகருக்கு வெளியே சென்று அவரை நாம் எதிர் கொண்டழைத்து வரவேண்டும்" என்றார் சக்கரவர்த்தி.

"அவர் யார், அப்படிப்பட்ட உண்மையான சிவனடியார்? அப்பா! ஒருவேளை நமது அப்பர் பெருமானோ? அவரைப் பற்றி அன்று கொஞ்சம் அபசாரமாக நினைத்தேன். அடிகளை மறுபடியும் தரிசித்து அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்றாள் குந்தவி.

"குழந்தையாகிய நீ அபசாரமாக நினைத்ததனால் அவருக்கு என்ன குறைவு நேர்ந்து





அருள்வாக்கு

ஸத்யத்தை அறிவதே ஞானம் அல்லது வித்யா. 'வித்' என்றாலும் ஞானம் என்பது போலவே அறிவதுதான். மெய்யறிவே வித்யா. ஸத்ய ஞானமாயில்லாமல், இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும் தப்பாக அறியப் பண்ணுவதால் மாயைக்கு அவித்யா என்று பேர். ஆனாலும் இப்படி மாயா சக்தியுடன் சேர்ந்திருக்கிற நிலையிலுள்ள ஈச்வரன் அவனைப் பொறுத்தமட்டில் அஞ்ஞானியாக இல்லை. ''ஈசாந: ஸர்வ வித்யாநாம்'' என்பதாக அவனை வித்யைகளுக்கெல்லாமும் ஈச்வரனாகச் சொல்லியிருக்கிறது. நம்மை மாயையால் அஞ்ஞானியாக்கினாலும் அவன் அப்படியில்லை. மாயையை, அவன் வைத்துக் கொண்டிருக்கிறானாயினும், தானே அதில் கட்டுப்படாமல் வைத்துக் கொண்டிருக்கிறான்.

இதைத்தான், ''பாம்புக்குள்ளேயே தான் விஷப்பல் இருந்தாலும் விஷத்தால் அது பாதிக்கப்படுவதில்லை, அதனிடம் கடிபடுபவர்களை மட்டுமே விஷம் தாக்குகிறது. அதே மாதிரி, 'மாயி'யான, மாயாவியான ஈச்வரனை அவனுடைய மாயை பாதிக்காமல், அவன் அதை யாரைக் குறித்து ப்ரயோகிக்கிறானோ அந்த ஜீவ லோகத்தை மட்டும் பாதிக்கிறது'' என்று சொல்கிறார்கள். மாஜிக் பண்ணுகிறவன், தான் மாயா ஸ்ருஷ்டியாகப் பண்ணும் காட்சிகளை மற்றவர்கள் நிஜமென்று நம்பும் படியாக ஏமாற்றுச் செய்கிறானே தவிர, தானே அவற்றை நிஜமாக நினைத்து ஏமாற மாட்டானல்லவா? இப்படித்தான் மாயா ஜகத் ஸ்ருஷ்டிக்காரனான ஈச்வரனும் என்கிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

விடப் போகிறது? எப்போதும் சிவானந்தத்திலே திளைத்திருக்கும் மகான் அவர். கொஞ்சங்கூட அதைப் பற்றி உனக்குக் கவலை வேண்டாம், குழந்தாய்! இப்போது வரப் போகிறவர் அப்பர் பெருமான் அல்ல; பரஞ்சோதி அடிகள்."

"யார்? உங்களுடைய பழைய சேனாதிபதியா? உங்களுடன் வாதாபிக்கு வந்து புலிகேசியை வெல்ல உதவி புரிந்தவரா?"

"அவர் உதவி புரியவில்லை, குந்தவி! அவர்தான் புலிகேசியை வென்றவர்; புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல் கிளம்பிய சாளுக்கர் படைகளைத் துவம்சம் செய்தவர். அந்த மகாவீரர்தான் இப்போது அரையில் உடுத்த துணியுடன், விபூதி ருத்திராட்சதாரியாய் ஸ்தலயாத்திரை செய்து கொண்டு வருகிறார். தமது பெயரைக் கூட அவர் மாற்றிக் கொண்டு விட்டார். "சிறுத்தொண்டர்" என்று தம்மைச் சொல்லிக் கொள்கிறார்."

"அவர் ஏன் சேனாபதி பதவியை விட்டார்? அவருக்கு ரொம்ப வயதாகி விட்டதா?" என்று குந்தவி கேட்டாள்.

"இல்லை; அவருக்கு அப்படி ஒன்றும் வயசாகவில்லை. அவர் சேனாதிபதி பதவியை விட்ட காரணத்தை இன்னொரு சமயம் சொல்கிறேன். இப்போது அவர் வரும் நேரம் ஆகிவிட்டது" என்றார் சக்கரவர்த்தி.

"பிறகு, "குந்தவி! பரஞ்சோதியுடன் கூட அவருடைய தர்மபத்தினியும் யாத்திரை செய்து வருகிறார். அவர்களை எதிர்கொண்டழைத்து வரலாம்; நீயும் வருகிறாயா?" என்று கேட்டார்.

"அவசியம் வருகிறேன், அப்பா! அவர்களைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு எத்தனையோ நாளாக ஆசை!" என்றாள் குந்தவி.


22. சிறுத்தொண்டர்

உறையூருக்கு மேற்கே காவேரி நதியிலிருந்து சற்றுத் தூரத்தில் ஒரு அழகான தாமரைக்குளம் இருந்தது. அந்தி நேரமானபடியால், அத்தடாகத்தை அழகு செய்த தாமரை மலர்கள் எல்லாம் அச்சமயம் இதழ் கூம்பியிருந்தன. மேல் வானத்தைப் பொன்மயமாகச் செய்து கொண்டிருந்த சூரியன், சுழலுகின்ற தங்கத் தகட்டைப் போல், அதி விரைவாய்க் கீழே இறங்கிக் கொண்டிருந்தான்.

தாமரைக் குளத்தைச் சேர்ந்த படித்துறை மண்டபத்தில் சக்கரவர்த்தியும் அவருடைய செல்வப் புதல்வியும் வந்து தங்கியிருந்தார்கள். மண்டபத்துக்குச் சற்றுப் பின்னால் வேல் பிடித்த வீரர்கள் ஒதுங்கி நின்றார்கள். பட்டத்து யானையும், புரவிகளும் சிறிது தூரத்தில் காணப்பட்டன.

மேற்குத் திக்கிலிருந்து காவேரி ஆற்றின் ஓரமாக வந்த சாலையைச் சக்கரவர்த்தி ஆவலுடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

குந்தவி தடாகத்தின் படிக்கட்டில் இறங்



கிக் கீழ்ப்படியில் வந்து நின்றாள். தளதள வென்று விளங்கிய தாமரை இலைகளின் வனப்பையும், கூம்பிய தாமரை மலர்கள், மொட்டுகள் இவற்றின் அழகையும் அவள் சிறிது நேரம் பார்த்து மகிழ்ந்தாள். தாமரை இலைகளின் மேலே முத்து முத்தாகத் தண் ணீர்த் துளிகள் நின்றதையும், இளங்காற்றில் தாமரை இலைகள் அசைந்த போது அந்த முத்துக்கள் அங்குமிங்கும் ஓடிச் சில சமயம் ஒன்றோடொன்று கலந்தும், சில சமயம் பிரிந்தும் விளையாடியதையும் பார்த்துக் களித்தாள். அப்போது தடாகத்தின் தெளிந்த நீரில் பிரதிபலித்த அவளுடைய உருவ மானது தற்செயலாக அவள் பார்வையைக் கவர்ந்தது.

சந்தன நிறத் தந்தத்தினால் செய்தவை போல் விளங்கிய குந்தவியின் அழகிய நீண்ட புஜங்களும் பங்கஜ மலர்ப் பாதங் களும் பளிங்கு போல் தெளிந்த தண்ணீரிலே பிரதிபலித்த போது பன்மடங்கு வனப்பும் சோபையும் பெற்று விளங்கின.

குந்தவி தன்னுடைய பிரதி பிம்பத்தைத் தானே பார்த்தவண்ணமாகச் சற்று நேரம் ஸ்தம்பித்து நின்றாள்.

அந்தக் காட்சி, கைதேர்ந்த சிற்பி ஒருவன் செய்த அற்புத அழகு வாய்ந்த தந்தப் பதுமை ஒன்றை உயர்ந்த ஆடை ஆபரணங் களினால் அலங்கரித்து அக் குளக்கரையில் நிறுத்தி வைத்திருப்பது போல் தோன்றியது.

திடீரென்று தந்தப் பதுமைக்கு உயிர் வந்தது போல் குந்தவி ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டாள். அவளுடைய மேனி அழகைப்பற்றி அவளிடம் ஏற்கெனவே பலர் பிரஸ்தாபித்ததுண்டு. தாய்மார்கள் சொல்லி யிருக்கிறார்கள்; தோழிகள் அடிக்கடி கூறியிருக்கிறார்கள்; சித்திரக்காரர்களும் சிற்பிகளும் வியந்து பாராட்டியிருக்கிறார் கள். அப்போதெல்லாம் குந்தவி மேற்படி பாராட்டுதல்களைப் பொருட்படுத்தியதே யில்லை. ஆனால், இப்போது அவள் தன் மேனி அழகைப் பற்றித் தானே சிந்திக்கத் தொடங்கினாள். தோழிகள் அழகைப் பற்றிச் சொல்வதெல்லாம் வெறும் புகழ்ச்சியல்ல, விளையாட்டுமல்ல; உண்மைதான். ஆனால், ஆனால்....? "இந்த அழகினாலே என்ன பிர யோஜனம்?" என்று அவளுடைய உள்ளத் தில் ஒரு கேள்வி எழுந்தது. அடுத்தாற்போல் "ஆகா! அந்த இராஜகுமாரனுக்கு இந்த உறையூர்தானே? அவன் மட்டும் இப்போது என் அருகில் நின்று கொண்டிருந்தால்?...." என்னும் எண்ணம் உண்டாயிற்று. இதை அடுத்து இன்னதென்று விவரிக்கமுடியாத மனக் கிலேசம் ஏற்பட்டது.

"இந்த அலங்காரமெல்லாம் என்னத்திற் காக? நாளை முதல் ஆபரணம் ஒன்றும் அணிந்து கொள்ளக்கூடாது. இவற்றினால் என்ன பிரயோஜனம்? அழகு அதிகமாகி விடுகிறதா! இருக்கிற அழகு போதுமே?" என்றெல்லாம் சிந்தனைகள் தோன்றின. "இப்போதே இதையெல்லாம் எடுத்து எறிந்து விடுகிறேனே!" என்று தலையில் சூடியிருந்த ஆபரணங்களை முதலில் எடுக்கப் போனாள்.

அப்போது திடீரென்று அவளுடைய தந்தையின் குரல், "குந்தவி! இங்கே ஓடி வா!" என்று விரைந்து அழைத்தது காதில் விழுந் தது. தன்னை மறந்த சிந்தனையில் ஆழ்ந் திருந்த குந்தவி, திடுக்கிட்டுத் தந்தை இருந்த பக்கம் நோக்கினாள்.

"அதோ பார் குந்தவி, சிவிகை வருகிறது! என் அருமைச் சிநேகிதர் வருகிறார்! பல்லவ சேனாதிபதி வருகிறார்! சளுக்கரை முறி யடித்துப் புலிகேசியைக் கொன்ற மகா வீரர் வருகிறார்! உறையூருக்கு நாம் இந்தச் சமயம் வந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று!...."

இவ்விதம், ஊரிலிருந்து உறவினர் வரக் காணும், சின்னஞ்சிறு குழந்தையைப் போல் சக்கரவர்த்தி அளவற்ற உற்சாகத்துடன், சொல்லிக் கொண்டே போனார். அவர் அவ்வளவு குதூகலம் கொண்டதைக் குந்தவி அதற்கு முன்னால் கண்டதேயில்லை.

சிறிது நேரத்துக்கெல்லாம் சிவிகை தாமரைத் தடாகத்தின் அருகில் வந்து விட்டது. மண்டபத்தில் சக்கரவர்த்தி நிற் பதைக் கண்டதும் ஏவலாளர் சிவிகையை விரைந்து கீழே இறக்கினார்கள். அந்தச் சிவி கையிலிருந்து, தலையையும் முகத்தையும் நன்கு முண்டனம் செய்தவரும், விபூதி ருத்தி ராட்ச தாரியுமான பெரியவர் ஒருவர் இறங் கினார். அவருடன் ஒரு மூதாட்டியும் இறங் கினார்.

அந்தப் பெரியவர் "அரசே!" என்று சொல்லிக் கொண்டு மண்டபத்தை நோக்கி



விரைந்து வந்தார். சக்கரவர்த்தியும் "சேனாதிபதி!" என்று சொல்லிக் கொண்டு, மண்டபத்திலிருந்து விரைவாகக் கீழே இறங்கி வந்தார்.

சற்று நேரம் ஒருவரையொருவர் பார்த்த வண்ணமாகக் கூப்பிய கரத்துடன் நின்றார்கள். இருவருடைய கண்களிலும் நீர் ததும்பியது. பிறகு, ஏக காலத்தில் இருவரும் ஒருவரையொருவர் நெருங்கி வந்து ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். அப்போது இருவருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகி வழிந்து அருவியாக ஓடத் தொடங்கியது.

இதற்கிடையில், சிவிகையிலிருந்து இறங்கிய மூதாட்டியை நோக்கிக் குந்தவி வந்தாள். அவருக்குக் குந்தவி நமஸ்காரம் செய்ய யத்தனிக்க, அந்த அம்மையார் அதற்கு இடங்கொடாமல் அவளைத் தம்முடன் சேர்த்து அணைத்துக் கொண்டு, "குழந்தாய்! பிறை சூடும் பெருமானுடைய அருளால் உனக்கு எல்லா மங்களமும் உண்டாகட்டும். உன் மனதிற்கிசைந்த மணவாளனை அடைந்து தீர்க்க சுமங்கலியாக வாழ்வாய்!" என்று ஆசீர்வதித்தார். அவர் இவ்விதம் ஆசி கூறிய போது குந்தவியின் தேகத்தில் புளகாங்கிதம் உண்டாயிற்று.

பரஸ்பரம் ஆலிங்கனம் செய்து கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்த சக்கரவர்த்தியும், அவருடைய பழைய சேனாபதியும் சிறிது நேரத்துக்கெல்லாம் சற்று விலகி ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

"உறையூருக்கு நான் இச்சமயம் வந்தது எவ்வளவு அதிர்ஷ்டம்! இல்லாவிட்டால் உங்களைப் பார்த்திருக்க முடியாதல்லவா? நீங்கள்தான் என்னை அடியோடு மறந்து விட்டீர்கள்; காஞ்சிக்கு வருவதேயில்லை!" என்றார் சக்கரவர்த்தி.

"அரசே! தங்களை நான் மறந்து விடுவதா? தென்னாட்டில் நான் தரிசித்த ஒவ்வொரு ஸ்தலத்திலும் தங்களுடைய நினைவு எனக்கு உண்டாயிற்று. இந்தத் திவ்விய க்ஷேத்திர யாத்திரையில் தாங்களும் என் கூட இல்லையே என்று எவ்வளவோ வருந்தினேன். கடைசியாகப் பழனி மலையில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவனைத் தரிசித்த போதும் தங்களுடைய நினைவுதான் எனக்கு. அவருடைய சந்நிதியில் நான் விரும்பியது உடனே நிறைவேறி விட்டது. இங்கே வந்ததும் தங்களைப் பார்த்தேன்...."

"சேனாபதி!...."

"பிரபோ! என்னை அவ்விதம் அழைக்க வேண்டாம்!"

"பரஞ்சோதி!"

"அது என் பூர்வ ஜன்மப் பெயர்! அதை இப்போது கேட்கப் பிடிக்கவில்லை."

"கேளும், சிவபக்தரே!"

"அவ்வளவு பெருமைக்கு நான் உரியவன் அல்ல பிரபு! இன்று இந்நாட்டில் மகான்களான சிவபக்தர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொண்டு புரியும் சிறுத் தொண்டன் நான்!"

"கேளும் சிறுத்தொண்டரே! நான் சொல்ல வந்த விஷயம் என்னவென்றால்...."

"சொல்லுங்கள் அரசே!"

"இந்த உலகத்தில் நான் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் இன்னும் இரண்டு பாக்கியிருக்கின்றன. அவற்றை முடித்துவிட்டால், நானும் உங்களைப் போல் துறவு பூண்டு ஸ்தல யாத்திரை தொடங்கி விடுவேன். ஆனால் உங்களைப் போல் தலையை முண்டனம் செய்து கொள்ள மாட்டேன். பார்த்தவர்கள் வசிஷ்டரோ, விசுவாமித்திரரோ அல்லது அகஸ்திய முனிவர்தானோ - என்று பிரமிக்கும்படியான ஜடாமகுடம் தரிப்பேன்!" என்று சொல்லிச் சக்கரவர்த்தி நகைக்க, சிறுத்தொண்டரும் கூட நகைத்தார்.

அவ்விருவருடைய சிரிப்பின் ஒலியும், அந்தி நேரத்தில் கூட்டை நோக்கிப் பறந்த பறவைகளின் குரல்களுடன் கலந்து நாற்றிசையும் பரவி எதிரொலி செய்தன.

23. நள்ளிரவில்

அன்றிரவு ஏறக்குறைய ஒன்றரை ஜாமம் ஆனபோது உறையூர் நகரில் நிசப்தம் குடி கொண்டது. வீதிமுனைகளில் கல் தூண்களின்மேல் எரிந்து கொண்டிருந்த அகல் விளக்குகள் ஒவ்வொன்றாக மங்கி அணையத் தொடங்கின.

உறையூருக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் இடையில் சென்ற காவேரி நதியின்மேல் காரிருள் படர்ந்திருந்தது. அன்று சுக்கிலபட்சத்துச்



பாராளுமன்ற விசிட்டர் காலரிக்கும், பார்லிமெண்ட் ஹாலுக்கும் இடையே, அடுத்த பாராளுமன்றத் தொடர் ஆரம்பிக்குமுன், செயற்கை கண்ணாடித் திரை (புல்லட் புரூஃப்) பொருத்தப் போகிறார்கள். சமீபத்தில் 'உத்தராகண்ட் தீவிரவாதிகள் விசிட்டர் காலரியில் இருந்து ஹாலில் குதித்து விட்டதன் விளைவாக இந்த நடவடிக்கை. ஜனநாயகத்திற்கு எத்தனை பாதுகாப்பு தேவைப்படுகிறது பார்த்தீர்களா?

— பார்கவி

சதுர்த்தி. போதாததற்கு வானத்தைக் கரு மேகங்கள் மூடியிருந்தன. இரண்டொரு மழைத் தூறலும் விழுந்தது.

அத்தகைய காரிருளில் காவேரி நதியின் ஓரமாக ஜலத்தைக் கிழித்துக் கொண்டு படகு செல்லும் சலசலப்புச் சத்தம் கேட்டது. கொஞ்சம் உற்றுப் பார்த்தோமானால், ஒரு சிறு படகு கிழக்கேயிருந்து மேற்கே கரையோரமாகப் போவதைக் காணலாம். படகில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பதும் மங்கலாகத் தெரிகிறது. கரையில் நின்ற வண்ணம் ஒருவர், படகைக் கயிற்றினால் இழுத்துக் கொண்டு போவதும் புலப்படுகிறது.

இன்னும் கொஞ்சம் நெருங்கிப் பார்த்தோமானால், அவர்கள் இருவரும் நமக்குத் தெரிந்த புள்ளிகள்தான் என்பதைக் காண்கிறோம். வேறு யாருமில்லை; கரையிலிருந்து படகை இழுத்துக் கொண்டு போகிறவன் படகோட்டி பொன்னன். படகில் உட்கார்ந்திருப்பது வள்ளிதான். வள்ளியின் கையில் ஒரு சிறு கூடை இருக்கிறது. அதற்குள்ளே அகல் விளக்கு ஒன்று மினுக் மினுக்கென்று எரிகிறது. அது அணைந்து விடாமல் வள்ளி தன்னுடைய சேலைத் தலைப்பால் மறைத்துக் கொண்டு ஜாக்கிரதையாக எடுத்து வருகிறாள்.

அந்தக் கும்மிருட்டில் பிரவாகத்துக்கு எதிராகப் படகை மேற்கு நோக்கி இழுத்துக் கொண்டு போவது இலேசான காரியமில்லை. வழியில் படித் துறைகளும் நதிக்கரை மண்டபங்களும், ஓங்கி வளர்ந்து ஆற்றில் கவிந்திருந்த விருட்சங்களும் குறுக்கிட்டன. ஆனாலும் பொன்னன் சிறிதும் தளர்ச்சியடையாமல் மேற்படி தடங்கல்களையெல்லாம் தாண்டிப் படகை இழுத்துக் கொண்டு போனான்.

படகுக்குப் பின்னால் சுமார் முந்நூறு அடி தூரத்தில் ஒரு நெடிய உருவம் வந்து கொண்டிருந்தது. படகு நின்றபோதெல்லாம் அதுவும் நின்றது. படகு மேலே சென்றால் அதுவும் தொடர்ந்து வந்தது. கொஞ்சம் நெருங்கிப் பார்த்தால் இந்த உருவமும் நமக்குத் தெரிந்த மனிதனின் உருவந்தான் என்பதைக் காண்கிறோம். ஆமாம்; மாரப்ப பூபதிதான் அப்படிப் பொன்னனுடைய படகை நள்ளிரவில் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான்.

அவனுக்குப் பின்னால் இன்னும் கொஞ்ச தூரத்தில் அதே நதிக்கரை ஓரமாக இன்னொரு உருவம் சத்தம் செய்யாமல் வந்து கொண்டிருந்தது. ஜடா மகுடம் தரித்த சந்நியாசியின் உருவம் அது. ஆம், போர்க்களத்தில் பார்த்திபனுக்கு வரமளித்தவரும், பொன்னன் குடிசையில் நாம் சந்தித்தவருமான அதே சிவனடியார்தான்!

ஏறக்குறைய நள்ளிரவு ஆன சமயத்தில், பொன்னன் படகை நிறுத்தி மிகவும் மெல்லிய குரலில், "வள்ளி! இறங்கு! வந்து விட்டோம்" என்றான்.

அதே சமயத்தில், ஸ்ரீ ரங்கநாதரின் ஆலயத்தில் அர்த்த ஜாம பூஜைக்குரிய மணிச் சத்தம் 'ஓம்ஓம்' என்று கிளம்பி, நள்ளிரவின் நிசப்தத்தை மீறிக்கொண்டு, வானவெளியெங்கும் வியாபித்து எதிரொலி செய்தது.

பொன்னனுக்கும் வள்ளிக்கும் உடம்பு நடுங்கிற்று. "நல்ல சகுனம், வள்ளி! காரியம் ஜெயந்தான்! சீக்கிரம் இறங்கு!" என்றான் பொன்னன்.

வள்ளி விளக்குக் கூடையை ஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு படகிலிருந்து இறங்கினாள்.

பொன்னன் படகை அங்கிருந்த மரத்தின் வேரில் கட்டினான்.

பிறகு இருவரும் கரைமேல் ஏறினார்கள்.

அங்கே ஒரு நீண்ட மதிற்சுவர் இருந்தது. அந்தச் சுவரில் ஒரு வாசற்படி காணப்பட்டது. அதன் கதவு பூட்டியிருந்தது. பொன்னன் தன் மடியிலிருந்து ஒரு கொத்துச் சாவியை எடுத்து ஒரு சாவியினால் பூட்டைத் திறந்தான்.

இருவரும் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே பிரவேசித்தார்கள்.

'கம்'மென்று செண்பகப் பூவின் நறுமணம் வந்தது.

"பார்த்தாயா, வள்ளி! செண்பகப்பூவின் வாசனையை? இந்த அரண்மனைத் தோட்டத்துக்குள் இதற்கு முன் நீ வந்தது கிடையாதே?" என்றான்.

"இரையாதே!" என்றாள் வள்ளி.

பொன்னன் மறுபடியும் கதவைச் சாத்தி உட்புறம் தாளிட்டான்.

"பயப்படாதே! என் பின்னோடு வா!"

"நீ சத்தம் போடுவதில்தான் எனக்குப் பயம்."

இருவரும் அந்தச் செண்பகத் தோட்டத்துக்குள் புகுந்து சென்றார்கள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அதே மதில் வாசற்படியண்டை மாரப்ப பூபதி வந்தான். கதவின் வெளிப்புற நாதாங்கியை இழுத்து மாட்டினான்.

பிறகு அவன் நதியில் இறங்கிப் பொன்னன் மரத்தின் வேரில் கட்டியிருந்த படகை அவிழ்த்து ஆற்றோடு மிதந்து போகும்படி இழுத்துவிட்டான்.

பின்னர் மதிற்சுவர் ஓரமாக மிக விரைவாய் நடந்து சென்றான்.

படகு கரையோரமாக மிதந்துகொண்டு சிறிதுதூரம் போயிற்று. அங்கே வந்து கொண்டிருந்த சிவனடியார் அதைப் பிடித்து நிறுத்தினார். நிறுத்திய இடத்துக்கு அருகிலிருந்த ஒரு பெரிய விருட்சத்தின் வேரில் அதை இழுத்துக் கட்டினார்.

மறுபடியும் மேல்நோக்கிச் சென்று அதே மதிற்சுவரின் வாசற்படிக்கு வந்தார். மாரப்ப பூபதி இழுத்துப் போட்ட நாதாங்கியைக் கழற்றிவிட்டார்.

மீண்டும் திரும்பிச் சென்று படகு கட்டியிருந்த மரத்துக்குப் பின்னால் அமர்ந்தார்.

அச் சமயம் நதியின் அக்கரையில் அநேக தீவர்த்திகளுடன் கும்பல் காணப்பட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தத் தீவர்த்திகள் நதியின் நடு மத்திக்கு வந்துவிட்டன. பல படகுகள் நதியைக் கடந்து வந்து கொண்டிருந்தன என்று தெரிந்தது.

சிவனடியார் மறைந்திருந்த மரத்துக்குச் சிறிது கிழக்கே படகுகள் கரைக்கு வந்து சேர்ந்தன. படகுகளிலிருந்து பலர் இறங்குகிறது தீவர்த்திகளின் ஜோதியில் தெரிந்தது. அவர்களில் சிறுத்தொண்டரும், அவர் மனைவியாரும், குந்தவி தேவியும் காணப்பட்டனர். சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக உறையூரை ஆண்டு வந்த தளபதி அச்சுதவர்மர், அவர்கள் எல்லாருக்கும் முன்னால் சென்றார். மற்றப் பரிவாரங்களும் ஏவலாளர்களும் பின்னால் வந்தார்கள்.

ஸ்ரீ ரங்கநாதரின் அர்த்த ஜாம ஆராதனையைத் தரிசித்துவிட்டுத் திரும்பிய அந்தப் பக்தர் குழாத்தில் சக்கரவர்த்தி நரசிம்மவர்மரை மட்டும் காணவில்லை.

காவேரிக் கரையை ஒளிமயமாக்கிய தீவர்த்திகளுடன் அந்தக் கும்பல் படகிலிருந்து கரையில் இறங்கியபோது சிவனடியார் தாம் இருந்த மரத்தின் மறைவில் இன்னும் நன்றாய் மறைந்து கொண்டு அசையாமல் நின்றார். அவர் மூச்சுவிடும் சத்தம் கூட அப்போது கேட்கவில்லை.

தீவர்த்திகளுடனே அந்தக் கும்பல் நகருக்குள் புகுந்து மறைந்த பிறகு காவேரி நதிதீரத்தில் முன்னால் இருந்ததை விட அதிகமான கனாந்தகாரம் குடி கொண்டது.

சிவனடியார் மரத்தின் மறைவிலிருந்து மறுபடியும் வெளிவந்து நதிக்கரையில் படகின் அருகில் அமர்ந்தார். அந்தக் காரிருளிலுங்கூட மேற்கூறிய மதில் வாசலின் பக்கம் அவருடைய கண்கள் கூர்மையாகப் பார்த்தன. அவருடைய செவிகளும் கதவு திறக்கப்படும் சத்தத்தை எதிர்நோக்கிக் கூர்மையாய்க் கேட்கலாயின.

(தொடரும்)



— சிந்து கவி பாரதி

கருப்பு நிலா

உளருக்கு உழைக்கும் உத்தமர் குடும்பம். வில்லன்கள் சதியால் நடுத்தெருவுக்கு வரும் போது இன்டர்வல். உத்தமரின் உத்தமபுத்திரன் இரண்டு டூயட், நாலு சண்டைக்குப் பிறகு கொடியவர்களை ஒழிப்பதுடன் சுபம்.

லட்சம் படம் பார்த்திருப் போமா இதே ரீதியில்? லட்சத்தி ஒன்று.

தரமான இயக்குநர் (அரவிந்தராஜ்), ஏ-கிளாஸ் ஒளிப்பதிவாளர் ((ராஜராஜன்), சுகமான ரீ-ரெக்கார்டிங் (தேவா), பிரமாதமான எடிட்டர் (ஜெயச்சந்திரன்) - இத்தனை பேர் இருந்தும் ஆரம்பம் முதல் இறுதிவரை படம் அநியாயத்துக்கு நெளிய வைக்கிறது.

காரணம்? அடுக்கலாம் :

ஒரு முழு நீள மசாலாவுக்கு இத்தனை சென்ட்டிமென்ட் தேவையில்லை. தாலி, குங்கும சென்ட்டிமென்ட், காதல் தியாக சென்ட்டிமென்ட், மாமன் மகள் சென்ட்டிமென்ட் - இன்னும் சொல்லலாம்.

இவற்றோடு ஒட்டாமல் துப்பாக்கி, கார், மோட்டர் போட், ஹெலிகாப்டர் சேஸிங் இன்ன பிற.

போதாக்குறைக்கு அவசர அவசரமாக பிரேமானந்தா விவகாரத்தையும் சேர்த்து, கோர்ட் சீன், நாலு குயர் வசனங்கள், அநீதிக்கு எதிராகப் போர்க்கொடி என்று எத்தைத் தின்னால் பித்தம் தெளியும் என்று புரியாமல் திருதிருவென்று முழித்திருக்கிறார்கள்.

(மாதாஜி) திவ்யாவாக மாறும் ரஞ்சிதா ஒரு பரிதாபம். காதலித்த சூட்டோடு ஹீரோவை அவர் நிராகரிப்பது, டிராமா என்று உடனே உடனே சின்னக் குழந்தைக்குக் கூடத் தெரிந்து விடும். அதற்கான காரணங்களை அத்தனை நீளமாக கிளைமாக்ஸில் குண்டடி பட்டு திக்கித் திக்கி ஒப்பித்திருக்க வேண்டாம். கொட்டாவி வருகிறது.

மாறாக, குஷ்புவுக்கு நடிக்க ஒரு சந்தர்ப்பம். நிறைவாகச் செய்திருப்பது ஆறுதல். ஃபிலிம் சிட்டி கோவிலில் ரஞ்சிதாவோடு அவர் போடும் ஒரு சண்டை, ரசிப்புக்குரியது.

ஸ்ரீவித்யாவை கயிற்றால் கட்டி, ஹெலிகாப்டரிலிருந்து கடலில் முக்கி முக்கி எடுக்கும் உக்கிரமான



கிளைமாக்ஸ்தான் படத்தின் ஒரே நகைச்சுவைக் காட்சி. அம்மணிக்கு அனுதாபங்கள்.

கடைசியாக விஜயகாந்த். வயதானது முகத்தில் தெரிந்தாலும் சண்டைக் காட்சிகளில் இன்னும் அதே மாறாத வேகம். மற்றபடி காதலிக்கவோ, டூயட் ஆடவோ நேர்வது ரசிகர்களின் விதி.

வரிசையாக விஜயகாந்தின் எல்லா படங்களும் பெட்டிக்குள் முடங்கி வருகின்றன. இந்த ரீதியில் இன்னும் இரண்டு படங்கள் வந்தால் கூடிய சீக்கிரம் விஜயகாந்த், முன்னாள் நடிகராகி விடும் அபாயம் தெரிகிறது. கவனிக்கக் கடவது.

ஒரு ஊர்ல ஒரு ராஜகுமாரி

உத்தமமான, லேசாக அசடு தட்டும், பெண்மைச் சாயலுடன், கம்பீர ஆண்மையை கிளைமாக்ஸில் வழக்கமாக நிறுவும் பாக்யராஜ். இந்தப் படத்தில் தன்னைக் காதலிப்பவளை ஒதுக்கி வேறு யாரோ ஒருத்தியைத் துரத்துபவராக வருவதை ஜீரணிப்பது கஷ்டம்.

அதைவிடக் கஷ்டம், ஒரு ரிக்ஷாக்காரரின் வீரப் பேச்சைக் கேட்டு இவர் மனம் மாறுவதை ஏற்பது.



ஒரு கட்டத்தில் ஹீரோ, பாக்யராஜா அல்லது ரிக்ஷாக்காரர் சார்லியா என்கிற சந்தேகம் தவிர்க்க முடியாமல் எட்டிப் பார்க்கிறது.

முழுக்க முழுக்க தமாஷுக்குப் பழகிப் போன பாக்யராஜ் ரசிகர்கள் இந்த முக்கால் சீரியஸ் படத்தை எப்படி ஏற்பார்கள் என்கிற எண்ணம் எழுந்தாலும் ஒட்டுமொத்தக் கதையை நோக்க, உருப்படியாகவே வந்திருக்கிறது.

வேலை இல்லாது சிரமப்படும் பாக்யராஜுக்கு, பாட்டி ஆறுதல் சொல்கிறாள். "நீ பெரிய ஆளா வருவே. ஒரு ராஜகுமாரியைக் கல்யாணம் பண்ணிப்பே."

அங்ஙனமே ஒரு அரச பரம்பரைக் குடும்பத்தில் இவர் வேலை சேர்வதும் ராஜகுமாரி, வேலைக்காரி வேஷத்தில் இவரைக் காதலிப்பதுமாக முதல் பாதி ஆமை வேகத்தில் நகர்ந்தாலும் பின்னால் அசுர வேகம் வந்து விடுகிறது.

எங்கிருந்தோ ஒரு பாட்டியைப் பிடித்திருக்கிறார்கள். கன்னடமோ, தெலுங்கோ, மலையாளமோ கலந்த அவர் தமிழ் வெகு சுவாரஸ்யம். அந்தத் துள்ளலும், வேகமும், ஹைஜம்ப் தாண்டும் லாகவமும் இன்றைய ஹீரோயின் அம்மணிகளுக்குக் கூடச் சாத்தியமில்லை.

ஆரவாரப் பாட்டிக்குப் போட்டி போடும் அமைதியான மீனா. நடிப்பில் என்ன ஒரு மெச்சூரிட்டி! வேலை வாங்கியிருக்கும் பாக்யராஜுக்கே அத்தனை பெருமையும்.

படத்தின் மிகப் பெரிய பலம் அந்த கிளைமாக்ஸ். அடிதடி இல்லாமல் அலறும் இசை இல்லாமல் சுபாவமாகவே சீட் நுனிக்கு ஆளை வரவழைக்கும் அந்த முழு நீளப் பதினைந்து நகைச்சுவை நிமிஷங்கள் ஒரு சாதனை.

அப்புறம் இளையராஜா. இரண்டு பாடல்கள் தேன். படமெடுத்திருக்கும் விதம் சுமார் ரகமே. டெக்னிகலாகத் தன் படங்களில் எந்த ஜாலமும் கூடாதென்று பாக்யராஜ் கருதுகிறார் போலும். ஆறிப் போன தோசை மாதிரி மங்கலான கேமரா. மிக சுமாரான படப்பிடிப்பு மற்றும் தொகுப்பு.

வலுவான கதை என்ற வகையில் திருப்தி இருப்பினும் படம் முடிந்த பின்னும் ஏதோ ஒன்று குறைவது போல் தோன்றுகிறது.

யோசனைக்குப் பிடிபடாது போகும் அந்த 'ஏதோ ஒன்றை'க் கண்டறிந்து பாக்யராஜுக்கு ஒரு கார்டு போடுங்கள்.

அடுத்த படத்தில் அவருக்கு உபயோகமாக இருக்கும்.

- ஆர்.பி.ஆர்.

35 லட்சத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் இதுவரை யூடிஐ-யின் மாஸ்டர் ஈக்விடி திட்டங்களில் நம்பிக்கை வைத்திருந்தனர்.

யூ டி ஐ இப்பொழுது அளிக்கிறது

மாஸ்டர் ஈக்விடி ப்ளான் '95

மாஸ்டர் ஈக்விடி ப்ளான் '95 (MEP '95)— இந்திய சாதனையின் ஈக்விடி இணைந்த சேமிப்புத்திட்டத்தின் கீழ் உள்ள இது 93 வளர்ச்சி மற்றும் வரிசேமிப்பும் அடங்கிய திட்டம் ஆகும் திட்டத்தின் பங்கீடு 26.12.94 லிருந்து தொடக்கம்.

இத்திட்டம் உங்களுக்கு இரட்டிப்பு வாய்ப்பை அளிக்கிறது வரிசேமிப்பு மற்றும் வளர்ச்சி. நவீர திரும்ப விற்கும் சலுகை மற்றும் பேஷர் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சில் லாக்-இன் கால அவதிக்குப் பிறகு லிஸ்ட் செய்யப்படும். ஆகிய எளிதில் ரொக்கமாக்கும் வசதி.

லாபங்கள்

- வருமான வரி பிரிவு88-ன் கீழ் ரூ. 10,000 வரையுள்ள தொகைக்கு 20% வரி சேமிப்பு.
- குறைந்தது 80% ரொக்கத்தை ஈக்விடி மற்றும் ஈக்விடியை சார்ந்த துறையில், உங்களுக்கு பணத்தை திரும்பப் பெறும் போது நியாயமான மூலதன அபிவிருத்தி கிடைக்கும் குறிக்கோளை பூர்த்தி செய்வதற்காக, முதலீடு செய்யப்படும்.

சிறப்பம்சங்கள்

- இந்திய வசிக்கும் எல்லா தனிநபர், சிறு பிராயத்தினர், இந்து கூட்டு குடும்பத்தினர் மற்றும் ஏஓபி (AOP) திட்டத்தில் பங்கு பெறலாம்.
- இது ஒரு 10 வருட திட்டம்.
- பிரதி யூனிட்டின் முகவிலை ரூ.10 சமமிலையில் அளிக்கப்படும்.
- குறைந்தபட்ச முதலீடு - 50 யூனிட்டுகள் பிறகு 50 யூனிட்டுகளின் மடங்கில். அதிகபட்ச எல்லை கிடையாது.

யூடிஐ-யின் MEP திட்டங்களின் கடந்த கால சாதனை

திட்டம்	பங்கீடு செய்த தேதி	1-12-94 அன்று NAV
MEP'91	31-3-91	ரூ. 38.09
MEP'92	31-3-92	ரூ. 20.91
MEP'93	31-3-93	ரூ. 19.95
MEP'94	31-3-94	ரூ. 11.15

- ரூ.10,000 வரை உறுதியான பங்கீடு. அதற்கு மேலே உள்ள பங்கீடு முழுவதின் விருப்பத்தை சார்ந்தது. பங்கீட்டளிப்பின் தேதி மார்ச் 31, '95
- பங்கீட்டளித்த தேதியிலிருந்து 3 வருடம் வரை லாக்-இன் காலமாகும். (ELSS-ல் குறிப்பிட்டுள்ளபடி)
- லாக்-இன் காலமுறைக்குப் பிறகு-

i) பேஷர் ஸ்டாக் எக்சேஞ்சில் விற்கும்.

ii) NAV மதிப்பு சார்ந்த விலையில் திரும்ப வாங்கும் வசதி.

iii) உரிமை மாற்றம்/பிரமாணம்/அடகு வைப்பதற்கு அனுமதி.

சீக்கிரம் பங்கு பெறுவோர்க்கு ஊக்கப்பரிசு

1.5% - '94 டிசம்பர் 26 லிருந்து '95 ஜனவரி 30 வரை

1.0% - '95 ஜனவரி 31 லிருந்து '95 பிப்ரவரி 28 வரை

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் மேலான எதிர்காலத்திற்கென

மியூச்சுவல் பண்ட் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் எல்லா முதலீடுகளும் மார்க்கெட் சம்பந்தப்பட்ட அபாயங்களுக்கு உட்பட்டவை. NAV ஏற்ற தாழ்வுகள் ஷேர் மார்க்கெட்டுகள் நிலவும் காரணங்களுக்கேற்ப மேலேயோ கீழேயோ போகலாம். கடந்த கால சாதனை வருங்கால நிகழ்வுக்கான அறிகுறி அல்ல. மாஸ்டர் ஈக்விடி திட்டம் 1995 என்பது திட்டத்தின் பெயர் மட்டுமே தவிர திட்டத்தின் தரத்தையோ வருங்கால வளர்ச்சி அல்லது வாய்ப்புகளையோ குறிப்பிடவில்லை. திட்டத்தின் குறிக்கோள்களை அடையும் உத்தரவாதத்தையும் அளிக்கவில்லை. முதலீடு செய்வதற்கு முன் ஆஃபர் டாகுமெண்டை கவனமாக படிக்கவும் அல்லது முகவரை கலந்தாலோசிக்கவும்.

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • சென்னை. போன்: 517101, 517190 • மதுரை. போன்: 38188 • திருச்சி. போன்: 27080.
• கோயம்புத்தூர். போன்: 214973.

இந்த அளிப்பு '94 டிசம்பர் 26 லிருந்து '95 மார்ச் 31 வரை.

SISTAS-UTI-160/94 TA B

மணிக்கொடி

ஜோதிர்லதா கிரிஜா

கங்காதரன் நுழையக் கதவு திறந்தவன் பவித்திராதான். இருவரும் ஒருவரையொருவர் விழுங்கி விடுகிறாற்போல் பார்த்துக் கொண்டார்கள். பின்னால் காலடியோசை கேட்டதும், சட்டெனத் திரும்பிய பவித்திரா, இயல்பாக இருக்கும் முயற்சியில், "மழை வரும் இன்னிக்கு. ஏன் இத்தனை நாளா வரவே இல்லே?" என்றவாறு நடந்தாள்.

"ரொம்ப வேலை. நிறையப் படிக்க வேண்டி இருந்தது. ரமணிக்கு வேற உடம்பு சரி இல்லையே? அதான்" என்று காலடியோசைக்குரிய அமராவதிக்கும் சேர்த்துச் சொன்னபடி அவனும் அவளுக்குப் பின்னால் நடந்தான்.

"பாவம் பையன்" என்றபடி ராஜாராமனும் அங்கு வந்து உட்கார்ந்தார். "என்னமோ நெனச்சுப் புறப்பட்டான். அது எப்படியோ முடிஞ்சுடுத்து. அந்த ரவுடிகளோட சண்டை போடாம, பேசாம கைப்பணத்தை எடுத்துக் குடுத்திருந்தான்னா இது மாதிரி ஆயிருக்காது."

"ஆனா அது கோழைத்தனமில்லையா, மாமா?"

"உண்மைதான் கங்கா. அஹிம்சைங்கிறது அநீதிக்குப் பணிஞ்சு போறதில்லேன்னு இப்போ நீயும் ரமணியும் நன்னா புரிஞ்சிண்டிருக்கணுமே. காந்திஜியின் சாத்துவீகப் போராட்டம் பத்தி உங்க அபிப்பிராயமே மாறியிருக்கணுமே?"

"கொஞ்சம் கொஞ்சமா புரியறது மாமா. நேத்து கூட அப்பா ஒரு விஷயம் சொன்னார். நம்ம காந்தி உசிருக்கெல்லாம் வெள்ளைக்காரனால எந்த ஆபத்தும் வராது. இப்ப கொஞ்ச நாளா அமளிப் பட்டுண்டு கிடக்கிற முஸ்லிம் லீக், இந்து மகாசபா இது மாதிரியான அமைப்புக்களாலதான் காந்தி மாதிரி தலைவர்களுக்கு ஆபத்து அப்படின்னு."

"ஆனாலும், இப்படி நமக்குள்ள பிளவு பண்ணினது வெள்ளைக்காரனோட கைங்கரியந்தானே? அவன் நேரடியாக் கொல்ல மாட்டான். நமக்குள்ளே சண்டை மூட்டி விட்டு அடிச்சிண்டு சாவுங்கடான்னுடுவான். சிப்பாய்க் கலகத்தின் போது கூட ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இருந்த ஒற்றுமையைப் பார்த்ததும்தானே வெள்ளைக்காரனுக்கு அடி வயித்துல கலக்கம் உண்டாச்சு? அதனோட விளைவுதான் அவன் சில முஸ்லிம் தலைவர்களைக் கூப்பிட்டு, அவா மனசைக் கலைச்சு, தனித் தொகுதி ஆசையெல்லாம் காட்டினது. வடக்கே எத்தனை இந்து - முஸ்லிம் கலவரங்கள்! எத்தனை சாவுகள்! நாசங்கள்!



பிரிச்சு ஆள்ற சூழ்ச்சியில வெள்ளைக் காரனை மிஞ்சவே முடியாதுப்பா."

"இப்ப ப்ராமின் - நான்ப்ராமின் பிளவு வேற வந்துண்டிருக்கே, மாமா? காங்கிரஸைக் கூட பிராமணாளோட இயக்கம்னு பேசிக்கிறால்ல?"

"பேசிக்கிறாதான். அதுல பிராமணா மெஜாரிட்டியா இருக்கிறதுனால அப்படித் தாண்டா பேசுவா, கங்கா. ஆனா நிறைய நான் - பிராமின்களும் அதுல இருக்காப்பா. திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், முத்துரங்க முதலியார், ஈ.வே. ராமசாமி நாயக்கர், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, வ. உ. சிதம்பரம் பிள்ளை, மாடசாமிப்பிள்ளை, கேளப்பன், வேலாயுதம், செண்பகராமன் பிள்ளை, முத்துக்குமாரசாமிப்பிள்ளை, சிங்காரவேலு செட்டியார் இப்படி எத்தனையோ பேரை அடுக்கிண்டே போகலாம். அது சரி, நீ என்ன பண்றதா இருக்கே?" என்றார் ராஜாராமன்.

கங்கா திகைப்புடன் அவரை நோக்கினான். 'இவருக்கு நம் விஷயம் தெரியுமா?' என்பது போல் பவித்ராவைத் திரும்பிப் பார்ப்பதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

47

அந்த வெள்ளைக்கார ஊழியன் துப்பாக்கியை உருவி எடுப்பதற்காக நொடிக்குள் தனது இடுப்புப் பட்டியில் கை வைத்ததைக் கவனித்த சில கைதிகள் ஒருசேர அவன் மீது விழுந்து அம் முயற்சியிலிருந்து அதைத் தடுத்து விட்டார்கள். இதற்குள் சேதி பரவ, கொஞ்சமும் தாமதமின்றி உயர் அதிகாரி அவ்விடம் வந்து சேர்ந்தார்.

நடந்ததை மல்ஹோத்ரா ஆத்திரத்துடன் அவருக்கு விளக்கினான்.

"எங்கள் நிலையில் உங்களை வைத்துப் பாருங்கள், சார்! மூத்திரத்தில் கையைக் கழுவி விட்டுச் சாப்பிடு என்று இந்த மனிதர் சொல்லிச் சிரிக்கலாமா?"

"மிஸ்டர் நிக்கல்சன்! நீங்கள் எனது அறைக்குச் செல்லுங்கள்," என்று முதலில் உத்தரவிட்ட அந்த அதிகாரி அலெக்சாண்டர், "இனி ஒரு தொட்டியில் தண்ணீர் வைக்கப்படும். ஆனால் நீங்கள் சிக்கனமாகத் தண்ணீரைச் செலவு செய்ய வேண்டும். நிக்கல்சனின் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறி அவர்களையெல்லாம் வியப்பிலும் அவர் பற்றிய மதிப்பிலும் ஆழ்த்திய பின் அங்கிருந்து நீங்கினார். கைதிகள் யாவருக்கும் உடனேயே கை கழுவ அங்கிருந்த தொட்டி தண்ணீரால் நிரப்பப் பெற்றது.

"அந்த நிக்கல்சனைப் பற்றிச் சாதாரணமாக நினைக்காதீர்கள். அவன் பொல்லாதவன். இன்று நடந்ததை மனத்தில் கொண்டு நிச்சயமாக நமக்கு - முக்கியமாக உங்களுக்கு பெரிய தொல்லைகள் தரக்கூடியவன். இனி அவன் வம்புக்குப் போகாதிருப்பது உங்களுக்கு நல்லது." என்று பழைய கைதி ஒருவன் நரேந்திரநாத்திடம் எச்சரித்தான்.

இன்னொருவன், "இன்று அசம்பாவிதம் ஏதும் நடக்காததை வைத்து நீங்கள் நிம்மதியாக இருந்து விட வேண்டாம். நிக்கல்சன் பழிவாங்கும் பாம்பு. இன்று அவனை அடக்கி வைத்த மிஸ்டர் அலெக்சாண்டர் கூடிய விரைவில் வேறு இடத்துக்கு மாற்றலாகிப் போய் விட இருப்பவர். அடுத்து எவன் வருவானோ தெரியாது. அவன் இந்த நிக்கல்சனைப் போன்றவனாக இருப்பின், நாம் தொலைந்தோம். அதனால் பொறுமையாக இருக்க வேண்டும்..." என்றான்.

பவித்ராவிடம் தான் கொண்டிருக்கும் காதலைப் பற்றித்தான் கேட்கிறாரோ என்று ஒருகணம் திகைத்தபின் ராஜாராமனுடைய கேள்வியின் உட்கிடையைக் கங்கா புரிந்து கொண்டான்.

"நான் ஏற்கெனவே தீர்மானிச்சுட்டது தானே, மாமா? வடக்கே போயிடலாம்னு இருக்கேன். அங்கதான் தீவிரவாதிகள் -

அவா பயங்கரவாதிகள்ங்கிறதை நான் ஒத்துக்க மாட்டேன் - நிறைய அளவில செயல் பட்டுண்டு இருக்காங்க. தெற்கே கம்மியாத் தான் இருக்கு. அங்க போனாதான் உருப் படியா ஏதாவது செய்ய முடியும்" என்று பதில் சொன்ன அவனது விழிகள் கணம் போல் பவித்திராவின் மேல் பட்டு விலகின.

அஞ்சனாவும் அமராவதியும் அவ்விளங் காதலர்களின் மீது மாற்றி மாற்றி விழி களைப் பதித்துக் கொண்டிருந்தனர்.

"நானுந்தான் புறப்பட்டுப் போயிட லாம்னு இருக்கேன், தாத்தா."

"ஏதோ விளையாட்டாப் பேசற பேச் சுன்னு நினைச்சிண்டிருந்தேன். நிஜமா வேவா சொல்றே? படிப்பை முடிச்சுட்டுத் தானே?"

"ஆமா, தாத்தா."

"அப்ப முதல்ல கங்கா போயிடுவான். அடுத்தாப்ல நீயா? இத பாரு, பவித்ரா. ஒரு இளமை ஆவேசத்துல நீங்க ரெண்டு பேரும் தப்பான முடிவுக்கு வந்திருக்கேள். நானும் ஒரு காலத்துல தீவிரவாதியா இருந்தவன் தான். இப்ப நிறைய மாறிட்டேன். பயங்கர வாதத்தால எதையும் சாதிக்க முடியாது. அப்படி சாதிக்க முடிஞ்சாலும் அந்த வெற்றி யெல்லாம் தற்காலிகமானதாத்தான் இருக் கும். நிரந்தரமான வெற்றி வேணும்னா அதுக்குக் காந்தி வழிதான் நல்லது."

"நீங்க பேசறது வேடிக்கையா இருக்கு, மாமா. அமைதியாக் கோஷம் போடறதும், ஊர்வலம் போறதும் அப்புறம் அதுக்காக ஜெயில்ல இருந்துட்டு ரிலீசாறதுமா சுதந்திரம் வாங்கிக் குடுக்கும்?"

"காலப் போக்குல நிச்சயமா வாங்கிக் கொடுக்கும்."

"போங்க, மாமா. நீங்களும் உங்க காந்தி யும்! இந்தியன் பயத்துனால திருப்பி அடிக் காம இருந்தா என்ன, இல்லே சகிப்புத் தன் மையால திருப்பி அடிக்காம இருந்தா என்ன? அதனோட விளைவு என்னமோ ஒண்ணுதான். இந்தியன் பயந்தாங்கொள் ளின்னுதான் வெள்ளைக்காரன் முடிவு கட்டுவான். அதனால அவனுக்குக் கொழுப் பும் திமிரும் இன்னும் ஜாஸ்திதான் ஆகும். நீங்க காந்திக்கு வக்காலத்து வாங்கறது எனக்கு வேடிக்கையா இருக்கு. இப்ப திலகர் போயாச்சு. அதனால இனி நாங்க சுபாஷ் சந்திரபோஸைத்தான் நம்பறதா இருக்கோம்."

"அவரும் பெரிய தலைவர்தான். நான் மறுக்கல்லே. ஆனா வெறுங்கையை ஓங்கி வெள்ளைக்காரனை விரட்ட முடியுமா?"

"அதுக்குத்தான் தீவிரவாதிகள் அங் கங்கே வெடிகுண்டு தயாரிக்கிறா. ராஷ்

பிகாரி கோஷ் இப்ப ஜப்பான்ல இருக்கார். மேடம் காமா கோஷ்டி பிரான்ஸ்ல இருக்கு. செண்பக ராமன் ஜெர்மனியில இருக்கார். அமெரிக்காவில தலைமை அலுவலகத்தோட ஜப்பான், பிலிப்பைன்ஸ், மலேயா, சீனா இந்த நாடுகள்ளேயெல்லாம் கிளைகளோட கதர் பார்ட்டி செயல்பட்டுண்டு இருந்தப்ப எவ்வளவு பெரிய புரட்சியை இந்தியாவில 1915 ஆம் வருஷம் நடத்தறதுக்கு இருந்தது அந்த இயக்கம்? பல அயல்நாடுகளுடைய ஒத்துழைப்போட சீக்கியர்கள் பெருவாரியான அளவில இருந்த அந்த கதர் பார்ட்டி ராஷ்பிகாரி கோஷ் தலைமையில இந்தியா பூரா ஒரு பெரும் புரட்சிக்குத் திட்டம் போட்டது உங்களுக்குத் தெரியுமோல்லியோ? அந்த வருஷம் பிப்ரவரி மாசம் 21-ஆந் தேதி இந்தியா முழுக்க வெடிச்சிருக்க வேண்டிய அந்தப் புரட்சி கடைசியில புஸ்வாணமாயிடுத்து. கிர்பால்சிங்குங்கிற துரோகியால நிறைவேறாமயே போயிடுத்து. ஆனாலும், அதுக்கு அப்புறம் வெள்ளைக்காரன் அடிவயித்துல ஒரு கிலி ஏற்பட்டுத் தானே இருக்கணும்? வெற்றிகரமா நடந்திருக்க வேண்டிய இன்னொரு சிப்பாய்க் கலகம்னா அது?"

"ஒத்துக்கறேன். ஆனா அது புஸ்வாணமானதோட விளைவு என்ன? அந்த லாகூர் சதித் திட்டத்தால எத்தனை இளைஞர்கள் தூக்கில தொங்கினா? எத்தனை பேர் நாடு கடத்தப்பட்டா? இதெல்லாம் அந்த இளைஞர்களுக்கும் அவாளைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் எவ்வளவு பெரிய சோகம்? இதெல்லாம் காந்தி வழியில போனா இல்லே தானே? காந்தி வழிங்கிறது சிறுகச் சிறுக நிலையான வெற்றி. உங்க வழியில போனா கிடைச்சாலும் கிடைக்கலாம், இல்லே இப்ப சொன்ன லாகூர் சதித் திட்டம் மாதிரி புஸ்வாணமாப் போனாலும் போயிடலாம்."

"இதெல்லாம் அந்தக் காலத்து அத்தைப் பாட்டி உபதேசங்கள். இந்தக் காலத்துல எடுபடாது."

"வெள்ளைக்காரங்கள்லாம் நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி அன்னிபெசன்ட் ஒரு கேள்வி கேட்டாங்க - முதல் உலகப் போர் ஆரம்பிச்சப்போ. 'எத்தனையோ நாடுகளை அடிமைப்படுத்தி வெச்சிருக்குற உனக்கு ஜெர்மனியை சர்வாதிகார நாடுன்னு சொல்றதுக்கு வெக்கமாயில்லையா? முதல்ல இந்தியாவை விடுவிச்சுட்டுன்னா நீ மத்த அடிமை நாடுகள் பத்திப் பேசணும் அப்படின்னு கேட்டாங்களே. அவனால என்ன பதில் சொல்ல முடிஞ்சுது?"

"மாமா, அவனால பதில் சொல்ல முடியல்லேங்கிறது இந்தியாவுக்கு சுதந்திரம் வர வழி வகுத்துடாது. அவனுக்குச் சூடு சொரணை இருந்தா உடனேயே இந்தியாவுக்கு சுதந்திரம் குடுத்திருப்பானே? குடுக்கலியே? இதிலேருந்து என்ன தெரியறது? அடி ஒண்ணுக்குத்தான் அவன் மசிவான்னு தானே?"

"இல்லே. அன்னிபெசன்ட் மாதிரியும், பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் மாதிரியும், லெனின் மாதிரியும் இன்னும் பல உலகத்தலைவர்களும் ஒட்டுமொத்தமாப் பிரிட்டனைக் குற்றவாளிக் கூண்டுல நிறுத்திப் பேசவும் எழுதவும் தொடங்கினதும், அவமானம் தாங்காம ஒரு நாள் அவன் மூட்டையைக் கட்டிடுவான்."

இருவரும் சண்டை போடாத குறையாகச் சொல்லாடியதைக் கேட்டு ரசித்தபடி இருந்த அமராவதி, "போறும், போறும். திருப்பித் திருப்பி அதையேதான் ரெண்டு பேரும் சொல்லிண்டிருக்கப் போறேள். நிறுத்துங்கோ. காது வலிக்கிறது" என்றாள் விளையாட்டாகக் காதைப் பொத்தியபடி.

"அப்பா, காந்தி சொல்ற வழியும் இல்லாம கங்கா ஆதரிக்கிற சூர்யாசென் வழியும் இல்லாம, ரெண்டுக்கும் நடுவாந்தரமா ஒரு வழி இருக்குன்னு தோணறதுப்பா" என்றாள் அஞ்சனா.

"என்னம்மா?"

"கர்னல் நீல்ங்கிற வெள்ளைக்காரனோட வெண்கலச் சிலையை சமீபத்துலே சேதப்படுத்தினோமே, ஆளுக்கு ஆள் மாத்தி மாத்தி? அதைச் சொல்றேன். காந்தி வழி மாதிரி மசமசன்னும் இல்லே; பயங்கரவாதம் போல் ரத்தம் சிந்த வைக்கிற வழியும் இல்லே."

"பெரிம்மா! சிப்பாய்க் கலகத்தப்ப அந்த நீல் பண்ணாத அக்கிரமம் இல்லியாமே?" என்று கேட்டாள் பவித்ரா.

"ஆமாம்மா. இங்க மெட்ராஸ் ரெஜிமென்ட்லேருந்துதான் அவன் சிப்பாய்க் கலகத்தப்ப அனுப்பப்பட்டிருக்கான். போற வழியிலயெல்லாம் கூட அவன் பண்ணின அக்கிரமங்கள் கொஞ்ச நஞ்சமில்லையாம். தேமேன்னு இருந்த மனுஷாளையெல்லாம் சுட்டுத் தள்ளிண்டே போயிருந்திருக்கான். வழியில எத்தனையோ கிராமங்களுக்கெல்லாம் தீ வெச்சு நாசப்படுத்தி இருக்கான். சிப்பாய்க் கலகத்துல அவன் ஒரு தீரனா நடந்துண்டான்னு சொல்லி இங்க மவுண்ட் ரோட்ல அவனுக்குச் சிலை வெச்சான் வெள்ளைக்காரன். மாவீரன், வீரமரணம் அடைஞ்சான்னெல்லாம் அவனோட சிலைக்குக் கீழே புகழ்மொழி வேற. 'அதுல

புகழ்ங்கிற வார்த்தைக்கே இடமில்லே, புகழ்ங்கிற வார்த்தையையே கொச்சைப்படுத்தறது'ன்னு காந்தியே எழுதினார். தினம் ரெண்டு ரெண்டு பேராப் போய் அந்தச் சிலையைச் சேதப்படுத்தினா. ஆனா உடைக்க முடியல்லே. காந்தி கூட, 'உடைக்க முடியல்லேன்னா களிமண்ணை அதும் மேல அப்புங்கோ'ன்னார்னா பாத்துக்கயேன்! சிலையைச் சேதப்படுத்தினவா எல்லாருக்கும் ஜெயில் தண்டனை கிடைச்சுது... தென்னாற்காட்டைச் சேர்ந்த முருகப்படையாச்சியும் அவரோட மனைவி அஞ்சலையம்மாளும் கைக் குழந்தையோட ஜெயிலுக்குப் போனா!"

சற்றுப் பொறுத்து ராஜாராமன் சொன்னார் : "என்னைக் கேட்டா பவித்ரா வடக்கே போய் தீவிரவாதியா மாறக் கூடாதுன்னுதான் சொல்லுவேன். அஞ்சனா கூட ஏதேதோ பண்ணி இருக்கா. ஆனா உன்னை மாதிரி ஊர் விட்டு ஊர் போய்த் துப்பாக்கி ஏந்துவேன்னு அவ புறப்படல்லே. ஏதோ உள்ளூர்லயே இருந்துண்டு கூட்டங்களுக்குப் போய்ப் பேசறது. பிரசாரம் பண்றது. துண்டுப் பிரகரங்கள் விநியோகிக்கிறது இது மாதிரி பண்ணிண்டிருந்தா. இன்னைத் தேதி வரையிலும் பண்ணிண்டிருக்கா. படிக்காத ஜனங்களுக்கு தேசபக்தியை ஊட்றது தேச விடுதலைப் போராட்டத்தோட சேர்த்தி தான். நீ என்ன சொல்றே, கங்கா?"

"ஒருவிதத்துல நான் உங்க கட்சி, மாமா. பெண்கள் இது மாதிரி காரியங்களுக்கெல்லாம் லாயக்கில்லே. நம்ம பவித்ராவுக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணிடுங்கோ!"

இவ்வாறு பதில் சொன்ன கங்கா அங்கிருந்த யாவரையுமே சில கணங்களுக்கு வாயடைத்துப் போகச் செய்து விட்டான்.

சில நொடிகளுக்குப் பிறகு அமராவதியும் அஞ்சனாவும் பவித்திராவைக் கவனித்த போது அவள் முகத்தில் ஒரு கடுமை தென்பட்டதைப் புரிந்து கொண்டார்கள். ராஜாராமன் கூடச் சிரித்தபடி பவித்திராவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இத பாரு, கங்கா. நீ ஒண்ணும் என்னோட சொந்த விஷயத்துல எல்லாம் தலையிட வேண்டாம், அபிப்பிராயமும் சொல்ல வேண்டாம். நான் உன் பெர்சனல் விஷயத்துல ஏதாவது பேசறேனா?" என்று பவித்திரா அவனைப் பார்த்து ஆத்திரமாக வினவினாள்.

அஞ்சனாவும் அமராவதியும் சாடையாக ஒருவரை ஒருவர் நோக்கிப் புன்னகை புரிந்து கொண்டார்கள்.

(தொடரும்)

பிறந்த நாள், ஆண்டு விழா, மற்றும் 'அப்பாயிண்ட்மெண்ட்' இவைகளை நினைவில் கொள்ளாத நபர்களுக்காக.

"லக்ஷ்மி ஸ்டார்"
ஆட்டமாடிக்காக உங்கள்
குறைந்த கால
டிபாசிட்களை
புதுப்பிக்கும் திட்டம்

சேவையில் - நட்புடன்

LVB

'லக்ஷ்மி ஸ்டார்'

46 நாட்களுக்கு ஆட்டமாடிக்காக புதுப்பிக்க வசதி கொண்ட டிபாசிட் திட்டம்.

குறைந்த கால டிபாசிட்களை புதுப்பிக்காமல் வட்டி இழந்த நாட்களை மறந்து விடுங்கள்!


'லக்ஷ்மி ஸ்டார்' இந்த குறையை நீக்கி ஆட்டமாடிக்காக புதுப்பித்து வட்டி ஈட்டு தொகையில் இடைவெளி ஏற்படாமலும், நீங்கள் விரும்பும் கால வரம்பு வரைக்கும் புதுப்பிக்க உதவுகின்றது.

'லக்ஷ்மி ஸ்டார் டெபாசிட் திட்டம்'


ஏனென்றால் - உங்களின் அதிக வட்டி ஈட்டு தொகையில் என்றும் எங்கள் கவனம்.

ஜி.வி. ராவ்
சேர்மன்.

லக்ஷ்மி விலாஸ் வங்கி லிமிடெட்.
சேலம் ரோடு, காத்தப்பாறை,
கரூர் - 639 006. தமிழ்நாடு.



பகுதி பணம்
எடுத்தல்.



உயர்வான சேவையை நட்புடன் [illegible] — L.V.B



• கோபாலசுவாமி

கஸ்தூரிபாவின் சண்டை போட்டவர்!

தலைசிறந்த காந்தியவாதி, சுதந்திரப் போராட்ட வீரர் ஜம்னாலால் பஜாஜ். இவர் பெயரில் வழங்கப்படும் ஜம்னாலால் பஜாஜ் விருதினை இம்முறை பெறும் நால்வரில் ஒருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். பெயர் : எல். என். கோபாலசுவாமி. வயது 92, லால்குடிக்காரர். சட்டம் படித்து விட்டு, வக்கீலாக பிராக்டீஸ் செய்யத் துவங்கியபின், சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காகப் பதினைந்து மாதம் சிறைத் தண்டனை பெற்றார். விடுதலையான பிறகு, 'இனி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட மாட்டேன்' என்று உறுதி மொழி எழுதித் தர வேண்டுமென்று கேட்ட போது, இவர் மறுத்து விட, விளைவு : கோபாலசுவாமி வக்கீல் தொழில் பார்க்கத் தடைவிதிக்கப்பட்டது.

அப்போதே கருப்புக் கோட்டுக்கு முழுக்குப் போட்டு விட்டு, முழு நேர சுதந்திரப் போராட்ட வீரராகி விட்டார்.

●● *1925-ல்*, லால்குடி பஞ்சாயத்துத் தலைவராக இருந்த போது, உள்ளூர் பள்ளிக்கூடத்தில் வரலாற்றிலேயே முதல் தடவையாய், நகர சுத்தித் தொழிலாளியின் மகனைச் சேர்த்துக் கொண்டார். பலத்த எதிர்ப்பை இவர் சமாளிக்க வேண்டியிருந்தது.

●● கதர் மீது அபார ஆர்வம் கொண்டு, திருச்சியில் ஒரு கதர் கண்காட்சியை முன்னின்று நடத்தினார். இதற்கென இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று பலவிதமான கதர்த் துணிமணிகளை வாங்கி வந்து, விற்பனைக்கு ஏற்பாடு செய்தார். கண்காட்சிக்கு நுழைவுக் கட்டணம் ஓரணா (ஆறு பைசா). திரளான மக்களைக் கவர்ந்திழுத்த அந்தக் கண்காட்சி மூலம் ஆறாயிரம் ரூபாய் நிகர லாபம் கிடைத்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

●● அந்தக் காலத்திலேயே அரிஜனங்கள் மேம்பாட்டுக்காக, தனிப் பள்ளிகள், ஹாஸ்டல்கள் திறந்ததுடன், அவர்களுக்குச் சொந்த கிராமத்திலேயே சுயமாய் தொழில் செய்ய உதவியாய் தொழிற் பயிற்சி அளித்தார்.

திருவாங்கூர் சமஸ்தானத்தில், ஹரிஜனங்கள் கோவில்களினுள் அனுமதிக்கப்பட்டவுடன், மதுரை மற்றும் சுற்றுப்புறங்களிலிருந்து இரண்டு பஸ் நிறைய அரிஜனங்களை ஏற்றிக் கொண்டு, கேரளாவின் பல கோவில்களுக்கும் சென்று, கடவுள் தரிசனம் செய்வித்ததோடு மதுரை மீனாட்சி கோவிலில் அரிஜனங்களுடன் நுழைந்து, பரபரப்பூட்டியவர் கோபாலசுவாமி. இதற்காக அவர் மீது வழக்கு தொடரப்பட்டு, ஏழு வருடங்களுக்கு கேஸ் இழுத்தது. கடைசியில் அவர் விடுவிக்கப்பட்டார்.

●● கஸ்தூரிபா உடன் வர திருச்சி வந்திருந்த காந்தியும், கோபாலசுவாமியும் கொள்ளிடம் ஆற்றை நடந்து கடக்கும் போது, செருப்பைக் கழற்றிய காந்திஜியிடம், அவரது காலணிகளைத் தாம் எடுத்து வருவதாய் கோபாலசுவமி கூற, கஸ்தூரிபா, "நான்தான் எடுத்து வருவேன்" என்று சொல்ல, இருவருக்கும் வாய்ச் சண்டை முற்றி விட்டது. "வீண் சண்டை எதற்கு? கஸ்தூரிபாவே எடுத்து வரட்டும் என்று காந்திஜி கூற, நான் சமாதானமடைந்தேன்" என்று நினைவுகூர்கிறார் கோபாலசுவாமி.

— மௌலி

குமுறல்

பெண்கள் பெட்டியில் வசைபாடும் ஆண்கள்!

கொடுமையைத் தான் நீக்க முடியவில்லை; மனிதாபிமானமாவது காண்பிக்கலாமே?

சென்னை-40, எஸ். அனந்தராமன்

●● குடும்பக் கட்டுப்பாடு நாட்டுக்கு அவசியமானது தான். இரண்டாவது கருத்துக்கு இடமிருக்க முடியாது... ஆனால் அதற்குரிய சாதனங்களை சில நிறுவனங்கள் விளம்பரம் செய்யும் போது, படமும் விளக்கமும் ஆபாசத்தின் எல்லைக்கே போய் விடுகின்றன. சில பத்திரிகைகள் இந்த வண்ண விளம்பரங்களைக் குழந்தைகளுக்கான பக்கங்களின் அருகிலேயே வெளியிடுவது வேதனையை அதிகரிக்கிறது. கட்டுப்பாட்டினை வளர்ப்பதுதான் சமுதாயத்துக்கு நல்லதே தவிர, உணர்வுகளைக் கட்டவிழ்த்து விட உதவுவதல்ல.

மதுரை, பேபி.

●● நெடுஞ்சாலைத் துறை, சாலைகளில் நிறுவியுள்ள போர்டுகளில் ஆங்கிலம் அறவே நீக்கப்பட்டு வருகிறது. தமிழ் மட்டுமே காணப்படுகிறது. பிற மாநிலங்களிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும் வருவோருக்கு இது எவ்வளவு அவதி! 'மும்மொழித் திட்டம் முடியாது; இரு மொழித் திட்டம் தான் ஏற்போம்' என்றவர்கள், இப்போது 'ஒரு மொழித் திட்டமே போதும்' என்று தீர்மானித்து விட்டனர் போலும். நாளை இதையும் அழித்து விடாமலிருந்தால் சரி!

திருப்பூர், என்.ரவிச்சந்திரன்.

●● வட இந்திய சம்பிரதாயம் பிரகாரம் ஒருவேளை மட்டும் சாப்பிட்டு விட்டு கல்யாணம் ஆன கையுடன் பெண்ணை அழைத்துக் கொண்டு போய் விடுகிறார்கள். மராட்டியர், செலவைச் சரிபாதி ஏற்றுக் கொண்டு வரப்போகும் நாட்டுப் பெண்ணுக்கு நகை செய்து போடுகிறார்கள். நாமோ ஆசார்ய சுவாமிகள் பெயரை அழைப்பிதழில் போட்டு விட்டு வரதக்ஷிணை, பட்டுப் புடைவை, காப்பி என்று ஏகப்பட்ட செலவை செய்து விட்டுக் கடன்காரனுக்குப் பதில் கூற முடியாமல் தவிக்கிறோம். எப்போது திருந்தப் போகிறோம்?

பூனா, இந்திரா ராகவன்.

●● சென்னை நகர மின் ரயில்களில் பெண்களுக்கென்று இரண்டே கம்பார்ட்மெண்டுகள்தான். அவற்றிலும் இரவு ஏழு மணிக்கு மேல் ஆண்கள் ஏறி விடுகின்றனர். ஆண்கள் அமர்ந்திருக்க பெண்கள் நின்று கொண்டு பயணம் செய்யும் நிலை கூட உண்டு. எதிர்த்துக் கேட்டால், "நீ என்ன உத்தமியா? பத்தினியா?" என்று வசைபாடும் ஆண்கள் பலர். ஒரு ஞாயிற்றுக் கிழமை பெண் போலீஸார் பெண்கள் பெட்டியில் இருந்த ஆண்களை இறங்கச் சொன்ன போது, அவர்களுக்கும் இதே மாதிரி வசை மாரிதான் கிடைத்தது! "முதலில் போய் புடைவை உடுத்து" என்று பண்பாடு பேசியது பண்பு கெட்ட இளவட்டமொன்று. நல்லவேளை, அந்தப் பெண் போலீஸிடம் பலமும் துணிவும் இருந்தது.

சென்னை - 15, லதா ராமகிருஷ்ணன்.

●● சமீபத்தில் நான் பயணம் செய்த அம்பேத்காரில் தச்சு வேலை செய்யும் ஒரு சிறுவனை டிக்கெட் வாங்க வில்லை என்று செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் அபராதம் செலுத்தச் சொன்னார்கள். முன்புறமாக ஏறியிருந்த அந்தச் சிறுவன், "கண்டக்டர் வரக் காத்திருக்கேன் சார்" என்று எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. கடைசியில் அவனிடம் அபராதத் தொகை அளவுக்குப் பணமில்லை என்பதை உணர்ந்து அவனை இறக்கிவிட்டு விட்டு பஸ் மேலே சென்றது. எட்டாம் வகுப்பு வரை படிக்கும் பள்ளிச் சிறுவர் சிறுமியருக்கு இலவச பாஸ் வழங்கப்படுகிறது. டான்பாஸ்கோ, ஆதர்ஷ் போன்ற பள்ளிகளில் படிக்கும் வசதி படைத்த பிள்ளைகள் கூட இந்தச் சலுகையை அனுபவிக்கிறார்கள். பாவம், ஏழைத் தொழிலாளிச் சிறுவர்களுக்கு அந்தச் சலுகை தரக்கூடாதா? குழந்தைத் தொழிலாளர் என்ற

செலவு மெய்ப்பட வேண்டும்

கிருஷ்ணா

"அதோ பாரு காரு
காருக்குள்ளே யாரு
எங்கமாமா நேரு
நேரு என்ன சொன்னாரு
நல்லாப் படிக்கச் சொன்னாரு."

– என் மடியில் அமர்ந்திருந்த அகிலா தன் ஸ்கூல் பாட்டை மழலையில் பாடிக் கொண்டிருந்தாள்.

வாசல்படியில் அமர்ந்திருந்த எங்களுக்கு எதிர்ப்புறம் கறுப்பு அம்பாசிடர். இருட்டத் தொடங்கிய மாலை நேரம்.

"என்னங்க?"

பின்புறம் பானுவின் குரல் கேட்டுத் திரும்பினேன்.

"நம்ம முனியம்மாவுக்கு முப்பது ரூபாய் வேணுமாம்" என்றாள்.

நான் கழுத்தை நன்கு திருப்பி நோக்கினேன். பானுவின் பின்பக்கம் சற்று தள்ளி முனியம்மா நின்றிருந்தாள்.

எங்கள் வீட்டு வேலைக்காரி! முகத்தில், கடன் கேட்கிற அசட்டுக் கெஞ்சல் களை, பணம் கிடைக்குமா என்ற கவலை ரேகைகள்.

"எதுக்கு?" என்றேன் எரிச்சலாய். இன்று தேதி இருபத்தி மூன்று. மாசக் கடைசி. பிய்ந்து போன செருப்புடன் நடக்கும் அவஸ்தையாய், மிச்ச நாட்களை ஓட்ட வேண்டிய கட்டாயம்.

"பிள்ளைக்குப் பொறந்தநாளு ஐயா" என்றாள் தணிந்த குரலில்.

"நாளையோட ஒரு வயசு ஆகுதாம் அவ பிள்ளைக்கு. புது சட்டை எடுக்கணும்னு ஆசைப்படறா" என்று ஆதரவாய்ப் பேசிய பானுவை முறைத்தேன்.

சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வரும்!

"இதே பிழைப்பாய் போச்சு" என்றேன் கடுமையாய். என் கையில் காசில்லாத இயலாமையை அந்தக் கடுமையில் மறைக்க முயன்றேன்.

எழுதிய கதை திரும்பி வந்த எழுத்தாளனின் முகமாய், கூம்பிப் போய் முனியம்மா தலைகுனிந்தபடி என்னைத் தாண்டிக் கொண்டு வெளியேறினாள்.

"இல்லைங்கறதையும் கொஞ்சம் இதமாய் சொன்னால் என்னவாம்?" என்று நொடித்து விட்டு பானு உள்ளே சென்று விட்டாள்.

காலையில் காலிங் பெல் சுப்ரபாதம் பாட எழுந்தோம்.

கதவைத் திறந்தால், அட!

எனது சித்தி பையன் ரமேஷ், தன் குடும்ப சகிதம் ஆஜராகியிருந்தான். குடும்பம் என்றால், அவன், மனைவி, மகள், மகன் என்ற நால்வர் அணி.

அவனை வரவேற்ற போது ஒரு பக்கம் சந்தோஷமும், மறுபக்கம் யாரிடம் கடன் கேட்பது என்ற சிந்தனையும் மனதினுள் ஓடியது.

வருடத்துக்கு ஒருமுறை வருபவன். டெல்லியில் வேலை. அகிலாவுக்கு அழகான கௌன் மூன்று, எனக்கு மார்க்கெட்டில் புதிதான ரேசர் செட், பானுவுக்கு உடையாத பிளேட் செட் என்று டேபிளில் அடுக்கி வைத்தான்.

அகிலா, புது கௌனை உடனே போட்டு விடச் சொல்லி அடம்பிடித்தாள். பானுவுக்கு முகமெல்லாம் பூரிப்பு. இனாமாய் டேபிள் ஸ்பூன் கிடைக்கிறது என்றால் இருபது ரூபாய் கொடுத்து, ஒழிசலான சோப்புத்தூள் வாங்குகிறவளுக்கு, நேர்த்தியான டிசைனில் பிளேட் கிடைத்தால் கேட்கவா வேண்டும்.

"என்னங்க" என்று என்னைத் தனியாய்த் தள்ளிக் கொண்டு போனாள்.

"உங்க சட்டைப் பையிலே நூறு ரூபாய் இருந்ததே..."

சி.பி.ஐ.யில் இருந்திருக்க வேண்டியவள்!

"ஐயையோ, அது என் பணம் இல்லை. ஆபீஸ்ல நம்ம சந்துருவிடம் கொடுக்கச் சொல்லி..."

"ப்ச, நாளைக்குப் பிரச்னை நாளைக்கு. இன்னிக்கு நீங்க லீவு போட்டுடுங்க. அந்த ரூபாயிலே கொஞ்சம் சாமான்..." என்று பட்டியலிட்டாள்.

முப்பத்தெட்டு ரூபாய் சில்லறைக்கு சாமானுடன் வீடு திரும்பினேன்.

"இன்னிக்கு மதிய சாப்பாடு ஹோட்டலில் என் செலவு" என்று ரமேஷ் சொன்னதும் கடுப்பாகிப் போனேன். முப்பத்தெட்டு ரூபாய் சாமான் எனக்கு 'இன்வென்டரி'யாகி விட்டதே!

காலை டிபன் கேசரி, பொங்கல் என்று பானு அமர்க்களப்படுத்தினாள். அவளுக்குப் பிடித்த விருந்தாளி வந்தால் மட்டுமே நல்ல சமையலைத் தருபவள்.

மதியம் ஆட்டோவில் பயணித்து ஹோட்டலை அடைந்தோம். சாப்பாட்டுக்கு ரமேஷ் பொறுப்பேற்றுக் கொண்டதால், ஆட்டோ செலவு என் தலையில்.

இல்லாவிட்டால் அல்பமாகி விடமாட்டேனா?

சும்மா சொல்லக்கூடாது. நல்ல ருசியான சாப்பாடுதான். பாம்பே ஸ்பெஷல் மீல்ஸ். ஒரு சாப்பாட்டின் விலை முப்பது ரூபாயாம்.

ரமேஷ் பர்சைத் திறந்து அலட்சியமாய் வீசினான் பணத்தை. ரிசர்வ் பாங்கில் கொள்ளையடிக்கிறானா? பருவப் பெண் போல செழிப்பாய் புடைத்திருந்த பர்சை ஒருவித பொறாமையுடன் பார்த்தேன்.

மீண்டும் ஆட்டோ, வீடு திரும்புதல், என் செலவில் குலுக்கலுடன், சாப்பிட்ட சாப்பாடு நன்றாய் கலக்க வீடு திரும்பினோம்.

ரமேஷ் உடனே கிளம்ப அவசரப் பட்டான். அவன் மனைவியின் அத்தை பெண் பக்கத்து ஊர். உடனே கிளம்பி விட்டனர் பக்கத்து ஊருக்கு.

"என்னங்க"

மீண்டும் பானு என்னை ஓரம் கட்டினாள்.

"நல்ல பிளவுஸ் துணி வாங்கிட்டு வாங்க. மீட்டர் நாற்பது ரூபாயாய் இருக்கட்டும். உங்க கருமித்தனத்தை காட்டிடாதீங்க" என்று எச்சரித்து அனுப்பினாள்.

மஞ்சள், குங்குமம், பிளவுஸ் பிட், பழத்துடன் விடைபெற்றனர் ரமேஷ் அண்ட் கோ.

புயலடித்து ஓய்ந்த அமைதி.

"அம்மா..."

முனியம்மா உள்ளே நுழைந்தாள். இடுப்பில் குழந்தை.

"ஐயா, கொழந்தையை ஆசிர்வாதம் பண்ணுங்க. பையன் நல்லாப் படிச்சு உங்களை மாதிரி உத்யோகம் பார்க்கணும்னு" என்று தரையில் கிடத்தினாள்.

"என் மாதிரி உத்யோகமா?"

கேலியாய் சிரிப்பு என்னில் தோன்றியது.

"ப்பா, ப்பா..." என்று குப்புறப் படுத்திருந்த குழந்தை எழ



முயன்றது.

"கோடி வீட்டு ஐயர் வீட்டம்மா கொடுத்துச்சு. அதோட பேரன் சட்டையாம். சின்னதாப் போச்சாம். செகப்பு கலர்ல ஷோக்காய் இருக்கான்" என்றாள் பெருமையுடன்.

இருப்பதை, கிடைப்பதை வைத்து திருப்திபடும் ஏழை.

சட்டென எனக்குள் வெட்கம் சூழ்ந்தது. சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்தேன். ஆட்டோ, பிளவுஸ், மளிகை செலவெல்லாம் போக இருபது ரூபாய் தெரிந்தது.

எடுத்து, குழந்தை கையில் திணித்தேன். ஆச்சரியமாய் முனியம்மாவும், பானுவும் என்னை நோக்கினர்.

ஹோட்டலில் சாப்பிட்ட சாப்பாடு இப்போதுதான் ஜீரணமாகத் தொடங்கியது.



• ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் படத்தில் ஒரு காட்சி



• பென் கிங்ஸ்லி (படம்: பிரவீண்குமார்)

ஓர் இயக்கத்திற்காக உழைத்த உணர்வு...

மூன்று மணி நேரங்களுக்கு நம் மனத்துள் புயல் போலத் தாக்கும் படைப்பு. படம் முடிந்து வெளியே வரும்போது உணர்ச்சி மிகுதியால் பேச்சற்றுப் போகிறோம். நீண்ட நெடும் நாட்களுக்கு நம்மை விட்டு அகலாது இந்தப் படத்தின் பாதிப்பு.

'ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்'- ஏழு அகடமி விருதுகள் பெற்ற ஆங்கிலத் திரைப்படம். ஹிட்லர் காலத்தில், யூதர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பின்னணியாக்கும் கதை. சமீபத்தில் இப்படத்தை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

இப்படத்தில் கதாநாயகனின் உதவியாளனாக நடிப்பவர் பென் கிங்ஸ்லி. காந்தி புகழ் நடிகர். பிரிட்டனில் பிறந்த இவருடைய பூர்விகம் குஜராத்! தந்தையின் மூதாதையர்கள் குஜராத்திகள். அம்மா ஒரு நடிகை; ஃபாஷன் மாடல்...

சென்னை வந்திருந்த பென் கிங்ஸ்லியைச் சந்தித்த போது...

நாம் அறிந்த நடிகர்களுக்குரிய எந்த வித ஆரவாரங்களும் இல்லாத சராசரி தோற்றம். தொழில் ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்திய தெளிவான பேச்சு. கல்கிக்கு கிங்ஸ்லி அளித்த பிரத்யேகப் பேட்டி:

கேள்வி: எத்தனையோ திரைப் படங்களில் வன்முறையையும் கொடுமைகளையும் பார்த்து விட்டோம். அவை அநேகமாக நம்முள் அருவருப்பைத் தான் ஏற்படுத்தியுள்ளன; ஆனால் ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் படத்தின் வன்முறை மட்டும் நம்மை அளவற்ற அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறது. ஒவ்வொரு வன்முறைச் செயலும் வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுப்பதாக நமக்குத் தோன்றுகிறது. இந்த நுட்பமான வித்தியாசம் எப்படி சாத்தியமாயிற்று என்று நினைக்கிறீர்கள்?

பதில்: இப்படத்தில், வன்முறைக்கு ஆளாகி, கொல்லப்படும் யூதர்கள் ஒவ்வொருவரும் முதலில் நமக்கு அன்னியோன்னியமாய் அறிமுகமாகிறார்கள். 'இந்த மனிதர் எவ்வளவு எளிமையானவர், இனிமையானவர்!' என்று ஒரு பதிவு நமக்குள் ஏற்படுகிறது. இப்படி ரத்தமும் சதையுமாக நமக்கு அறிமுகமாகும் ஒரு நபர் கொடூரமாகக் கொலையுறும்போது அதிர்ச்சி முகத்தில் அறைவது போல் தாக்குகிறது. இன்னொரு சிறப்பு அம்சம் காமெராவின் கண்ணியம். நம் குழந்தைகள் கொடூரமான காட்சிகளைப் பார்க்க நேரும் போது, 'ச்சுக்கு! பார்க்காதே!' என்று சட்டென்று அவர்களுடைய முகத்தைத் திருப்பி விடுவோம், இல்லையா? அதே மாதிரி இந்தப் படத்தில், கொடூரமான காட்சிகளிலிருந்து 'சட்'டென்று காமெராவைத் திருப்பி விடுகிறார் டைரக்டர் ஸ்டீவன் ஸ்பீல்பர்க். மிக கவனமாக edit செய்ததும், தகுந்த நடிகர்களைத் தேர்ந்தெடுத்துப் போட்டதும் கூட இந்த effect கிடைக்க உதவியுள்ளன.

கே: இப்படத்தைப் பார்த்தவர்கள் அதன் பாதிப்பிலிருந்து சுலபத்தில் மீள முடியாது. பார்த்தவர்களையே இந்த அளவுக்கு உலுக்கும் ஒரு படம் அதில் ஊறி, அமிழ்ந்து நடித்தவர்களை ரொம்பவும் பாதித்திருக்கும் இல்லையா? உங்களால் அந்த கனத்திலிருந்து எப்படி மீண்டு வர முடிந்தது?

பதில்: இப் படத்தில் நடிக்கும்போதே, கொலையுண்ட ஆயிரமாயிரம் யூதர்களின்

ஆன்மாக்கள் 'எங்கள் கதையைச் சொல்லு, அழுத்தமாகச் சொல்லு...' என்று எங்களை நிர்ப்பந்திப்பதைப் போல் உணர்ந்தோம். அதனால் அந்த சூழலையும் உணர்வுகளையும் உதறுவது சுலபமாக இருக்கவில்லை. நீண்ட காலத்துக்கு, நான் ஏற்ற 'இட்ஷாக் ஸ்டெர்ன்' என்ற யூதரின் கதாபாத்திரம் எனக்குள்ளேயே புதைந்து இருந்தது. முதல் முறையாக ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோது, என்னை அறியாமல் நான் சினிமா ஸ்டெர்ன் போல நடப்பதை உணர்ந்தேன். மிகவும் முயன்றுதான் என் நடையை இயல்பாக்கிக் கொள்ள முடிந்தது. இப்போதும், அப்படத்தில் என்னுடன் பணியாற்றியவர்களைச் சந்திக்கும்போது அந்த கனமான உணர்வுகள் திரும்புகின்றன. ஓர் இயக்கத்துக்காகப் பாடுபடுபவர்களாக எங்களை உணர்கிறோம்.

கே: மனிதனுக்கு மனிதன் இழைக்கும் கொடுமையை எதிர்த்துக் குரல் கொடுக்கும் இயக்கங்கள் ஒரு பக்கம் நடந்தாலும், மிக மிக வலுவான திரைப்படங்கள் எடுக்கப்பட்டாலும் கொடுமைகள் தொடர்கின்றன. யூதர்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகள் நீடிக்கின்றன. இனப் பிரச்னைகள் புதிது புதிதாய் முளைத்த வண்ணம் இருக்கின்றன. இதெல்லாம் உங்களுக்குச் சோர்வூட்டவில்லையா? சோர்வை எப்படி ஜெயிக்கிறீர்கள்?

ப: கொடுமைகள் தொடர்வதைப் பற்றி அறியும்போது ஆழ்ந்த வருத்தம் ஏற்படுகிறது. ஆனால் அதே காரணத்தால்தான் நாங்கள் இன்னும் வேகத்துடன் செயல்படுகிறோம். நாங்கள் வெளிப்படுத்த நினைக்கும் செய்தியின் முக்கியத்துவம் அதிகரிக்கிறது. பழிக்குப் பழி என்கிற விஷ வட்டத்தை எப்படி தகர்த்து எறிவது என்ற கேள்வி எழுந்தாலும் நாங்கள் சொல்வதைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டேதான் இருக்க வேண்டும்... ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் படமாக்கப்பட்ட போதே, போலந்தில் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில், எங்கள் யூனிட்டின் யூத நடிகர் ஒருவர் தாக்கப்பட்டார்... இதற்கெல்லாம் சோர்ந்து விடாமல் மன உறுதியுடன் இருக்கத்தான் வேண்டும். அப்போதுதான் சமுதாயத்துக்குத் தெளிவூட்ட முடியும்.

கே: சினிமாவினால் சமுதாயத்துக்குத் தெளிவு பிறக்கும் என்று நீங்கள் உண்மையில் நம்புகிறீர்களா?

பதில்: ஓரளவு தெளிவு தர முடியும். 'நெருப்பு சுடும்' என்று ஒரு குழந்தைக்குச் சொல்வதுபோல் நாம் சில விஷயங்களை சினிமா மூலமாகச் சொல்லிப் புரிய வைக்கலாம். ஆனால் குழந்தை தன் ஆயுள் முழுதும் சுட்டுக் கொள்ளாமல் இருக்கும் என்பதற்கு நாம் உத்தரவாதம் அளிக்க முடியாது இல்லையா?

கே: ஜுராஸிக் பார்க் போன்ற கற்பனை சாகசங்களை வழங்கிய ஸ்டீவன் ஸ்பீல்பர்க் தான் ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் போன்றதொரு நெஞ்சைப் பிழியும் நிஜ நிகழ்வையும் சொல்லியிருக்கிறார். இந்த இயக்குனர் பிற்காலத்தில் ஜுராஸிக் பார்க் வழங்கியவராக நினைவு கொள்ளப்படுவாரா? அல்லது ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட் படைப்பாளராகப் பேசப் படுவாரா?

பதில்: நிச்சயமாக 'ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்'தான் நிலைத்த புகழை அவருக்குத் தரும். இதுவரை ஸ்பீல்பர்க் எடுத்த படங்களிலேயே அற்புதமானது இதுதான்.

கே: சற்று பின்னோக்கிப் போய் 'காந்தி' திரைப்படம் பற்றி ஒரு கேள்வி... அந்தப் படத்தைப் பார்த்த இந்தியர்கள் யாரேனும் மிகவும் பாதிக்கப்பட்டு உங்களுக்கு அந்த பாதிப்பை தெரிவித்தார்களா?

பதில்: படப்பிடிப்பின்போதே நடந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது... காந்தியின் பேரன் அன்று செட்டுக்கு வருவதாகச் சொன்னார்கள். அன்று 75 வயது காந்தியாக நான் மேக் அப் போட்டிருந்தேன். வரப் போகும் நபர் என்னை எப்படி எடை போடுவார்? தமது தாத்தாவுடன் என்னை ஒப்பு நோக்கி என்ன சொல்லுவார்; என்றெல்லாம் ரொம்பக் கவலையாக இருந்தது. ராஜ் மோகன் காந்தி வந்தார். ரிச்சர்ட் (அடன்பரோ) அவருக்கு வலது புறம்; நான் இடது புறம் உட்கார்ந்திருந்தேன். சற்றைக்கெல்லாம் ரிச்சர்ட் எழுந்து போய்விட்டார். சிறிது நேரம் அங்கே கனத்த மௌனம் நிலவியது. பிறகு ராஜ்மோகன் என்னிடம் சொன்னார்: "கண்ணுக்குப் புலப்படாத சக்திகள் உங்களுக்கு வழி காட்டிக் கொண்டிருக்கின்றன; உங்களுக்கு என் வாழ்த்துக்கள்." இதைத் தவிர அவர் வேறெதுவும் பேசவில்லை; எழுந்து போய் விட்டார். உணர்ச்சி மயமான அந்த சில நிமிடங்களை நான் ஒரு மேலான அனுபவமாக நினைக்கிறேன்.

கே: இந்தியத் திரைப்படங்கள்- சராசரிப் படங்கள் - பார்த்திருக்கிறீர்களா? அவை பற்றி உங்கள் கருத்து...?

ப: சென்ற முறை இந்தியா வந்தபோது பம்பாயில் ஒரு ஹிந்தி படம் பார்த்தேன். 'பான்டோமைம்' போல இருந்தது! நல்லவர்கள், கெட்டவர்கள் என்ற தெளிவான பாகுபாடு; பிரமாதமான இசை- இந்தியத் திரைப்பட இசை எனக்கு மிகவும் பிடிக்கிறது. இந்தியத் திரைப்படங்கள் களிப்பூட்டுபவை...

"மரியாதை கருதி இதைச் சொல்கிறீர்களா?" என்று சற்றே அவநம்பிக்கையுடன் நாம் கேட்க, "இல்லையில்லை; மெய்யாகத்தான்- They are delightful" என்று மீண்டும் உறுதிப் படுத்தினார் பென்கிங்ஸ்லி.

-சீதாரவி

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை- 600 002.
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



பிக்சட் டிபாசிட்

46நாள்	3மாதம்	6மாதம்	ஆண்டு	2ஆண்டு	3ஆண்டு	4ஆண்டு	5ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000


சொத்துக்கள் மீது கடன்

- வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- மாத வட்டி ரூ. 1.85 மட்டுமே
- விரைந்த சேவை.
- சென்னை மாநகராட்சி இருக்க வேண்டும்.



நகைக்கடன்

- குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- R.D. கட்டத் தேவையில்லை
- எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



பென்ஷனர் நலத்திட்டம்

20%P.a ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.



சேர்மன்:
P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
ஸ்ரீகந்தக்கோட்டம்,
சென்னை–600 003.
ஆலோசகர்
பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிட்.

இயக்குநர்கள் குழு
R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

H.O. Friday Holiday | பங்குதாரர்களுக்கு மட்டும் | B.O. Tuesday Holiday

வட்டமேஜை

♦ புதிய பொருளாதாரக் கொள்கையின் நிறைகுறைகளை ஆராய்ந்து, 'அரசு செய்யும் ஆடம்பரச் செலவுகட்கு பலிகடா மக்களே' எனும் அடிப்படையிலான தலையங்கம் பொறுப்புடையோரை அவசியம் சிந்திக்க வைக்கும்.

மதுரை-16,

சீதாமகன்.

வித்தியாசமான தலைப்பு!

♦ வாரே வா! இ.ரா.விடமிருந்து மர்மத் தொடரா! தலைப்பே வித்தியாசமாக, ஆவலைத் தூண்டுவதாக இருக்கிறதே!

மு.மதிவாணன்,

அரூர்.

தெரியாதா சார்?

♦ நமது முதல்வர் பொது சொத்துக்கள் மற்றும் நிகழ்ச்சிகளை எல்லாம் தம்முடையதாக பாவிக்கும் தனித்தன்மை பெற்றவர்! எத்தனை பேர் அந்தக் காலடி தரிசனத்திற்குத் தவம் இருந்திருப்பார்கள்! என்னய்யா பெரிசா மக்கள் வரிப்பணம் என்றெல்லாம் எழுதியிருக்கிறீர்? அதெல்லாம் முதல்வருக்கு மக்கள் தரும் கப்பம்! இல்லை, இல்லை.. அன்புக் காணிக்கை! இப்படியெல்லாம் எழுதி அம்மையாரின் மனதைப் புண் படுத்தாதீர்!

திருப்பூர்,

ச. நாகரத்தினம்

படித்தேன்! அசந்தேன்!

♦ 15.1.95 இதழில் வெளியான கேள்வி-பதில் பகுதியில் ஜனநாயகம் குறித்த கேள்விக்கான விடை, ஒரு சிறந்த மேற்கோளாக அனைவரும் படித்து, மனதில் நிறுத்தி, பின்பற்ற வேண்டிய ஒன்று. படித்தவுடன் ஒரு நிமிடம் அப்படியே அசந்து சிந்திக்க வைத்து விட்டது. பாராட்டுகள்.

சென்னை-90,

ஆர். சண்முகசுந்தரம்

எதற்கு இந்த சிண்டு முடிதல்?

♦ அடுத்த பிரதமர் யார் என்ற கேள்வி எதற்கு? என்ன காரணத்திற்காக இந்த அட்டைப் படம், கட்டுரை? நீர் அர்ஜுன்சிங், வாழப்பாடி குருப்பா? நரசிம்மராவ் தலைமையில் ஆட்சி வெற்றி நடை போடுகிறது! எதற்காக இப்படி சிண்டு முடியும் வேலை செய்கிறீர்கள்?

பி.ஜி.பாளையம்,

ராஜாஸ்ரீராம்.

ஆச்சர்யம் இருக்காது!

♦ அடுத்த பிரதமர் பற்றிய கவர் ஸ்டோரி மிகவும் அருமை. பலவிதத்திலும் அலசி, ஆராய்ந்து எழுதப்பட்ட கட்டுரை. கல்கியின் அட்டையில் போட்ட முகூர்த்தம், சோனியா பிரதமராக வந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை!

சிதம்பரம் -1

ஸ்ரீவித்யா காளிதாஸ்.

அபத்த ஆணை!

♦ "அயோடின்" கலந்த உப்பை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லதா, தீயதா? என்பதில் இரு வேறு கருத்துக்கள் தீர்வு ஏற்படாமல் உலவுகின்ற வேளையில் அயோடின் உப்பைத் தான் உபயோகிக்க வேண்டும் என்று ஆணையிடுவது எப்படிப் பொருந்தும்? இதனால் சாதாரண உப்புத் தொழிலில் உள்ளவர்கள் வேலை இழக்க நேரிடுவதைப் பற்றி யோசிக்க வேண்டாமா?

சென்னை-24,

ஆர். சிவகுமார்.

வித்யாச ராஜகுமாரன்!

♦ திருமணத்துக்குக் காத்திருக்கும் முதிர் கன்னிகளின் பிரச்னைகளைப் பற்றி மட்டுமே எழுதுபவர்களுக்கு மத்தியில் சந்தர்ப்பச் சூழ்நிலை காரணமாக தாமதமாகத் திருமண வாழ்வை ஏற்கும் ஒரு ஆண்மகனின் எதிர் பார்ப்பையும், ஏக்கத்தையும் அழகாக வெளிப்படுத்தி, அவன் மீது பரிதாபப் பட வைக்கிறார் 'கனவு தேசத்து ராஜகுமாரன்' ஆசிரியர்.

நாகப்பட்டிணம்,

சந்திரா.

சூப்பர் கதை!

♦ சில்வஸ்டர் ஸ்டாலோனின் சொந்தக் கதையை ஒரு படமாக எடுத்தால் அதுவும் சக்கைப்போடு போடும் போலிருக்கிறதே! சூப்பர் ஸ்டாரின் பிறப்பும் வளர்ப்பும் செம த்ரில்லான சமாச்சாரமாக இருக்கிறதே!

மணக்காடு,

ஸ்ரீவஹிதாமேரி.

வெற்றிக்கு வாழ்த்து!

♦ பிறந்தோம், வாழ்ந்தோம் என்றில்லாமல் மக்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று எண்ணும் பிரான்ஸிஸ்பாபு, தம் பாதையில் நிச்சயம் வெற்றி காண்பார்.

சென்னை-4,

இ. சாந்துஉஸ்மானி

ஆங்கில வாழ்த்து

♦ உலக சூப்பர் ஸ்டார் சில்வஸ்டர் ஸ்டாலோனின் பூர்வீகக் கதையை வெளியிட்ட உமக்கு ஆயிரம் ஆங்கில வாழ்த்துக்கள்!

காரைக்குடி -2,

எஸ்.குமார்.

முதல் வாரம் அபாரம்!

♦ அபாயம் அறை எண் 10. ஆரம்பம் அபாரம்... டிக்...டிக்...டிக்.. என அடித்துக் கொண்டிருந்த இதயம் இக்...இக்..இக்... என துடிக்க ஆரம்பித்துவிட்டது!

கும்பகோணம்-1,

சுப்பிரியா ஹரிஹரன்.


எங்கே போனாலும் இதுவே

♦ "தலைகீழான தாலாட்டு" இரண்டு பக்க படக் கதையில் ஒரு நேரான அன்பு சீராக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது... மேல் நாட்டிலும் நம் நாட்டிலும் எங்கும் இன்று இந்நிலையைப் பார்க்கலாம்!

திருச்சி-20,

ச. நாகராஜன்

ம்ப்யூட்டர் கச்சித







'வீட்டைக் கட்டிப் பார், கல்யாணத்தைப் பண்ணிப் பார்' என்றார்கள். 'நமக்கு ஏன் தலைவலி' என்று வீடு கட்டுவதைக் காண்ட்ராக்ட் விடுவது போல, இப்போது கல்யாண காண்ட்ராக்டும் சகஜமாகி விட்டது. சில கல்யாண காண்ட்ராக்டகாரர்கள் டீவி, ரேடியோவில் இடையிடையே விளம்பரம் வருவது போல கல்யாணத்தின் போதே சுயவிளம்பரத்தில் ஈடுபடுகிறார்கள்.

'இந்தக் கல்யாண காண்ட்ராக்டை எடுத்துச் செய்வோர்...' என்று தங்கள் நிறுவன பானரைக் கட்டித் தொங்க விடுகிறார்கள். ரிசப்ஷன் கச்சேரிக்கு இடையே கலைஞர்களுக்கு மாலை போடச் செய்து, சில நிமிடங்களுக்கு மைக்கை வாங்கிப் பேசி, தங்களுக்கு 'வாய்ப்பளித்த' பெண் வீட்டாருக்கு நன்றி சொல்கிறார்கள்!

இந்த பகட்டெல்லாம் இன்றி அமைதியாகவும் ஆற்றலுடனும் கல்யாண நெருக்கடிகளைச் சமாளிப்போரும் உண்டு. அத்தகைய ஒருவர்தான் பிரபாகர்.

''ரிசப்ஷனுக்கு ரோஜா மாலையை விட சந்தன மாலை தேவலாம் இல்லையா? புடைவை பாழாகாமல் இருக்குமே?'' கல்யாணப் பெண் யோசனை கேட்கிறாள்.

இன்னொரு பக்கம் பெண்ணின் அம்மா பிரபாகரின் முன்யோசனையைப் பாராட்டுகிறார் : ''நீங்க மட்டும் சொல்லியிருக்கலைன்னா இந்த பாத்திரங்களையெல்லாம் 'பாக்' பண்ணி சம்பந்தி வீட்டுக்கு அனுப்பியிருப்பேன. கல்யாணச் சடங்குக்கு இதெல்லாம் தேவைப்படும்னு எனக்குத் தோணவேயில்லை!''

''பிரபாகரா! ராத்திரி சாப்பாட்டுக்கு நூறு பேர் கூடுதலா வருவாங்க போலிருக்கே... சமாளிச்சுடுவியா?'' - பெண்ணின் அப்பா கவலைப்படுகிறார். 'நோ பிராப்ளம்'- grand புன்னகையுடன் எல்லோருக்கும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார் பிரபாகர். இடையிடையே நமது கேள்விகளுக்கும்...

இவருடைய ஸ்ரீ சங்கரா மேரேஜ் சர்வீஸஸ் ஆரம்பமானதே ஒரு சுவையான கதை. எல்லா இளைஞர்களையும் போல் படிப்பு முடித்து, தனியார் நிறுவனமொன்றில் மாதச் சம்பளக்காரராானவர்தான் பிரபாகர். ஆர்வம் காரணமாக கேசவன் என்பவரிடம் போட்டோகிராபி கற்றுக் கொண்டார்.

''கல்யாணங்களில் போட்டோ எடுக்க ஆரம்பித்தேன். நாளாக ஆக, நிறைய வாய்ப்புகள். அடிக்கடி லீவ் போட வேண்டி வந்தது. ஆபீஸில் பிரச்னையாகி விட்டது! வேலையை ராஜினாமா செய்து விட்டேன். ஒரு கல்யாணத்தின் விதவிதமான சடங்குகளை காமெரா வழியாகப் பார்த்துப் பார்த்து, அவற்றின் வரிசைக் கிரமமும்

துடன் காண்ட்ராக்ட் கல்யாணம்!

ஒவ்வொன்றுக்கும் தேவையான பொருள்களின் பட்டியலும் எனக்குத் தலைகீழ்ப் பாடமாகி விட்டது. 'நாமே ஏன் கல்யாணங்களை நடத்தித் தரக் கூடாது?' என்ற யோசனை வந்தது. துணிந்து இறங்கி விட்டேன்..'' என்று தமது அனுபவத்தை விளக்குகிறார் பிரபாகரன்.

கடந்த ஏழு வருடங்களில் 125 கல்யாணங்களை ஸ்ரீ சங்கரா நடத்தி வைத்திருக்கிறது. ஒப்பந்தத்துக்கு அழைப்பவரிடம் 'Wedding' என்று தலைப்பிட்டு ஒரு ஃபைலைத் தந்து விடுகிறார் பிரபாகரன். அதில் வாசலில் கட்டும் வாழை மரம் தொடங்கி ரிசப்ஷனில் பாடப் போகும் வித்வான் வரை அத்தனை விஷயங்களும் அடங்கியிருக்கும். தேவையானவற்றை 'டிக்' செய்து பிரபாகரனிடம் ஃபைலைத் திருப்பித் தர வேண்டும். தேர்வுகளுக்கு ஏற்ப பிரபாகரன் பட்ஜெட் போட்டுத் தந்து அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு களத்தில் இறங்குவார். கல்யாண மண்டபத்துக்குப் போகும் பெண் வீட்டார் ஒரு கவலையின்றிப் போகலாம். வானிலையைத் தவிர மற்ற எல்லாம்தான் பிரபாகரனின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதே!

அப்படியும் பிரச்னைகள் முளைத்திருக்கின்றன. பிரபாகரன் சமாளித்திருக்கிறார். ராஜீவ் காந்தி மரணமடைந்த அன்று ஒரு கல்யாணம். ''நீ நடத்தி வைக்கத் தயாராயிருந்தா நாங்க 'ரெடி' பிரபு'' என்று சொல்லி விட்டார் பெண்ணின் தந்தை.

''இரண்டு பால் பூத்களில் தெரிந்தவர்கள் மூலமாக 150 லிட்டர் பால் வாங்கி, உறவினர் நண்பர்கள் வீட்டு ஃப்ரிஜ்ஜில் வைத்தேன். காய்கறி, பூ, நேராகத் தோட்டத்திலிருந்து வந்தன. பாயசம், தயிர் தயாரிக்க பவுடர் பால் கைகொடுத்தது. நாதஸ்வர வித்வானை சமையல்கட்டுப் பக்கமாக அமரச் செய்து 'அடக்கி' வாசிக்க வேண்டிக் கொண்டேன். எப்பேற்பட்ட தடங்கல் வந்தாலும் பதறாமல் இருந்தால் சமாளித்து விடலாம் என்பதை அந்தக் கல்யாணம் உணர்த்தியது'' என்று கூறும் பிரபாகர் பழைய நினைவு ஏற்படுத்திய புன்னகையுடன் சொல்கிறார் : ''மாப்பிள்ளை மோபெட்டில் வந்து இறங்கிய முதல் கல்யாணம் அதுவாகத்தான் இருக்கும்!''

பத்து நாள் கல்யாணம் நடத்தி வைத்த (கின்னஸ்) சாதனையும் புரிந்திருக்கிறார் பிரபாகரன்.

''சிங்கப்பூரிலிருந்து ஒரு பார்ட்டி. மாப்பிள்ளை வீட்டார். பத்து நாட்கள் முன்னதாகவே சென்னை வந்து விட்டார்கள். அவர்களுக்கு தினமும் விருந்துபசாரம் செய்ததுடன் ஒவ்வொரு மாலையும் மாஜிக் ஷோ, பாட்டு, நடனம் என்று விதவிதமான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்து அமர்க்களப்படுத்தி விட்டோம்!''

கல்யாண வீடுகளில் சண்டை வலிக்க வென்றே சில 'பார்ட்டிகள்' வருவார்களே...?

''ஓ! அவங்களையும் சமாளிச்சிருக்கேன்.''

'' 'இருபத்தஞ்சு வருஷமா ஆர்மியில இருந்தவன் நான். கல்யாணத்துல ஏதாவது 'மிஸ்டேக்' வந்தா உன்னை உத்தரத்தில் கட்டித் தொங்க விட்டுடுவேன்' என்று மிரட்டிய லெஃப்டினன்ட் கர்னலைச் சொல்றதா? நிச்சயதார்த்தத்தன்று புரமோஷன் வந்ததால், 'கூடுதலாக வரதட்சணை தந்தால்தான் தாலி கட்டுவேன்' என்று அடம்பிடித்த மாப்பிள்ளையைச் சொல்றதா? வேறொரு கல்யாணத்தில் பயமும் டென்ஷனும் தாங்காமல் மயங்கி விழுந்த கல்யாணப் பொண்ணைச் சொல்றதா...?''



• பிரபாகரன்

எந்த இக்கட்டிலும் முதலில் உதவிக்கு அழைக்கப்படுபவர் ஒப்பந்தம் போட்டுக் கொண்ட கான்ட்ராக்டர்தான். கையெழுத்துக்கும் காசுக்கும் அப்பாற்பட்ட மனித நேயம்தான் அந்தக் கட்டங்களில் சுறுசுறுப்படைகிறது. கருத்துடன் சமைத்தும் விருந்தினர் எண்ணிக்கைக் கணக்கு பிசகுவதால் மீந்து போகும் உணவை உதவும் கரங்களுக்கு அனுப்புகிறார் பிரபாகரன். போன் செய்தால் அவர்களே வண்டி அனுப்பி எடுத்துப் போகிறார்கள்.

சில கான்டிராக்டர்களைப் போல் ஒரே முகூர்த்தத்தில் நான்கைந்து கல்யாணங்கள் நடத்தி வைக்க ஒப்பந்தம் போட்டுக் கொண்டு சப்-கான்ட்ராக்ட் விடும் சமாசாரமெல்லாம் பிரபாகரனிடம் கிடையாது. ஒவ்வொன்றையும் தாமே முன்னின்று கவனித்தாக வேண்டும் என்பதில் பிடிவாதக்காரர்.

கல்யாணங்கள் நடத்துவது பற்றி ஒரு ஸாஃப்ட் வேர் எழுத வேண்டுமென்றால் பிரபாகரனை அணுகி உதவி கேட்கலாம்!

-நிர்மலா சக்கரவர்த்தி

நீங்கள் கேட்டவை - தராசு

● மு. ரவிசந்திரன், சேலம்.

? "ஜெ.வின் பொற்கால ஆட்சியில்தான் தமிழகம் பாதுகாப்பாக இருக்கிறது" என்று செல்வகணபதி கூறியிருப்பது குறித்து?

! மோட்டார் சைக்கிளிலும் ஆட்டோவி லும் வந்து கொண்டிருந்த கொள்ளையர், பிரமோஷன் பெற்று இன்று அம்பாஸிட ரிலே வருகிறார்கள் என்றாலும் ஒரு கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்ட போலீஸ் மாருதி ஜீப்புகள் இன்னும் பறிபோகாமல் பத்திர மாகத்தானே இருக்கின்றன என்பதால் சொல்லியிருப்பார்!

● டி. சந்திரன், ஈரோடு.

? நெல்லை மாவட்டம் பிளஸ் டூ தமிழ் வினாத்தாளில் பிரேமானந்தா பற்றி எழு தக் கேட்கப்பட்டுள்ளதே? இது என்ன கொடுமை?

! இதனினும் கொடுமை மாறுவேடப் போட் டியில் குழந்தைகளுக்குக் கூட பிரேமானந்தா வேடம் போட்டு பரிசும் பெறுவது; அதனி னும் கொடுமை பிரேமானந்தாவையே மேலும் மேலும் பத்திரிகைகள் விதம் வித மான செய்தியாக்கி காசு பண்ணுவது.

● இரா. சம்பத்குமார், ராசிபுரம்.

? "பிரதமர் பதவி இனி போயஸ் தோட் டத்தில்தான் நியமனமாகும்" என்று கே.ஏ.கே. பேசியுள்ளாரே?

! அப்புறம் எதற்கு ஜனநாயகம், தேர்தல், என்றெல்லாம் நாடகங்கள்? 'ஜெயின் சர் வாதிகார ஆட்சி' என்றே சொல்லி விட லாமே?

● பாரதி முருகன், மணலூர்பேட்டை.

? ராக்கெட் ரகசியம் கடத்தல் விஷயம் என்னாச்சு?

! கைதானவர்கள் எல்லாம் ஜெட் வேகத் தில் பெய்லில் வெளியே வந்ததோடு சரி. கவுண்ட் டவுன் ஆரம்பிக்கவேயில்லை.

● ரஞ்சனி பிரியன், பள்ளிபாளையம்.

? தமிழ்நாட்டின் திட்ட ஒதுக்கீடு பதி னாறு சதம் அதிகரிக்கப்பட்டுள்ளதே?

! ஆளும் கட்சி ஆசாமிகளின் வருவாய் பதி னாறு சதம் அதிகரிக்கும். சஃபயர் காம்ப் ளெக்ஸில் புதிய கட்டடம் எழும்ப வேண் டாமா?

● ஏ. எஸ். குமார், சூலூர்.


? "புலிகள் தனிநாடு கோரிக்கையை விட்டு விடுவார்கள்" என்று பாலசிங்கம் கூறியுள்ளது?

! இது மட்டுமா? வன்முறையை விட்டு விடு வார்கள்; ஜனநாய கத்தை ஏற்பார்கள் என்றெல்லாம் இதை விடவும் அதிகமா கவே எதிர்பார்த்து நம்பிக்கையோடு செயல்படுகிறார் சந் திரிகா. காரணம் போர் அனைத்து தரப்பினருக்கும் அலுத்து விட்டது என்பதே. பாலஸ் தீனத்தில் ஒரு உடன் பாடு ஏற்பட முடியு மென்றால் இங்கு ஏன் முடியாது? பார்ப்போம்.

● ந. பழனிசாமி, கோவை.

? நூல் விலை உயர்வு குறித்து கைத்தறி, விசைத் தறி ஊழியர்கள் பல போராட்டங் கள் நடத்தியும் பய னில்லையே?

! நூல் விலை உயர் வுக்குக் காரணம் பருத்தி விலை உயர்வு என் பதுதான். பருத்தி விலை உயர்வுக்குக் கார ணம் ஏற்றுமதி. ஏற்றுமதிக்குக் காரணம் திறந்த கதவுகள் கொள்கை. உள்நாட்டில் தொழில் நசிந்து தொழிலாளர் அவதிப் படும் அளவுக்கு ஏற்றுமதியை அனு மதிக்க வேண்டிய தில்லை.



• பிரதமர் நியமனம்!

• ஆதிமுக. உறவுக்காக....

• சம்பளம் ரூ. 2000

தமிழக கவர்னர் நிலையில் நீங்கள் இருந்தால்..?



• நடவடிக்கை என்ன?



• எதிர்பார்ப்பு....



• ....நம்பிக்கை

● சுகுமார், காட்டுக்காஹூர்.

? ரூ. 2000 சம்பளத்தில் தனக்குத் தனி உதவியாளராக தனது மனைவியையே என்.டி..ஆர். நியமித்துள்ளது பற்றி?

! மனைவிக்கு உத்யோகமா என்றால் கிளிண்டனை முன்னுதாரணம் காட்டக் கூடும். ஆனால் ஒன்று - இப்போதைய விலைவாசிக்கு ரூ. 2000 சம்பளம் ரொம்பக் குறைவு. கிம்பளத்துக்கே அடிகோலும்!

● எல். கோபாலகிருஷ்ணன், அரக்கோணம்.

? அ.தி.மு.க. உறவுக்காக நரசிம்மராவ் இன்னும் என்னவெல்லாம் செய்யப் போகிறார்?

! அவருக்கு காவி உடைகளிடம் ரொம்ப மரியாதை. கருமாரி அம்மன் உடை அலங்காரத்துக்குப் பதில் சாமியாரிணி வேஷத்தில் ஜெ. தோன்றினால் காலிலேயே விழுந்து விடுவார்!

● எம். அசோக் ராஜா, திருச்சி.

? ஜப்பானிய பூகம்பம் பற்றி...?

! வியப்பு - பூகம்பம் ஏற்படக்கூடிய நிலப்பரப்பு என்பது தெரிந்திருப்பதால் ஜப்பானியர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காக பல கோடி 'யென்'களை ஆண்டு தோறும் செலவழித்திருக்கிறார்கள். ஆயினும் இயற்கையின் சீற்றத்துக்கு எதிரே அவையொன்றும் பயன்படவில்லை! ஆயிரத்தில் ஆரம்பித்து ஐயாயிரமாக உயர்ந்துள்ள உயிர்ச் சேதம் நெஞ்சைப் பிழிகிறது என்றாலும் கூடவே ஒரு பிரமிப்பு! ஜப்பானியர் இந்தப் பேரழிவையும் எப்படி இயல்பாக எடுத்துக் கொண்டு, நிவாரணப் பணிகளிலும் புனர் நிர்மாணப் பணிகளிலும் இறங்கி, சகஜ வாழ்வுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். அவர்களின் மனப்பக்குவமும் உடலுழைப்பும் உலகில் வேறு எங்கும் காண முடியாதவை. தேனீக்கள்.

● நாகை சந்திரா, நாகப்பட்டினம். ❑

? ஆந்திர மாநிலத்தில் பூரண மதுவிலக்கு வந்தது தமிழக ஆட்சியாளரின் கவனத்தைக் கவருமா?

! நிச்சயமாக. இங்கிருந்து அங்கே கள்ளச் சாராயம் அனுப்புகிறவர்களை சும்மா விடுவார்களா? வாங்கு வாங்கு என்று வாங்கி விடுவார்கள்!

● எல். மீனாட்சி சுந்தரம், மதுரை.

? தமிழக கவர்னர் நிலையில் நீங்கள் இருந்தால் தற்போதைய நடவடிக்கை என்னங்க?

! பிரதமர் அடக்கி வாசிக்கச் சொன்னார் என்பதற்காகக் காரியம் செய்யாமல், ஆளுனர் கட்சி சார்பற்றவர் என்பதை மறவாமல், ஆவணங்களை ஆராய்ந்து மனச்சாட்சிக்கு விரோதமின்றி நடந்து கொள்வேன்.

● வீ. அருண் செல்லரசு, கீரமங்கலம்.

? விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தால் அரசுக்கு நாற்பது கோடி இழப்பு ஏற்படுகிறதாமே? இது தேவை தானா?

! இதைத்தான் ம.மோ. சிங் கேட்கிறார். ஆனால் வோட்டு வேட்டையாடும் அரசியல் வாதிகள் அவர் பேச்சைக் கேட்பதில்லையே?

● பாலசுப்பிரமணியன், செங்குன்றம்.

? இந்த வருஷம் குடியரசு தின விழா எப்படி?

! தமிழ் விழாவின் போது ஆளுனர் அந்தமான் போனதற்குப் போட்டியாக குடியரசு தினம் மாலை அவரது விருந்துபசாரத்தைப் புறக்கணித்து ஜெ. ஹைதராபாத் செல்ல உத்தேசித்திருப்பது அருவருப்பு அரசியல். ஹுப்ளியில் அஞ்சுமன் இஸ்லாம் அமைப்பு, ஈத்கா மைதானத்தில் தேசியக் கொடி ஏற்ற முடிவு செய்தது ஆரோக்கிய அரசியல். எம்மதத்தவருக்கும் தேசியம் என்பது பொது என்று நிருபித்து பி.ஜே.பி.யின் விஷமம் செல்லுபடியாகாமல் செய்து விட்டது. புதிய ஜனதாதள அரசின் முக்கியமான முதல் வெற்றி.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
நாகை சந்திரா,
88, பெருமாள் தெற்கு வீதி,
நாகப்பட்டினம் - 611 001.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

KALPATHARU

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி வீதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *



குபேரன் வைப்பு திட்டம்

வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்.
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்

அமுத சுரபி டிபாசிட் திட்டம்



டிபாசிட் தொகை	காலம்	கிடைக்கும் தொகை
ரூ. 5,600	15 வருடம்	ரூ. 1,00,000
ரூ. 7,000		ரூ. 1,25,000

கல்பதரு மணிபேக் திட்டம்



அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டிவீதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	20%
ரூ. 10,000 கீழ்		19%

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்



கடன்	நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்	வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka